வெளியீடு எண் 255.

உ

சிவமயம்

# திருவேரகயமகவந்தாதி

## மூலமும் - உரையும்

O-,12,T
N70
162997

ாவடுதுறை ஆதீனம்

1970

உ

சிவமயம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள்

மூன்றாவது

# குருபூஜைவிழா மலர்

சாதாரண — புரட்டாசி — பரணி

1970

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

வெளியீடு எண் 255.

உ
சிவமயம்

# திருவேரகயமகவந்தாதி

## மூலமும் உரையும்

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்
1970

உ

## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



ஸ்ரீ சண்முகர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

"உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே."

— கந்தரனுபூதி.

செந்தண்டமிழ் மொழியிலுள்ள தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் அந்தாதியும் ஒன்றும். அது முதற் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சொல், சீர், அடி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று அடுத்த செய்யுளின் முதலில் அமையவும், நூலின் இறுதிச்செய்யுளில் உள்ளது முதற்பாட்டின் முதலாக அமையவும் பாடப்படுவது. அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது; அன்மொழித் தொகை: வட மொழித்தொடர், தீர்க்கசந்தி. அவ்வாறு நூலின் இறுதிச் செய்யுளின் இறுதி உறுப்பும் முதற் செய்யுளின் முதலுறுப்பும் அமைய வைத்தலே மண்டலித்தல் என்பர்.

இவ்வந்தாதி யாப்புவகையால் பலவாகும். அவை வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி முதலியனவாம். அவற்றுள், திரிபாகவும்

யமகமாகவும் அமைந்தவை முறையே திரிபந்தாதி, யமகவந்தாதி என வழங்கப்படும். திரிபைத் திருகல் என்றும், திருக்கு என்றும் கூறுவர். திரிபும் யமக மும் ஒரே அந்தாதியில் கலந்து வருதலும் உண்டு. இவ்வகை நூல்கள் சொற்றொடர் நிலைச் செய்யுளின் பாற்படும்.

படிப்பவர்களுக்குச் சொற்றொடரைப் பிரிக்கும் முறை, ஒரு சொல்லின் பல பொருள்கள், பழைய வரலாறு முதலியவற்றை எளிதில் அறிந்துகொள்ள வும், ஞாபகசக்தியை அதிகப்படுத்தவும் தக்க கருவி களாக இருத்தலின், பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் பயின்றுவரும் மாணாக்கர்களுக்குப் பள்ளிக்கூடத்திலே இவ்வந்தாதி நூல்கள் ஆரம்பத் தில் கருவி நூல்களாகக் கற்பிக்கப்பெற்று வந்தன. திரிபு வகையில்புகலூரந்தாதி,திருவேங்கடத்தந்தாதி முதலியவைகளும்; யமகத்தில் திருவரங்கத்தந்தாதி முதலியனவும் தமிழ் மாணாக்கர்களால் அங்ஙனம் தொன்றுதொட்டுப் பயிலப்பட்டு வருகின்றன. பழ மலைத் திரிபந்தாதி, மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி முதலிய பல அந்தாதிகளும் கற்பிக்கப்படும்.

பழமலையந்தாதியைத் துறைமங்கலம் கவி சார்வ பௌம ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகளும், மருதூரந்தாதி யைத் தலைமலைகண்டதேவரும், தில்லை யமகவந்தாதி துறைசை யமகவந்தாதிகளை மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் இயற்றியுள்ளனர்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் மாயூரத்தில் நிலையாக (1860.ஆம் ஆண்டு) இருக்கத்தொடங்கிய

போது இவர்பால் பலர் பாடங்கேட்டு வந்தனர். மாயூரத்தில் அப்போதிருந்த வித்துவான்கள், 1. தர்ம தானபுரம் கண்ணுவையர், 2. மாயூரம் பட்டமங்கலம் சபாபதி ஐயர், 3. கூறைநாட்டுச் சாமிநாதவாத்தியார் முதலியோர்; இவர் சாமிநாதையர் என்றும் சாமிநாத வாத்தியார் என்றும் கூறப்படுவர்; வீரசைவர். இவர் திருவேரக யமகவந்தாதி இயற்றிய கபிஸ்தலம் - வேலையருடைய மாப்பிள்ளையாவார். நல்ல வித்து வான். கூறைநாட்டுத் தெற்குவீதியில் இவர் வசித் திருந்தார். மகாவித்துவான் பிள்ளையவர்கள் முன் னிலையிலே பரிசோதித்து, சென்னை ஏஷியாடிக் அச் சுக்கூடத்தில் இவ்வந்தாதியின் மூலபாடம் மட்டும் (1869) சுக்கில ஆவணி-மீ இவரால் அச்சிற் பதிக்கப் பட்டது.

மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் 1871 - ஏப்ரல் மாதம் ( பிரஜோற்பத்தி - சித்திரை ) மாயூரத்திலே பிள்ளையவர்களிடம் மாணுக்கராகக் கல்வி பயிலத் தொடங்கினர். பிரபந்த வரிசையில் இந்த யமகவந் தாதியையும் பிள்ளையவர்களிடம் ஐயரவர்கள் பாடங் கேட்டதாக அவர்கள் வரலாற்றால் நாம் அறி கின்றோம்.

முருகக்கடவுளுக்கும் ஆறு என்னும் எண்ணிற்கும் பொருத்தமுண்டு. அவரெழுந்தருளிய தலங்களாறு, அவர் திருமுகம் ஆறு, அவர் திருமந்திரம் ஆறு எழுத் துக்கள். "ஆறுதிருப்பதிகண் டாறெழுத்தும் அன்பி னுடன் — கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே" என்றருளினர் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள். முருக வேளது ஊர் அவர் கோயில்கொண்டெழுந்தருளி

யிருக்கும் தலங்களாம். அத்தலங்களுள் சிறந்தன வாகப் பரங்குன்று, திருச்சீரலைவாய், ஆவிநன்குடி, ஏரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை முதலி யனவே நக்கீரதேவரால் திருமுருகாற்றுப்படையில் எடுத்துக்கூறப்பட்டன. அருணகிரிநாதசுவாமிகளும் ''சகலமுமுத லாகிய அறுபதிநிலை மேவிய தடமயில் தனி லேறிய – பெருமாளே'' எனவும், ''ஆறுதிருப் பதியில்வளர்-பெருமாளே'' எனவும் கூறியுள்ளமை காண்க. எல்லாத் திருப்பதிகளையும் எடுத்துக்கூற இயலாது. கூறப்பட்ட திருப்பதிகள் ஆருயினும் மற்றத் திருப்பதிகளையும் குன்றுதோருடல் என்று கூறியதால் தழுவிக்கொண்டார். அவ்வாறு நக்கீரர் பல தலங்களைக் குறித்து அவற்றைக் குன்றுதோரு டலில் அடக்கிக் குன்றுதோருடலுடன் தலங்கள் ஆறு எனக்கொண்டார் என்பதே பொருந்துவதாம்.

திருமுருகாற்றுப்படை வைப்புமுறையில் திருப் பரங்குன்றம் மருதநிலம்; திருச்சீரலைவாய் நெய்தல் நிலம்; திருஆவினன்குடி முல்லைநிலம்; பழமுதிர்சோலை மலை குறிஞ்சிநிலம்; இவைபாண்டியநாட்டில் உள்ளன. நால்வகை நிலத்திற்கும் நான்கு தலங்கள் பாண்டி நாட்டிற் கூறிய ஆசிரியர் சோழநாட்டிலே மருத நிலத்து 'ஏரகம்' என்னும் ஒரு தலத்தையே குறித் தார். எல்லா நாட்டு எல்லா நிலங்களையும் 'குன்று தோருடல்' என்பதால் தழுவிக்கொண்டமை குறிப் பிடத்தக்க தொன்ரும்.

திருப்பரங்குன்றத்தை முதலில் கூறிப் பழமுதிர் சோலையை இறுதியிற் கூறினர்; அதற்குக் காரண மும் இருத்தல் வேண்டுமே. அக்காரணம், திருப்பரங்

குன்றம் முருகவேளுக்கும் சிவபெருமானுக்கும் பொதுவானது. பாண்டிபதினான்கில் பரங்குன்றமும் ஒன்றும். பழமுதிர் சோலை என்பது திருமால் நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய திருமாலிருஞ் சோலைமலையாகும். சோலைமலை திருமாலுக்கு எவ்வளவு உரிமையுள்ளதென்று பாராட்டப் பெறுகின்றதோ அதிற் சிறிதும்குறைந்ததன்று முருகவேளுக்கும் அக்காலத்தில் உள்ள உரிமை. இம்மலை முருகவேளுக்கும் உரியதென்னும்படி "சேயோங்குதண் திருமாலிருஞ்சோலைம் மலை" என்னும் திருமங்கையாழ்வார் பாசுரம் காணப்படும். பெரிய வாச்சான்பிள்ளை "சேய் என்று க்ஷேத்ர பாலகனுக்குப் பெயராய் அவன் அவ்விடத்துக் காவலாகச் சொல்லிப் போருவதொன்றுண்டு" என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். சேய் என்பது முருகவேளுக்குப் பெயரேயன்றி க்ஷேத்திரபாலகருக்கன்று. மற்றும், "பஞ்சவர்தம் பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணொருவன், பங்கங் களைந்தான் பதி" என்பது அழகர் கலம்பகச் செய்யுட்பகுதி. அம்மலை இதனாலும் முருகக்கடவுளுக்கு உரிமையுடையதென அறிக. அருணகிரிநாத சுவாமிகள் முதலியவர்களும் சோலைமலையை முருகவேளுக்கு உரியதாகவே கூறியிருக்கிறார்கள். எனவே, பரங்குன்று சிவபெருமானுடைய சம்பந்தம் பெற்று முருகக்கடவுளுக்கு உரியதாயவாறு போலவே, இதுதிருமால் சம்பந்தம்பெற்று முருகவேளுக்குரியதாயிற்று எனக்கொள்ளுதல் சிறப்பாகும், அதனாலேயே நக்கீரர் பழமுதிர்சோலையை இறுதியில் வைத்தார் என்க.

இனி, நான்காவதாகக் கூறப்பட்ட ஏரகத்தில் அந்தணர் தன்மையும், பிரமசரியவிரதமும் அதனைக்

காக்கவேண்டிய எல்லையும், அந்தணர் குமரக்கடவுளை வழிபடுமுறையும், வழிபடும் பொழுதும், நாப்புடை பெயரும் அளவில் உச்சரிக்கும் மந்திரமும் கூறப் பட்டுள்ளன. திருமுருகாற்றுப் படைக்கு உரை வரைந்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் "ஏரகம் - மலைநாட்டகத்தொரு திருப்பதி" என்றார்.

திருப்புகழ்பாடிய ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் சுவாமிமலையைப்பற்றி 39 பாடல்கள் அருளிச்செய் திருக்கிறார்கள். அவற்றுள், " திருவேரகத்திலுறை பெருமாளே"; "ஏரகவெற்பெனு மற்புதமிக்க சுவாமி மலைப்பதி ... ... ... ... பெருமாளே"; " தனியேர கத்தில் முருகோனே, தருகா விரிக்கு வடபாரி சத் தொர் சமர்வேலெ டுத்த பெருமாளே"; "குடகா விரிக்கு வடபாலார், திருவே ரகத்தி லுறைவாய்" "சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேரும் சுவாமி மலை வாழும் பெருமாளே"; "சுராபதி மாலயனு மாலொடு சலாமிடு சுவாமிமலை வாழும் பெருமாளே"; "வளைகுல மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி மலை மிசை விளங்கு தேவர் பெருமாளே"; "வகைவகையெ ழுந்து சாம வதிமறைவி யந்து பாட மதிநிழலி டுஞ்சு வாமி மலைவாழ்வே"; "அழகதிரு வேரகத்தின் முரு கோனே"; யாவுமலை கொண்டு கைத்த காவிரிபு றம்பு சுற்றும் ஏரகம மர்ந்த பச்சை மயில்வீரா"; "காவேரி நேர்வ டக்கி லேவாவி பூம ணத்த காவார்சு வாமி வெற்பின் முருகோனே"; "விழைசு வாமி வெற்பின் உறைவோனே"; "அடவி சூத வனநெ ருங்கி வளர்சு வாமி மலைய மர்ந்த பெருமாளே": "சாலி, யேமி குத்து யர்ந்த மாவ யற்கள் மிஞ்சும் ஏர கத்த மர்ந்த பெருமாளே"; " அழகியசு வாமி மலையில

மர்ந்தருள் பெருமாளே''; ''ஒளிவளர் திருவேரகமே உகந்து நிற்கும் முருகோனே''; ''சூத மிகவளர் சோலை மருவுசு வாமி மலைதனில் உறைவோனே''; ''சூளிகையு யர்ந்த கோபுர மாளிகைபொ னிஞ்சி சூழ்தரு ஸ்வாமிமலை நின்று லாவிய பெருமாளே''; ''காவேரி யாற்றுக் குளேவரு வளமைச் சோழநன் னாட்டுக்கு ளேரக நகரிற் சீர்பெறு மோட்சத்தையே தரு பெருமாளே'' என்பன காண்க.

அருணகிரிநாத சுவாமிகள் திருவெழு கூற்றிருக்கை என்ற பாடலொன்று பாடியிருக்கிறார். அது 27 வரிகளையுடையது; ''காவிரி வடகரை மேவிய குருகிரி......ஏரகத்திறைவன்'' என்று அதில் சுவாமி மலையைக் குறிப்பிடுகிறார்.

இதுவரையில் கூறிய திருப்புகழ்ப் பகுதிகளால் சோழ நாட்டிலே ஏரகமே சுவாமிமலை யெனவும், அது காவிரியின் வடகரையில் உள்ளதெனவும் நமக்கு நன்கு விளங்குகின்றது. சுவாமிமலை, சாமிமலை, குருமலை, குருகிரி என்று வழங்குதலும் திருப்புகழில் காணலாம். சுவாமி, சாமி என்பன முருகற்குப்பெயர். சுவாமிமலையை அடுத்துள்ள கிராமம் ஒன்று இன்றும் 'ஏரகரம்' என்று வழங்கப்படுகின்றது. ஏர் என்பது வைப்புத்தலமாம். அகரம் - அக்கிரகாரம்; ஏர் என்னும் தலத்தைச்சார்ந்த அக்கிரகாரம் அது எனப் பொருள்படும்.

ஏர் என்னும் வைப்புத்தலத்தை, ''இடைமருதீங்கோய் இராமேச் சுரமின்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர், சடைமுடி சாலைக் குடிதக்களூர் தலையாலங்

காடு தலைச்சங்காடு, கொடுமுடி குற்றாலம் கொள்ளம் பூதூர் கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு, கடைமுடி கானூர் கடம்பந்துறை கயிலாய நாதனையே காணலாமே'' என்னும் க்ஷேத்திரக்கோவைத் (3) திருத்தாண்டகத்தாலும்; "பெரும்புலியூர் விரும் பினார் பெரும்பா ழிய்யார் பெரும்பற்றப் புலியூர் மூலட்டானத்தார், இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார் இன்னம்ப ரார்ஈங்கோய் மலையார் இன்சொற், கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார் கருப் பறிய லூரரார் கரவீரத்தார், விரும்பமரர் இரவு பகல் பரவி யேத்த வீழிமிழலையே மேவி னாரே.'' என்னும் திருவீழிமிழலைத் (6) திருத்தாண்டகத்தாலும் திரு நாவுக்கரசு சுவாமி தேவாரத்தில் போற்றியருளினர்.

* "இனி, ஏர் என்னும் வைப்புத்தலம், 'இன்னம்பர் நாட்டு ஏராகிய மும்முடிச்சோழ மங்கலம்' என்று கல் வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது. இதனால் ஏர் என்னும்தலம் இன்னம்பர் நாட்டில் உள்ளது எனவும், பழங்காலத்தில் இவ்வூர் ஏர் என்னும் பெய ரால் விளங்கியது எனவும், மும்முடிச் சோழமங்கலம் என்னும் பெயரும் இதற்குண்டு எனவும் அறிகிறோம். இன்னம்பர் நாடு, பண்டைக்காலத்தில் சோழமண்ட லத்தில் காவிரிக்கு வடகரையில் இருந்தபலநாடுகளில் ஒன்றாம்; இஃது இன்னம்பரைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது. கும்பகோணம் தாலுக்காவில் உள்ள கொட்டையூர், மேலக்காவேரி, கருப்பூர்,

* கல்வெட்டுப் பேரறிஞர் திரு. சதாசிவப்பண்டாரத்தார் குறிப்பில் உள்ளது.

அசுகூர், ஏரகம் முதலிய ஊர்களையும்; பாவநாசம் தாலுக்காவில் உள்ள ஆதனூர், மருத்துவக்குடி முதலிய ஊர்களையும் தன்னகத்துக்கொண்டது. ஏர் என்னும் தலம் இன்னம்பர் என்னும் தலத்துக்கு அருகிலுள்ளது. ஏர் என்னும் வைப்புத்தலத்துக் கோயிலின் கருக்கிரகத்தின் தென்புறத்திலே மண்ணிற் புதையுண்டிருந்த கல்வெட்டைத் தோண்டிப் பார்த்தபோது அது கி. பி. 1120 — 1136 ஆண்டு வரையில் சோழநாட்டை ஆட்சிபுரிந்த விக்ரமசோழன் காலத்துக் கல்வெட்டாக இருந்தது.''

இனி, முதல் இராசராசசோழனல் எடுப்பிக்கப் பெற்ற தஞ்சை இராசராசேச்சுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஏர் என்னும் தலம் இன்னம்பர் நாட்டில் உள்ளது என அறிவிக்கிறது. அக்கல்வெட்டு, ''ராஜேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டுப் பழைய வானவன்மகாதேவி சதுர்வேதிமங்கலத்துச் சபையார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும் (எ௰) இந்நாட்டு அசுகூர் சபையார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும் (எஉ) இந்நாட்டு ஏராகிய மும்முடிச்சோழமங்கலத்தார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும் (எரு) இந்நாட்டு ஸ்ரீ சதுர்வேதிமங்கலத்துச் சபையார் இடக்கடவ திருமெய்க்காப்பு இரண்டு'' (South Indian Inscription Vol. II No. 77...) என்பதாம். தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள இந்தக் கல்வெட்டும், ஏரகரத்துக் கோயிலில் காணப்படும் கல்வெட்டும் ஒற்றுமையுடையனவாய் 'இன்னம்பர் நாட்டு ஏர்' என்பதை வலியுறுத்துகின்றன.

'ஏரகம்' என்பது ஏர் என்னும் தலத்தைத் தன்னகத்துக் கொண்டது என்றேனும், ஏர் என்னும் தலத்துக்குட்பட்டது என்றேனும் பொருள்கொள்க.

'திருவேரக யமகவந்தாதி' என்பது திருவேரகத்தைப்பற்றிய யமக வந்தாதி எனவிரியும்; இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்கதொகை. திருவேரகத்தினது சம்பந்தமான அந்தாதி என விரித்து ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளலாம்.

திருவேரக யமகவந்தாதியின் அச்சிட்ட பிரதியொன்று கும்பகோணம் சாது சேஷையா லைபரெரியிலிருந்து 28-4-69ல் கிடைத்தது. அதனைப் பிரதி செய்வித்தேன். பிரதி செய்வதற்குள் அந்த அச்சுப் பிரதி உருத்தெரியாமல் தூளாயிற்று. அப்பிரதி பதிக்கப்பட்ட காலம் 1869-ம் ஆண்டு ஆகும். இதனை அச்சிட்டவர் நூலாசிரியரின் மாப்பிள்ளை கூறைநாட்டுச் சாமிநாதையர் என்பவர். நூலாசிரியர் கபிஸ்தலம் வேலையர். இவர் சிவப்பிரகாசையரின் புதல்வர்; வீரசைவர். இவரிடம் கல்விபயின்றவர் தாண்டவராய பிள்ளை; இவருடைய மூத்தகுமாரர் சிவப்பிரகாச வாத்தியார். இவர் 60 வயது வரையில் வாழ்ந்திருந்தார்; சிவப்பிரகாச வாத்தியார் கபிஸ்தலத்தைச் சார்ந்த இராமானுசபுரம் என்னும் ஊரினர். இவர் கல்விமான். பட்டீச்சுரம் வந்திருந்து பிள்ளையவர்கள்பால் பாடங் கேட்டார்; தாம் முன்னமே செய்துவைத்திருந்த திரு ஆவூர்த்திரிபந்தாதியைத் திருத்தம் செய்துகொண்டார்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள்பால் பாடங் கேட்டவர் சிவப்பிரகாசவாத்தியார் புதல்வர் சிவலிங்க வாத்தியார் என்பவருமாம். சிவலிங்கவாத்தியார் மாயூரத்திலிருந்துகொண்டு பாடங்கேட்டார். இசையோடு படித்துக்காட்டும் வன்மையுடையவர். இவர் மாணவர் உமையாள்புரம் சாமிநாதபிள்ளை; கவியியற்றும் வன்மையுடையவர்; சாமிநாதசாமி வண்ணப்பா செய்திருக்கிறார். வேலையர் 74 வயதுவரை வாழ்ந்தவர். இவர் இந்த யமகவந்தாதியை யன்றிப் பழுவூர்ப்புராணம், திருவைகாவூர்ப் புராணம், யோகவனம் சிவபெருமான் மீது மும்மணிக்கோவை, கழிநெடில், அம்மையார் மீது மாலை முதலியவற்றையும் பாடியிருக்கிறார் என்று சிறப்புப்பாயிரங் கூறும். இந்த யமகவந்தாதி பிள்ளையவர்களால் பாடஞ் சொல்லப்பட்டதாகலின், அவர்கள் முன்னிலையில் பரிசோதித்து அச்சிடப்பட்ட நூலை அச்சிடும் முறையில் ஒருரை எழுதி ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் விண்ணப்பம் செய்து கொண்டேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் அவ்வுரையைத் திருக்கண்ணோக்கம் செய்தருளிப் 'புரட்டாசிப் பரணிநட்சத்திரம், 21 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் குருபூசை நாளிலே வெளியிடுக' எனக் கட்டளையிட்டருளியது.

இந்நூலில் 80 பாடல்கள் வரையில் உரைப்பகுதிகள் அச்சிட்டு முடிந்தபின்பு இந்நூலின் உரைப்பிரதியொன்று ஆதீன சரசுவதிமகால் நூல்நிலையத்தில் கிடைத்தது. அதனை ஒருவாறு பார்த்தேன். ஆயினும், முன்பு யான் எழுதி முடித்த உரையையே தொடர்ந்து அச்சிட்டு முடித்தேன். அரிதிற்கிடைத்த அவ்வுரை யாழ்ப்பாணத்து ஸ்ரீ ஆறுமுகநாவலர்

அவர்கள் மாணுக்கருள் ஒருவராகிய சிதம்பரம் பே. இராமலிங்க உபாத்தியாயரால் இயற்றப்பட்டுச் சென்னபட்டணம் சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையில் கி. பி. 1912 (பரிதாபி-கார்த்திகை) ஆண்டில் அச்சிடப்பெற்று இருந்தது. அதில் ஆக்கியோன் பெயர் என்ற தலைப்பில் கீழ்க்கண்ட ஒரு பாடல் கிடைத்தது.

"கொந்தார் கடம்பணி யேரக மேவுங் குகற்குகந்த
அந்தாதி வீரசை வத்தை விளக்கிடு மாதித்தனும்
நந்தாத ஞானச் சிவப்பிர காசன்ற னல்லருளால்
வந்தான் முருக னருள்பெற்ற வேலையன் வாழ்த்
[தினனே."

என்பது அது.

இவ்வாதீனத்துக்குச் சொந்தமான திருப்பெருந்துறையில் கட்டளைத் தம்பிரானுக இருந்த ஸ்ரீ சிங்கார வேல் தம்பிரான் சுவாமிகள்பால் சிறுவயதிலே பாடங் கேட்ட ஒருவர், 19ஆம் பாடலின் வேருெரு உரையை உமையாள்புரம் சாமிநாதபிள்ளை கூறியதாக எழுதியுதவினுர். அதனையும் உடன் சேர்த்துக்கொண்டேன்.

இவ்வந்தாதியின் உரையை இம்மட்டிலே என் சிற்றறிவுக்கு எட்டியவாறு எழுதி முடித்தேன் இதன்கண் குறையுளதாயின் அறிஞருலகம் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இப்பதிப்பிலே ஏரகத்தைப்பற்றிய பல செய்திகள் தேடித் தொகுக்கப்பட்டன. வழக்கம்போலவே செய்யுள் முதற்குறிப்பகராதியும், எடுத்தாண்ட நூற்பெயர்களின் அட்டவணையும் இதில் சேர்க்கப்பட்டுள.

மாயூரம், திருச்சிற்ற-இல்லம் காந்தி வித்தியாலயம் திருவாளர் மு. அருணசலம், எம். ஏ. அவர்கள் எழுதிய 14, 15 ஆம் நூற்றாண்டு வரலாறுகளும் இம் முகவுரைக்குத் துணை செய்தன.

சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனங்களும், செந்தமிழ்ப் பரிபாலனம் சித்தாந்த சைவபரிபாலனங்களும் செய்துகொண்டு சிவஞானச் செங்கோல் செலுத்திவரும் 22-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளிய வண்ணம் இத்திருவேரகயமகவந்தாதி உரையுடன் 21-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் மூன்றாவது ஆண்டுக் குருபூசை நினைவு மலராக அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் நீடு வாழ்க.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி —

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

ஆதீன வித்துவான்.

திருவாவடுதுறை,
1—9—70.

# இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள்

கந்தர் கலிவெண்பா
பரஞ்சோதி திருவிளையாடல்
திருவரங்கத்தந்தாதி
கம்பராமாயணம்
வாக்குண்டாம்
கந்தரனுபூதி
கந்தரலங்காரம்
கந்தபுராணம்
சிவப்பிரகாசசுவாமிகள் பிரபந்தம்
தனிப்பாடல்
தக்கயாகப்பரணி
தியானசுலோகம்
தொல்காப்பியம்
கல்லாடம்
குமரகுருபரர் பிரபந்தங்கள்
தணிகைப்புராணம்
திருநாவுக்கரசர் திருநேரிசை
திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை
சூடாமணி நிகண்டு
கூர்மபுராணம்
சூதசங்கிதை
திருப்புகழ்
தாயுமானவர்பாடல்
அருணைக்கலம்பகம்

# அகப்பொருட்செய்திகள்

நற்ருயிரங்கல் 2, 10, 11
தலைவியின் அவயவம் புகழ்தல் 6
சுரம்சென்ற மகளை நினைந்து நற்ருயிரங்கல் 8
தோழியிரங்கல் 12
நற்ருய்தோழியரைத் தூதுவிடுத்தல் 13
தலைவன் தலைவிக்கு உரைத்தல் 22
தோழி அன்னத்தொடு புலந்துரைத்தல் 23
களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல் 26
தோழிகூற்று 29, 45
குலமுறைகூறி மறுத்தல் 33
தோழி ஆற்றுவித்தல் 36
பாங்கி கொடுஞ்சொற்கூறல் 37
தலைவன் பாகனொடுகூறல் 48
தலைவிசுரஞ்செல நற்ருய் இரங்கல் 54
பாங்கிகூற்று 59
தலைவி மாரனை முனிதல் 61
தலைவி கூற்று 68

# ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழ்

## சுவாமிமலை *

*தனதனன தான தத்த தனதனன தான தத்த*
*தனதனன தான தத்த தனதான*

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்பம் அணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு மெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே.

---

* இத்தல சம்பந்தமான திருப்புகழ் முப்பத்தொன்பதில் பதினேழாவது இது.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே.

ஆறுமுகமான பொருள் :-

முன்முகம் மூன்று, பின்முகம் மூன்று என்பர். ஏறுமயிலேறுதல் பூதாத்மாவுக்கும், ஞானமொழி பேசுதல் அந்தராத்மாவுக்கும், அடியார் வினைதீர்த்தல் சீவாத்மாவுக்கும் ஆம்; இவை பின்முகங்கள்.

வேல்வாங்கி நிற்றல் மந்திராத்மாவுக்கும், சூரரை வதைத்தல் தத்துவாத்மாவுக்கும், வள்ளியை மணத்தல் பரமாத்மாவுக்குமாம்; இவை முன்முகங்கள். இவற்றுள் பரமாத்மாவுக்குள்ள முகம் மத்தியில் உள்ளது.

வேல்வாங்கி நிற்றலால் வைந்தவ பந்தம் நீங்கும், சூரரைவதைத்தலால் அதிகாரமலம் நீங்கும், வள்ளியை மணத்தலால் பேரின்பமுண்டாம் என்று கூறுவர்.

சதாசிவர் அபரமுத்தர் ஆவேசபக்கம், அனந்தர் அதிகார முத்தர் அதிட்டான விசேடம், சீகண்டர் சீவன் முத்தர் அதிட்டான பக்கம் எனவும், மந்திர மூர்த்தி தூலமும், ஆன்மமூர்த்தி சூக்குமமும், சத்தி மூர்த்தி அதிசூக்குமமுமாம் என்க.

சீகண்ட பரமசிவன்பால் தூலமாகக் காணப்படும் சோமாஸ்கந்த வடிவத்தில் சத்தி 36-தத்துவங்களிலும் வியாபித்து நின்று அதிகாரம் செய்யும் வடிவாகவும், நடுவண் நிற்கும் முருகன் ஆன்மாக்களுக்கு அந்தர்யாமி யாயிருந்து மலங்களையொழிக்கும் குரவனாகவும், சிவன் ஆன்மாக்கள் அனுபவிக்கும் பேரின்ப வடிவாகவும் விளங்குவர். அதனால் குருநாதன் என்ற பெயர் முருகக் கடவுளுக்கு வந்தது. அன்றியும் முத்தான்மாக்களின் ஆறு குணங்களும் ஆறு முகமாம் என்பர்.

இது ஸ்கந்த பரம்பரை சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீ முத்துக்குமாரதேசிக மூர்த்திகள்பால் அருளுப தேசம் பெற்ற ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் 1937 ஆம் ஆண்டிலே சொல்லியது.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவேரகயமகவந்தாதி

## மூலமும் உரையும்

### காப்பு

எண்டந்த முல்லை விழிவே
லளக மிருளிடைசொற்
பண்டந்த மாமெனும் வள்ளிதெய்
வானைதம் பங்கனுயர்
அண்டந்த ராதலம் போற்றே
ரகன்றனந் தாதிசொல்லக்
கண்டந்த வேழ முகனக
லானென் கருத்திடையே.

(இதன் பொருள்) எண் தந்தம் முல்லை - மதிக்கத் தக்க பற்கள் முல்லையரும்பு போலவும், விழி வேல் - கண்கள் வேல் போலவும், அளகம் இருள் - கூந்தல் இருள் போலவும், இடை தந்து - இடை நூல்போலவும், சொல் பண் - சொல் பண்போலவும், ஆம் எனும்-ஆகும் என்று சொல்லுகின்ற, வள்ளி தெய்வானை தம் பங்கன் - வள்ளியம்மையையும் தெய்வயானையம்மையையும் பாகத்திலுடையவரும், உயர் அண்டம் தராதலம் போற்று - உயர்வாகிய அண்டத்தவர்களும், பூலோகத்தவர்களும் துதிக்கின்ற, ஏரகன் அந்தாதி சொல்ல - திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்றவரும் ஆகிய சுவாமிநாதக்

கடவுளின்மேல் அந்தாதி என்னும் பிரபந்தத்தை (அடியேன்) பாடுதற்கு, கண் தந்த வேழமுகன் - கண் கொடுத்தவிநாயகர் என்னும் திருநாமத்தையுடைய விநாயகக்கடவுள், என் கருத்திடை அகலான் - அடியேன் மனத்தைவிட்டு நீங்கார் என்றவாறு.

இரண்டாம் அடியிலுள்ள அம் சாரியை, ஏ - ஈற்றசை. முல்லை என்றது அதன் அரும்புக்கு ஆனதும், அண்டம் தராதலம் என்பவை அவைகளிடத்து உள்ளார்க்கு ஆனதும் ஆகுபெயர்கள்.

எண் - எண்ணம். அலகம் = அளகம் - கூந்தல். தந்து - நூல். பண் - இசை. பங்கு - பாகம். ஏரகம் - சாமிமலை.

இத்தல விநாயகர் கண்கொடுத்தபிள்ளையார் என வழங்கப்பெறுவர். கண் கொடுத்த விநாயகர் என் கருத்தை விட்டகலார் என்க.

## நூல்

பூவையம் பாக வமுதா
ருலகும் புரந்தரனும்
பூவையம் பாகனும் போற்றே
ரகந்துதி புன்னெஞ்சமே
பூவையம் பாக வெடுத்தானைச்
செற்ற புராரிமலைப்
பூவையம் பாகன்றன் சேயா
றெழுத்தையும் போதிக்கவே. 1

**இ - ள் :** புல் நெஞ்சமே - புல்லிய மனமே, பூவை அம்பாக எடுத்தானை - மலர்களைப் பாணமாகக்கொண்ட மன்மதனை, செற்ற புராரி - கொன்றருளிய திரிபுரத்துக்குப் பகைவரும், மலை பூவை அம் பாகன் தன் - இமய

மலையில் அவதரித்த உமாதேவியாரை அழகிய வாம பாகத்தில் உடையவருமாகிய சிவபெருமானது, சேய் - புதல்வராகிய சுப்பிரமணியக்கடவுள், ஆறு எழுத்தையும் போதிக்க - தமது சடாக்கரத்தை உபதேசிக்கும் பொருட்டு, பூ ஐ - தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவரும், அம் பாகு அ அமுது ஆர் உலகும் - அழகிய குழம்பாகிய அந்த அமுதம் நிறைந்த விண்ணுலகத்திலுள்ள தேவர்களும், புரந்தரனும் - இந்திரனும், பூ வையம் பாகனும் - அழகிய பூமிதேவியைப் பாகத்திலுடைய திருமாலும், போற்று ஏரகம் துதி - வணங்குகின்ற திருவேரகத்தைத் துதிப்பாயாக என்றவாறு.

உலகு : ஆகு பெயர்.

பூ வை அம்பு ஆக எடுத்தானை என்பதில் பூ வை அம்பாக - மலரைக் கூரிய பாணமாக எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். வை - கூர்மை. மலரம்புகள்: தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலம் என்பன.

பூ ஐ அம்பு ஆக - மலர்களை ஐந்து அம்புகளாக எனலும் ஆம்.

## நற்றுயிரங்கல்

திக்கு மதிக்கு மெழிலே
ரகாவெங்கள் சேயிழைதித்
திக்கு மதிக்குங் கசந்தாடென்
றற்புலி சீறவந்து
திக்கு மதிக்குங் கடற்குங்
குயிற்குந் தியங்கிப்பின்வந்
திக்கு மதிக்குறை தீரென்றுன்
னுமங்கள் செப்புவளே. 2

**இ - ள் :** திக்கு மதிக்கும் எழில் ஏரகா - எட்டுத் திசைகளினுள்ளாராலும் போற்றப்படும் அழகிய திருவேரகத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, எங்கள் சே இழை - எங்களுடைய சிவந்த ஆபரணங்களையணிந்த பெண்ணனவள், தித்திக்கும் மது இக்கும் கசந்தாள் - இனிமையைச் செய்யும் தேனையும் கரும்பையும் வெறுத்தாள், தென்றல் புலி சீற - தென்றற் காற்றானது புலிபோலச் சீற, வந்து உதிக்கும் மதிக்கும் - வந்து தோன்றும் சந்திரனுக்கும், கடற்கும் குயிற்கும் தியங்கி - கடலோசைக்கும் குயிலோசைக்கும் மயங்கி, வந்திக்கும் - (உம்மை) வழிபடுவாள், பின் மதி குறைதீர் என்று - பின்பு புத்திக் குறைவைப் போக்கியருளுக என்று, உன் நாமங்கள் செப்புவள் - தேவரீரது திருநாமங்களைச் சொல்லித் துதிப்பாள் என்றவாறு.

கடல், குயில் என்பன ஆகுபெயர்கள்; அவைகளின் ஓசைக்காயினமையின். சேயிழை: அன்மொழித்தொகை. தென்றல்புலி - தென்றலாகிய புலியானது எனலுமாம்.

புவனந் தினந்த நெடுமான்
மருகன் புலவர்விரும்
புவனந் தினந்திக ழும்பொன்னி
யேரகம் புக்கினர்வெற்
புவனந் தினந்திரி யாமன்மெய்ஞ்
ஞானப் பொருளையியம்
புவனந் தினகரன் போற்புல்
லிருளறப் புந்திவந்தே. 3

**இ - ள் :** புவனம் தின் அந்த நெடுமால் மருகன் - உலகங்களையுண்டருளிய அந்த விஷ்ணுமூர்த்திக்கு மருகரும், புலவர் விரும்புவன் - தேவர்களால் விரும்பப் படுபவருமாகிய முருகக்கடவுள், நந்து இனம் திகழும் -

சங்குக் கூட்டங்கள் விளங்கும், பொன்னி - காவிரிநதி யினால் சூழப்பெற்ற, ஏரகம் புக்கினர் - திருவேரகத்தை அடைந்தவர்களுக்கு, வெற்பு வனம் தினம் திரியாமல் - மலைகளிலும் காடுகளிலும் சென்று நாடோறும் அலையாமல், புந்தி புல் இருள் அற - அவர்கள் மனத்திலுள்ள (அஞ்ஞானமாகிய) இருள் நீங்க, அம் தினகரன் போல் வந்து - அழகிய சூரியனைப்போல எழுந்தருளி, மெய்ஞ் ஞானப்பொருளை இயம்புவன் - மெய்ஞ்ஞானப்பொருளை உபதேசித்தருளுவர் என்றவாறு.

நெடு மால் என்றது திரிவிக்கிரம அவதாரத்தை. புலவர் - தேவர், வித்துவான்கள். புவனம் - உலகம்.

வந்தனை யானந்த வேரகற்
    கேசெய்வேன் மற்றொருதெய்
வந்தனை யானஞ் சலிக்கே
    னெனைத்தொடர் வல்வினைப்ப
வந்தனை யானந்தன் வானோர்
    முனிவர்கள் வாழ்த்தவென்முன்
வந்தனை யானந் தகன்வீசு
    பாசத்தை மாற்றுவனே. 4

**இ - ள் :** அந்த ஏரகற்கே யான் வந்தனை செய்வேன் - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாத சுவாமியையே யான் வணங்குவேன், மற்றொரு தெய்வம் தன்னை யான் அஞ்சலிக்கேன் - வேறொரு கடவுளையும் அடியேன் வணங்க மாட்டேன், (ஆதலால்) அனையான் - அந்தச் சுவாமிநாத சுவாமியானவர், ஆல் நந்தன் - ஆலிலையில் துயில் கொள்ளும் திருமாலும், வானோர் - தேவர்களும், முனிவர்கள் வாழ்த்த - முனிவர்களும் துதிக்க, என் முன் வந்து - அடியேனுக்கு முன்னே வந்து, எனைதொடர் வல்வினை பவம் தனை -

அடியேனைத்தொடர்கின்ற வலிய வினையினாலுண்டாகிய பிறவியையும், அந்தகன் வீசு பாசத்தை - இயமனால் வீசப்பட்ட பாசத்தையும், மாற்றுவன் - நீக்கியருளுவர் என்றவாறு.

நந்தன் - சங்கையுடையவன். பவம் - பிறப்பு. அந்தகன் - இயமன்.

வனந்தந்த மாதனங் கந்தரங்
காட்டி மருமயற்க
வனந்தந் தவஞ்செயும் வேசிய
ராசை வனசத்திலை
வனந்தந் தனமவர் கூடுத
லேரகம் வாழ்த்துமின்செய்
வனந்தந்த வேலை வருதுயர்
தீர வரங்கந்தனே. 5

இ - ள்: வனம் தந்தம் மா தனம்-அழகு பொருந்திய யானைத் தந்தத்தை யொத்த பெரிய நகில்களையும், கந்தரம் காட்டி - கழுத்தையும் காண்பித்து, மருமயல் கவனம் தந்து - நீங்காத மயக்கத்தையும் கவலையையும் கொடுத்து, அவம் செயும் வேசியர் ஆசை - பாவத்தைத் தருகின்ற வேசியர்கள்மேல் வைத்த ஆசையினாலே, அவர் கூடுதல் தம் தனம் - அவர்களைக் கூடுதலே தங்களுக்குப் பெரிய செல்வமென்று (கருதி), வனசத்து இலை வனம் வரு துயர் தீர - தாமரையிலையிற் பொருந்திய தண்ணீரைப்போலத் துளும்புகின்ற துன்பங்கள் நீங்க, கந்தன் ஏரகம் வாழ்த்துமின் - கந்தசுவாமி எழுந்தருளியிருக்கின்ற திருவேரகத்தைத் துதியுங்கள், அந்த அந்த வேலை-அந்த அந்தச் சமயத்தில் (அவர் அங்கு எழுந்தருளி வந்து), வரம் செய்வன் - வரத்தைக்கொடுத்தருளுவர் என்றவாறு.

தம்தனம்-தம்முடைய செல்வம். வனசம்-தாமரை. வனம் - நீர். 'தாமரையிலைத்தண்ணீர் போல' என்பது பழமொழி.

## தலைவியின் அவயவம் புகழ்தல்

கந்தரங் கஞ்சந் தனமிரு
ளோதி கலைமதிமு
கந்தரங் கஞ்சரிக் கும்நீர்ச்
சுழியுந்தி காவிகமு
கந்தரங் கஞ்சனங் கன்ன
மிடைகளங் கண்மயிலூர்
கந்தரங் கஞ்ச வயலே
ரகமன்ன காரிகைக்கே. 6

**இ - ள் :** மயில் ஊர் கந்தர்-மயிலை வாகனமாக ஏறிச் செலுத்துகின்ற கந்தசுவாமி எழுந்தருளியிருக்கின்ற, அம் கஞ்ச வயல் ஏரகம் அன்ன - தாமரைகளையுடைய வயல்களாற் சூழப்பட்ட திருவேரகமலையை யொத்த, காரிகைக்கு - பெண்ணுக்கு, இருள் ஓதி கந்தரம் - இருள் நிறம் பொருந்திய கூந்தல் மேகம், தனம் கஞ்சம்-முலைதாளம், முகம் கலைமதி-முகம்பூரண கலைகளையுடைய சந்திரன், உந்தி தரங்கம் சரிக்கும் நீர்சுழி - கொப்பூழ் அலைகளின்மேற் பொருந்திய நீர்ச்சுழி, கண் காவி- கண்கள் நீலோற்பலமலர், களம் கமுகு - கழுத்து கமுகு, இடை அந்தரம் - இடை ஆகாசம், கன்னம் கஞ்சனம்- கன்னம் கண்ணாடி என்றவாறு.

ஓதி - கூந்தல். கந்தரம் - மேகம். கஞ்சம் - தாளம். உந்தி - கொப்பூழ். தரங்கம் - அலை. காவி - நீலோற் பலம். களம் - கழுத்து. அந்தரம் - ஆகாயம். கஞ்சனம்- கண்ணாடி.

காரக லாத மதிலேர காமறை மாணருமோங்
காரக லாதர னேபர னே நற் கடம்பின்முரு
காரக லாத மனைபோல வந்து கயமுகசங்
காரக லாத மதியேனை யாளக் கடனுனக்கே. 7

இ - ள்: கார் அகலாத மதில் ஏரகா - மேகங்கள் நீங்காத மதிலையுடைய திருவேரகத்தில் எழுந்தருளி யிருப்பவரே, மறை காண அரும் ஓங்கார கலாதரனே - வேதங்களாலும் அறிதற்கரிய பிரணவமாகிய கலையைத் தரித்தவரே, பரனே - மேலானவரே, நல் கடம்பின் முருகு ஆர் அகலா - நல்ல கடப்பமலர் மாலையினது வாசனை பொருந்திய திருமார்பையுடையவரே, கயமுக சங்கார - யானைமுகத்தையுடைய தாரகாசுரனைச் சங் கரித்தவரே, உனக்கு - தேவரீருக்கு, கலாத மதியேனை - கல்லாத புல்லறிவுடைய அடியேனை, அனைபோல் வந்து ஆள - தாய்போல வந்து அடிமை கொண்டருள்வது, கடன் - கடனும் என்றவாறு.

தம்: சாரியை. ஏ: அசை. கலாத அனை என்பன இடைக்குறை. கலாதரன், சங்காரம்: வடசொற்கள்.

### சுரம்சென்ற மகளை நினைந்து நற்றாயிரங்கல்

கடந்தவ னத்தையெவ் வாறுசென்
றாள்வஞ்சி கானெறிசங்
கடந்தவ னத்தைக் கொடுக்குமை
யோவென்ன காதலென்ன
கடந்தவ னத்தைச் சுமந்த
பலன்கொல் கருதுலகங்
கடந்தவ னத்தை பயில்பொன்னி
யேரகன் கார்வரைக்கே. 8

இ - ள் : கருது உலகம் கடந்தவன் - நினைக்கத்தக்க உலகங்களைக்கடந்தவரும், நத்தை பயில் பொன்னி ஏரகன் - சங்குகள் பொருந்திய காவேரி நதியினால் சூழப்பட்ட திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவருமாகிய சுவாமிநாத சுவாமியினது, கார் வரைக்கு - மேகங்கள் தவழும் மலையினிடத்துள்ள, வஞ்சி - கொடிபோன்ற நம் பெண்ணானவள், அ வனத்தை கடந்து எவ்வாறு சென்றாள் - அப்பாலே வனத்தைக் கடந்து எவ்வாறு போனாள், கால் நெறிசங்கடம் - காலால் நடந்து செல்லுதற்குரிய வழி சங்கடமாயிருக்கும், ஐயோ தவனத்தை கொடுக்கும் - ஐயோ வெப்பத்தைக் கொடுக்குமே, என்ன காதல் - இவளுக்கு என்ன ஆசை, என் அகடு அந்த அனத்தை சுமந்த பலன் கொல் - என் வயிறு அந்த அன்னம் போன்ற பெண்ணைப் (பத்துமாதம்) சுமந்து பெற்ற பலனோ என்றவாறு.

தவனம் - வெப்பம். அகடு - வயிறு.

வரையானை யன்பர்க்குத் துஞ்செழுத்
தேரக மாம்பெரிய
வரையானைப் பாடி மகிழ்கின்றி
லேன்முன் வனத்திற்குட
வரையானை மேய்த்தவற் கொப்பென்று
சொல்லியிவ் வையத்திற்செல்
வரையானை யோபுகழ்ந் தேனெனைப்
போலிலை மானிடரே. 9.

இ - ள் : அன்பர்க்கு - தமது அடியார்களுக்கு, துஞ்சு எழுத்து வரையானை - இறப்பு என்னும் எழுத்தை எழுதாதவரும், ஏரகம் ஆம் பெரிய வரையானை - திருவேரகம் ஆகிய பெரிய மலையையுடையவருமாகிய சுவாமிநாதசுவாமியை, பாடி மகிழ்கின்றிலேன் - பாடி மகிழா

தவனுகிய யான், இ வையத்தில் செல்வரை - இப்பூமியிலுள்ள செல்வர்களை, முன் வனத்தில் குடஅரை ஆனை - முற்காலத்தில் காட்டிலே குடம்போன்ற மடியினையுடைய பசுக்களை, மேய்த்தவற்கு ஒப்பு என்று சொல்லி யான் புகழ்ந்தேன் - மேய்த்தவராகிய திருமாலுக்கு ஒப்பென்று யான் கூறித் துதித்தேன், ஐயோ எனைப்போல் மானிடர் இலை - ஐயோ! என்னைப்போலக் கெட்ட மனிதர்கள் இல்லை என்றவாறு.

அரை ஆன் - மடியையுடைய பசு: அரை: ஆகு பெயர். அரையிலுள்ள முலைமடிக்கு ஆயினமையின்.

## நற்றுயிரங்கல்

மானத்த னத்தி கிரியா
னயன்றெழும் வள்ளனங்கோ
மானத்த னத்தி முகற்கிளை
யான்றனை வந்திப்பர்மேன்
மானத்த னத்தில கும்பொன்னி
யேரகன் வன்மலைச
மானத்த னத்தி மயல்சொல்
லியுமினம் வந்திலனே. 10

இ - ள்: மான் அத்தன் - மான் ஏந்திய திருக்கரத்தையுடைய உருத்திரனும், அ திகிரியான் - அந்தச் சுதரிசனம் என்னும் சக்கரத்தையுடைய திருமாலும், அயன் - பிரமதேவனும், தொழும் வள்ளல் - வந்து தொழுகின்ற வள்ளலும், நம் கோமான் - நமது தலைவரும், அத்தன் - பிதாவும், அத்தி முகற்கு இளையான் - யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குத் தம்பியும், தனை வந்திப்பர் மேல் மானத்தன் - தன்னை வழிபடும் அடியார்களிடத்து அபிமானமுள்ளவருமாகிய சுவாமிநாதசுவாமி

எழுந்தருளியிருக்கிற, நத்து இலகும் பொன்னி ஏரகன் - சங்குகள் விளங்கும் காவிரி நதியாற் சூழப்பட்ட திருவேரக மலையின்கண் உள்ள தலைவன், வல் மலை சமானம் தனத்தி - சூதாடுகருவியையும் மலையையும் ஒப்பாகவுள்ள நகில்களையுடைய தலைவியினது, மயல் சொல்லியும் - மயக்கத்தை எடுத்துச் சொல்லியும், இனம் வந்திலன் - இன்னம் வந்தானில்லை என்றவாறு.

அ திகிரியான்: அத்தி கிரியான் எனினுமாம்; இது காஞ்சிபுரத்திலுள்ள அத்திகிரி என்னும் தலம். அத்தி - யானை. வல் - சூதாடுகருவி.

### நற்றாயிரங்கல்

வந்தவி ராமனைச் செந்தீ
யெனுநன் மதுரகடு
வந்தவி ராமனை மெய்யுடன்
வாடுவள் வாய்விழிசி
வந்தவி ராமனை நேர்மன்னர்
வேதியர் மாதவர்செல்
வந்தவி ராமனை சூழேர
காவெங்கண் மாதரசே. 11

**இ - ள் :** வாய் விழி சிவந்த இராமனை நேர்மன்னர் - வாயும் கண்களும் சிவந்த சீராமனையொத்த அரசர்களுடையவும், வேதியர் - பிராமணர்களுடையவும், மாதவர் - முனிவர்களுடையவும், செல்வம் தவிரா மனை சூழ் ஏரகா - செல்வம் நீங்காத வீடுகளாற் சூழப்பட்ட திருவேரகமலையிலுள்ள தலைவனே, எங்கள் மாது அரசு - எங்கள் பெண்ணரசியானவள், வந்த இரா மனை செந்தீ எனும் - தோன்றிய இரவுக்கு அரசனாகிய சந்திரனைச் சிவந்த நெருப்பென்று சொல்லுவாள், நல் மதுரம்

கடுவம் (எனும்) - நல்ல இனிய சுவையுள்ள உணவுகளை கசக்கிறது என்பாள், தவிராமல் நை மெய்யுடன் வாடு வள் - நீங்காமல் வருந்துகின்ற சரீரத்தோடு வாடுவா ளாயினுள் என்றவாறு.

எனும் என்பதைக் கடுவம் என்பதோடும் கூட்டப் பட்டது. மன்னை என்பது மனை என வந்தது இடைக் குறை. இரா மன் - இராத்திரி காலத்துக்கு அரசன்; சந்திரன். கடு - கசப்பு. நைதல் - வருந்துதல்.

## தோழியிரங்கல்

மாதர வந்திகை வாரா
திசைக்குயில் வன்குரல்கம்
மாதர வந்தி மதியையுண்
ணுது மனத்துயர்சும்
மாதர வந்திம் மலயத்து
வாடையும் வாட்டநைவாண்
மாதர வந்திக மும்பொன்னி
யேரகன் மாலைகொண்டே. 12

இ - ள்: மாது - நம் தலைவியானவள், அரவம் திகழும் பொன்னி - ஒலிபொருந்திய காவேரி நதியினல் சூழப்பட்ட, ஏரகன் மாலை கொண்டு - திருவேரகமலை யின்கண் உள்ள தலைவன் மீது மயக்கத்தைக் கொண்டு, மாதர் அவந்திகை வாராது - அழகிய கிளி வாராமை யாலும், இசை குயில் வன்குரல் கம்மாது - இசைபாடும் குயிலினது வலிய ஓசை குறையாமையாலும், அரவு அந்தி மதியை உண்ணுது - பாம்பு அந்திக்காலத்தில் தோன்றும் சந்திரனை உண்ணுமையாலும், சும்மா மனத் துயர் தர - வீணுக மனத்துயரத்தை உண்டாக்க, இ மலயத்து வாடையும் வாட்ட - இந்தப் பொதியில்

மலையினின்று வீசும் தென்றற் காற்றும் வந்து வருத்தஞ் செய்ய, நைவாள் - வருந்துவாள் என்றவாறு.

அரவம் - ஒலி. மால் - மயக்கம். அவந்திகை - கிளி. மலயம் - பொதியில் மலை. யுகம் - ஊழிக்காலம்.

## நற்றாய் தோழியரைத் தூது விடுத்தல்

மாலை யனந்த யுகம்போல
வெண்ணி மயங்குமிவண்
மாலை யனந்தனை நேர்நடை
யீர்சொலும் வந்துபது
மாலை யனந்த வயிரா
வதன்றொழும் வண்கடப்ப
மாலை யனந்த மிகுமேர
கத்துறை வானவற்கே. 13

இ - ள்: அனம் தனை நேர் நடையீர் - அன்னத்தின் நடையையொத்த நடையினையுடைய பெண்களே, பதும ஆலயன் - தாமரைமலரைக் கோயிலாகக்கொண்டிருக்கும் பிரமதேவரும், அந்த அயிராவதன் வந்து தொழும் - அந்த அயிராவதம் என்னும் வெள்ளையானையையுடைய தேவேந்திரனும் வந்து வணங்குகின்ற, வண் கடப்ப மாலையன் - வளப்பம் பொருந்திய கடப்பமலர் மாலையை யணிந்த முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற, அந்தம் மிகும் ஏரகத்து உறை வானவற்கு - அழகுமிகுந்த திருவேரகத்தில் வசிக்கும் தேவர்களை யொத்த தலைவனுக்கு, மாலை - மாலைக்காலத்தை, அனந்த யுகம்போல எண்ணி மயங்கும் - முடிவில்லாத பல யுகங்கள் போல நினைத்துக் கலங்குகின்ற, இவள் மாலை சொலும் - இவளுடைய மயக்கத்தைச் சொல்லுங்கள் என்றவாறு.

வானக மாலையன் றானக
யாவையு மாகவுயர்
வானக மாலய மாய்க்கொள்வன்
வெண்கரி வாங்கியுண்ண
வானக மால முறித்தேந்து
மேரக வள்ளறரு
வானக மால விடுத்தா
ருடன்வைகும் வாழ்வினையே. 14

இ-ள்: வான் ஆக-ஆகாசமாகவும், மால் அயன் தான் ஆக - திருமாலும் பிரமனுந்தானாகவும், யாவையும் ஆக - (உலகங்களிலுள்ள) சரம் அசரம் என்னும் பொருள்களெல்லாம் தானாகவும், உயர்வான் - விசுவரூபங் கொண்டெழுந்தருளி இருக்கின்றவரும், நாகம் ஆலயம் ஆய் கொள்வன் - சுவர்க்க லோகத்தை ஆலயமாகக் கொண்டிருக்கின்ற இந்திரனுடைய, வெண்கரி வாங்கி உண்ண - வெள்ளையானை வாங்கித் தின்னும்படி, வான் நாகம் ஆல முறித்து ஏந்தும் - பெரிய புன்னை மரங்களையும், ஆல மரங்களையும் முறித்து ஏந்திக்கொண்டிருக்கின்ற, ஏரக வள்ளல் - திருவேரக மலையில் எழுந்தருளியிருக்கின்ற வள்ளற்றன்மையையுடையவருமாகிய சுவாமிநாத சுவாமியானவர், மால விடுத்தாருடன் வைகும் வாழ்வினை - (பிரபஞ்ச) மயக்கத்தை விட்ட அடியார்களோடு கூடிவாழும் வாழ்வை, தருவானக - கொடுத்தருளுவாராக என்றவாறு.

நாகம் - சுவர்க்கம், புன்னைமரம். வெண்கரி - ஐராவதம்.

வினையக் கரச்சுட ராழிவிட்டோன்
கொன்றை மெல்லிதழ்ப்பூ
வினையக் கரவை யணிந்தோனும்
வேதனும் வேண்டவெம்போர்

வினையக் கரவசு ரர்ச்செற்ற
வேரக வேலவென்று
வினையக் கரமிரு மூன்றும்
பதித்தருள் வித்தகனே. 15

இ-ள்: வினைய கர சுடர் ஆழி விட்டோன் - வஞ்சகத்தையுடைய கரன் என்னும் அசுரன்மேல் ஒளி பொருந்திய சக்கராயுதத்தைச் செலுத்திய திருமாலும், மெல் இதழ் கொன்றைப் பூவினை - மெல்லிய இதழ்களையுடைய கொன்றைப் பூமாலையையும், அக்கு அரவை அணிந்தோனும் - எலும்பு மாலையையும் சர்ப்பத்தையும் தரித்த உருத்திரமூர்த்தியும், வேதனும் வேண்ட - பிரமதேவனும் பிரார்த்திக்க, வெம்போர் - கொடிய யுத்தத்தில், வில் கரவு அசுரர் - வில்லினால் வஞ்சகத்தையுடைய அசுரர்கள், நைய செற்ற - வருந்தும்படிகொன்றருளிய, ஏரக வேல - திருவேரகமலையில் எழுந்தருளியிருக்கின்ற வேலாயுதத்தைத் தரித்தருளியவரே, வித்தகனே - ஞான சொரூபியே, என் நாவின் ஐ அக்கரம் இருமூன்றும் பதித்தருள் - அடியேனது நாவில் அழகிய ஆறெழுத்துக்களை (சடாக்கரமந்திரத்தை)யும் எழுதியருளும் எ-று.

கரன் இராவணனது தாயாகிய கேகசிக்கு உடன் பிறந்தாள் மகன்; இராவணனுக்குத் தம்பி முறையுள்ளவன். கரன் தம்பி தூஷணன். திரிசிரா என்பவன் படைத்தலைவன்.

வித்தக ரஞ்சலித் தார்வினை
தீர்க்கும் விடையர்முன்வேள்
வித்தக ரஞ்ச நடத்தும்
பிரானை வெகுளியைய

வித்தக ரஞ்சந் திலகே
ரகத்தினில் வேண்டுமின்கு
வித்தக ரஞ்சலி யாதொழி
வீர்சன்ம வேலையையே. 16

இ-ள்: வித்தகர் - ஞானசொரூபரும், அஞ்சலித் தார் - தம்மைக் கைகூப்பி வணங்கும் மெய்யடியார் களது, வினைதீர்க்கும் விடையர் - பாவங்களைப்போக்கும் வன்மையுடையவரும், முன் - முன்பு, வேள்வி தகர் அஞ்ச - நாரத முனிவர் செய்த யாகத்தில் தோன்றிய ஆட்டுக்கிடா அஞ்சும்படி, நடத்தும் பிரானை - ஏறி வாகனமாகச் செலுத்தியவருமாகிய முருகக்கடவுளை, வெகுளியை அவித்து - கோபத்தை நீக்கி, குவித்த கரம் சலியாது - கும்பிட்ட கைகளை நெகிழவிடாமல், அகரம் - அந்தணர்களுடைய தெருக்களும், சந்து இலகு - சந்து களும் விளங்கும், ஏரகத்தினில் - திருவேரகத்துக்குச் சென்று, வேண்டுமின் - வேண்டிக்கொள்ளுங்கள், (அவ் வாறு செய்தலால்) சன்ம வேலை ஒழிவீர் - (உங்களுடைய) பிறவிக்கடலைக் கடப்பீர்கள் என்றவாறு:

" ... ... ... ... நெருப்பிலுதித்
தங்கட் புவன மனைத்து மழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்
விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் திக்கும்
நடத்தி விளையாடு நாதா."

(கந்தர் கலிவெண்பா)

வேலை யிலங்கை யழித்தான்
மருக வினைகளெய்தும்
வேலை யிலங்கை மனம்பிரி
யாமல் விரும்பிநிதம்

வேலை யிலங்கைத் துனக்கேசெய்
தேரக மேவிநிற்க
வேலை யிலங்கை நெடுங்கைவைத்
தோயருண் மெய்ப்பத்தியே. 17

இ - ள்: வேலை இலங்கை அழித்தான் மருக - கடலால் சூழப்பட்ட இலங்காபுரியை அழித்த திருமாலினுடைய மருகனே, அயில் வேல் - கூரிய வேற்படையை, ஐ நெடு கை வைத்தோய்-அழகிய நீண்ட திருக்கரத்தில் தாங்கிய முருகக்கடவுளே, வினைகள் எய்தும் வேலையில் - இருவினைகளும்வந்து அடியேனைப் பொருந்தும்காலத்தில், இலங்கு மனம் பிரியாமல் - விளங்குகின்ற மனம் தேவரீரை விட்டு நீங்காமல், விரும்பி - விருப்பம் வைத்து, இலம் கைத்து - இல்வாழ்க்கையை வெறுத்து, ஏரகம் மேவி - திருவேரகத்தைச் சேர்ந்து, நிதம் - நாடோறும், உனக்கே வேலைசெய்து நிற்க - தேவரீருக்கே திருத்தொண்டுகள் செய்துகொண்டு நிலைபெற, மெய் பத்தி அருள் - மெய்ம்மையான அன்பை அடியேனுக்குத் தந்தருளும் என்றவாறு.

ஐ, அங்கு சாரியைகள். இலம் - இடைக்குறை.

பத்திர மாகமத் தின்படி
யேரகன் பாதமர்ச்சிப்
பத்திர மாக விருப்பீரெஞ்
ஞான்றும் பலவினையு
பத்திர மாக மடையாது
கேண்மினிப் பாரிற்சிற்றின்
பத்திர மாகத் தமரர்க்
கரிய பதம்வருமே. 18

இ - ள் : இபாரில் - இந்த நிலவுலகத்தில், சிற்றின்ப திர - சிற்றின்பத்திலே நிலைபெற்றுள்ள மானிடர்களே, கேண்மின் - யான் சொல்வதைக் கேட்பீராக, பத்திரம் - பத்திரங்களைக் கையிலே கொண்டு, ஆகமத்தின்படி - சிவாகமவிதிப்படி, ஏரகன் பாதம் அர்ச்சிப்ப - திருவேரகத்தில் வீற்றிருக்கும் சுவாமிநாதசுவாமியின் திருவடிகளைப் பூசிப்பதை, திரமாக இருப்பீர் - நிலையாகக் கொண்டிருப்பீராயின், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், பல வினை உபத்திரம் - பலவகை வினைகளினால் உண்டாகும் துன்பங்கள், அகம் அடையாது - இவ்வுடலைவந்து பொருந்தாவாம், மாகத்து - விண்ணுலகிலுள்ள, அமரர்க்கு - தேவர்களுக்கும், அரிய பதம் வரும் - கிடைத்தற்கு அருமையான பதங்கள் கிடைக்கும் என்றவாறு.

பதஞ்சலி யாரிவ ரென்னக்
கலைகள் பலபடித்துப்
பதஞ்சலி யாதற் பகலாய்
நடந்துமுன் பாடினுநற்
பதஞ்சலி யாதரைக் காசுங்
கொடார்தமைப் பற்கெஞ்சியேற்
பதஞ்சலி யாதலி னுலே
ரகன்மலர்ப் பாதத்தையே. 19

இ - ள் : பதஞ்சலியார் இவர் - ஆதிசேடன் அம்சமாகிய பதஞ்சலிமுனிவர் இவரென்று, பதஞ்சலியாது - கால்கள் சலிப்படையாமல், அல் பகல் ஆய் நடந்து - இராப்பகலாய் நடந்துசென்று, பல கலைகள் படித்து - பலவகையான நூல்களையும் அவருக்குப் படித்துக்காட்டி, நல் பதம் சலியாது - நல்ல சொற்களில் குறைவுபடாமல், முன் பாடினும் - முன்னே பாடினுலும், அரை காசும் கொடார்தமை - அரைக்காசும் கொடாத உலோபிகளிடத்து, பல் கெஞ்சி ஏற்பது என்ன - பல்லைக் காட்டிக்

கெஞ்சிநின்று இரத்தலினுல் பயன் யாது, ஆதலினுல் ஏரகன் மலர் பதத்தை அஞ்சலி - ஆதலால் திருவே ரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியினது செந்தாமரை மலர்போன்ற திருவடிகளே வணங்குவா யாக என்றவாறு.

**வேறுவகையாகவும் இப்பாடலுக்கு உரை கூறுவர்.**

***இ - ள்:*** ஏரகன் மலர் பதத்தை அஞ்சலியாதலினுல் - திருவேரகத்தில் வீற்றிருக்கும் முருகக்கடவுளினது மலர்போலும் திருவடிகளே வணங்காத காரணத்தினுல், இவர் பதஞ்சலியார் என்ன - இவர் ஆதிசேடன் என்று பிறர் சொல்ல, கலேகள் பல படித்து - பல நூல்களேயும் படித்துச் சொல்லி, பதம் சலியாது - கால்கள் சலிக்காமல், அல் பகலாய் நடந்து - இராப்பகலாய் நடந்து, முன் பாடினும் - முன்னே நின்று பாடினுலும், நல் பது அஞ்சு அல் - நல்ல பத்து அஞ்சுகாசுகள் அல்லாமல், யாதும் அரை காசும் கொடார்தமை - யாதாயினும் அரைக் காசும் கொடாத லோபர்களே, பல் கெஞ்சி ஏற்பது - பல்லேத் திறந்து காட்டிக் கெஞ்சிநின்று இரத்தலே தொழிலாம் என்றவாறு.

முன்பு முருகக்கடவுளேத் துதித்து வணங்கிப் போற்ருத காரணத்தால் கல்விச்செல்வம் இருந்தும் வறுமையுற்றுக் கல்லாத புல்லர்பால் அலேந்து திரிந்து அவரைப் பல படியாகப் பாடித் துதித்தாலும் இரங்கி அரைக் காசும் கொடார். இரத்தல் தொழிலின் இழிவுக்குக் காரணமறிக.

பாத கமல மகற்றே
    ரகாபன் னிருகைக்கடம்
பாத கமலந் திகழ்சோதி
    யீறில் பயன் றரு நின்

பாத கமலந் தராவிடின்
முத்திப் பதத்தைவிரும்
பாத கமலங் கலோதியர்
மாலிற் படிந்திடுமே. 20

இ-ள்: பாதக மலம் அகற்று ஏரகா - பாதகத்தையும் மலங்களையும் போக்குகின்ற திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, பன்னிரு கை கடம்பா - பன்னிரண்டு திருக்கரங்களையுடைய கடப்பமலர் மாலையை அணிந்தவரே, அமலம் திகழ்தரு சோதி - பரிசுத்தமாகிய சோதி சொரூபரே, ஈறு இல் பயன் தரும் - அழிதல் இல்லாத பயனைக்கொடுக்கும், நின் பாத கமலம் தராவிடின் - உம்முடைய திருவடித்தாமரைகளைத் தந்தருளாவிடின், அகம் - அடியேன்மனம், முத்தி பதத்தை விரும்பாது - முத்திநிலையை விரும்பாமல், அலங்கல் ஓதியர் - மலர்மாலையைத்தரித்த கூந்தலையுடையபெண்களுடைய, மாலில் படிந்திடும் - காமமயக்கத்தில் மூழ்கிவிடும்; ஆகலின் திருவடிகளைத் தந்தருளும் என்றவாறு.

படிகடந் தான்றிரு வேரக
னாமம்பல் காலுநெஞ்சே
படிகடந் தானிலை யென்றுன்ன
னான்கு பதங்களெனும்
படிகடந் தானந்த முத்தியைச்
சேர்வைமெய்ப் பத்திதனிற்
படிகடந் தான மெனவிருந்
தாலென் பயன்றருமே. 21

இ-ள்: நெஞ்சே - மனமே, கடந்தான் - உலகங்களைக் கடந்தவனும், திருவேரகன் நாமம் - திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவனுமாகிய சுவாமிநாதசுவாமியின் திருநாமங்களை, பல்காலும் படி - பலமுறையும்

உச்சரிப்பாயாக, படிகள் தந்தானிலை என்று உன்னல் - மேலான பதவிகளைக் கொடுத்தருளினுனில்லை என்று நினையாதே, நான்கு பதங்கள் எனும் படி கடந்து - சாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என்னும் நான்கு பதங்களையும் கடந்து, ஆனந்த முத்தியை சேர்வை - ஆனந்தத்தைத் தரத்தக்க மோட்சத்தை அடைவாய், (ஆதலால்) மெய் பத்திதனில் படி - உண்மையாகிய பத்தியில் மூழ்குவாயாக, கடம் தானம் என இருந்தால் - காடே இடமாகும் என்று நினைத்துத் தவம் செய்துகொண்டிருந்தால், என் பயன் தரும் - அது யாது பயனைக்கொடுக்கும் என்றவாறு.

மனம் வாக்குக் காயங்களைக் கடந்து நிற்பவர் ஆகலின் கடவுள்; அவர் மாயா கருவி கரணங்களுக்கு எட்டாதவர். கடம் - காடு.

## தலைவன் தலைவிக்கு உரைத்தல்

தருமா விதனச் சுரந்தாண்
டினமினித் தண்ணிழற்பந்
தருமா விதந்தரு காவியும்
வாவியுஞ் சாலைமல்க
தருமா விதனயர் வுந்தீரு
மேரகன் சாரன்மலர்த்
தருமா விதனரு கேபாடு
மின்னிசைத் தானமின்னே. 22

**இ - ள் :** ஏரகன் சாரல் - திருவேரகத்துச் சுவாமி நாத சுவாமியினது மலைச்சாரலில், மலர் தரு மா - மலர்கள் பொருந்திய மரங்களிலிருக்கின்ற வண்டுகள், இதன் அருகே பாடும் - இதன் பக்கத்திலே பாடுகின்ற, இன் இசை தானம் - இனிய இசையையுடைய இடத்தில்

வசிக்கும், மின்னே-மின்னற்கொடி போன்ற பெண்ணே, மா விதனம் தரும் - பெருந்துன்பத்தை விளைவிக்கும், சுரம் தாண்டினம் - பாலை நிலத்தைக் கடந்தோம்,இனி தண் நிழல் பந்தரும் - இனிமேல் குளிர்ந்த நிழலைத்தரும் நீர்ப்பந்தர்களையும், மா விதம் தரும் காவியும் - சிறந்த பலவகைப்பட்ட சோலைகளையும், வாவியும் - குளங் களையும், சாலை மல்க தரும் - சாலைகள் நிறையக் கொடுக்கும், ஆவிதன் அயர்வும் தீரும் - உயிரினது தளர்ச்சியும் நீங்கும் என்றவாறு.

மா இதம் தரும் காவியும் - மிக்க நன்மையைச் செய்யும் சோலையும் எனினுமாம். மா - வண்டு. விதனம் - விசனம். ஆவி - உயிர்.

### தோழி அன்னத்தொடு புலந்துரைத்தல்

தானவ னங்க மலையும்
கடலுந் தகர்சண் முகத்
தானவ னங்கடப் பந்தார்
கொணர்கில சந்துளெண்ணி
தானவ னங்கணல் லேரகஞ்
சென்று தழலிற்கடி
தானவ னங்க சரத்தோ
டிளைக்குமித் தார்குழற்கே. 23

இ - ள்: தழலில் கடிது ஆன - நெருப்பைவிடக் கொடிதாகிய, அனங்க சரத்தோடு - மதன் அம்பினுல், இளைக்கும் - உடல் மெலியும், இ தார் குழற்கு - மாலை பொருந்திய கூந்தலையுடைய இப்பெண்ணுக்கு, சந்து உள் எண் - தூது போதற்கு மனத்தில் எண்ணுகின்ற, நிதான அனங்கள்-நிதானத்தையுடைய அன்னப்பறவை கள், நல் ஏரகம் சென்று - சிறந்த திருவேரகத்தை

யடைந்து, தானவன் - சூரபன்மனுடைய, அங்கம் மலையும் - உடலாகிய மலையையும், கடலும் தகர் - அவன் மாமர வடிவாய் நின்று உழக்கிய கடலையும் சிதைத்தருளிய, சண்முகத்தான் அவன் - ஆறு திருமுகங்களையுடைய அக்கடவுளின், அம் கடப்பம் தார் கொணர்கில - அழகிய கடப்பமலர்மாலையைக் கொண்டுவந்ததில்லை என்றவாறு.

அனங்கன் - அங்கமில்லாதவன். அன்னம்=அனம்: இடைக்குறை. சந்துசொன் னிதான அனங்கள் எனவும் பாடம். தழல் - நெருப்பு. சரம் - அம்பு: மலரம்புகள் என்க. தார்குழல்: அன்மொழித்தொகை. மலையையும் கடலையும் தகர்த்தமை:

"கறங்குதிரைக் கருங்கடலும் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரூரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோ ராற்று
மறங்குலவு மகத்தழலு மவுணமட
வார்வயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம்."

(பரஞ்சோதி - திருவிளை).

தாரக லாதனி மாயூர வீர சதுமறைவித்
தாரக லாதவ ருள்ளம் புகாத தலைவதவத்
தாரக லாத திருவே ரககுறத் தையலெனுந்
தாரக லாதவன் சேய்வீசு பாசத் தளையறவே. 24

இ-ள்: கல் ஆதவன் சேய் - மலைபோலும் சூரியனுடைய புத்திரனாகிய இயமன், வீசு பாசம் தளை அற - வீசுகின்ற பாசத்தின் கட்டு நீங்கும்பொருட்டு, தார் அகலா - மாலையைத் தரித்த மார்பையுடையவரே, தனி

மாயூர - ஒப்பற்ற மயில் வாகனத்தையுடையவரே, வீர - வீரனே, சது மறை வித்தார - நான்கு வேதங்களாலும் விரிவாகச்சொல்லப்படும் பொருளாகவுள்ளவரே, கலாதவர் - கல்வியறிவில்லாத மூடருடைய, உள்ளம் புகாத தலைவ - மனத்தில் புகாத தலைவரே, தவத்தார் அகலாத திருவேரக - தவத்தையுடைய முனிவர்கள் விட்டுநீங்காத திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, குற தையல் தார - குறப்பெண் என்று சொல்லும் வள்ளிநாயகியை மனைவியாகக்கொண்டவரே, எனும் - என்று சொல்லித் துதிசெய்யுங்கள் என்றவாறு.

கல்-மலை. ஆதவன் சேய் - சூரியபுத்திரன். பாசத்தளை - பாசக்கட்டு. தார் - மார்பில் அணியும் மாலை. மாயூரம் - மயில். கல்லாதவர் = கலாதவர் : தொகுத்தல். தாரம் - மனைவி.

**வேக மடங்க வலைப்புன் பிறப்பில் விடுக்குமவி**
**வேக மடங்கப் பகர்மின் கமலம் விளக்கெடுப்ப**
**வேக மடங்கண் வளர்வய லேரக வேலன்வய**
**வேக மடங்க லுருவான் மருகன்றன் மேற்கவியே.**

இ - ள்: கமலம் விளக்கு எடுப்ப - தாமரை மலர்கள் தீபம் போல ஒளிவிட, கமடம் கண்வளர் - ஆமைகள் நித்திரை செய்யும், வயல் ஏரக வேலன் - வயல்கள் சூழ்ந்த திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள வேலாயுதமுடையவரும், வயம் - வெற்றி பொருந்திய, ஏக மடங்கல் உருவான் - ஒன்றாகிய நரசிங்கவுருக் கொண்ட திருமாலின், மருகன் தன்மேல் - மருகராகிய சுவாமிநாத சுவாமியின் மீது, கவி - பாடல்களை, வேகம் மடங்க அலை-அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைக்கதிகளிலும் செல்லும் வேகமானது மடங்கி மடங்கி வருமாறு அலையும், புன் பிறப்பில்

விடுக்கும் - அற்பமாகிய பிறப்பு இறப்புக்களில் செலுத்தும், அவிவேகம் அடங்க - அறியாமையானது நீங்கும்படி, பகர்மின் - சொல்லுங்கள் என்றவாறு.

கமடம் - ஆமை. வயம் - வெற்றி. மடங்கல் - சிங்கம்: நரசிங்கம் என்க. அவிவேகம் - அறியாமை.

**களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்**

கவிக்குஞ் சரம்பற்று முன்பற்ற
மின்கை கருதலரூங்
கவிக்குஞ் சரங்கொண் டுயிரளித்
தான்கன கச்சுடிகை
கவிக்குஞ் சரப நிகரோர்மன்
செந்நெற் கதிரொடுசங்
கவிக்குஞ் சரமணி காட்டும்பொன்
னேரகன் காவகத்தே. 26

இ - ள்: செந்நெல் கதிரொடு - செந்நெற் கதிர்களேயும், சரம் சங்கு அவிக்கும் - ஊர்ந்துசெல்லும் சங்குகளேயும் அழியச்செய்து, மணி காட்டும் - முத்துக்களே வெளிப்படுத்தும், பொன் - அழகிய, ஏரகன் கா அகத்து- திருவேரகத்தில் உள்ள முருகக்கடவுளின் சோலேயினிடத்து, கனகம் சுடிகை கவிக்கும் - பொன்முடியைத் தரித்த, சரபம் நிகர் ஓர் மன் - சரபமூர்த்தியையொத்த ஒரு தலேவன், கவி குஞ்சரம் பற்றும் முன்பு - கவிந்து வந்த யானே என்னேப் பற்றுதற்கு வருமுன்பே, அற்றம் - சமயம் பார்த்து, கருதலர் ஊங்கு அவிக்கும் - பகைவரை அழிக்கும், மின் சரம் கை கொண்டு - ஒளியையுடைய அம்பைக் கையிலே கொண்டு, உயிர் அளித்தான் - என் உயிரைக் காப்பாற்றினுன் என்றவாறு.

முத்துப்பிறக்குமிடங்களில் செந்நெல்லும், சங்கும் கூறப்படும். சரபம் - எண்காற்புள். சரம் - இயங்கியற் பொருள். அசரம் - நிலையியற்பொருள். கனகம்-பொன். சுடிகை - உச்சி, முடி. குஞ்சரம் - யானை. அற்றம் - சமயம். கருதலர் - பகைவர். சரம் - அம்பு.

காவல ரிக்கு வலையத்திற் காகுவர் காயந்தகன்
காவல ரிக்கும் வலத்தர் நலத்தர் கவினென்றுநீங்
காவல ரிக்கு மதிகாந்தி யார்விண் கடந்தெழுந்த
காவல ரிக்கு வனஞ்சூழு மேரகங் கண்டவரே. 27

இ-ள்: விண் கடந்து எழுந்த அலர் கா - ஆகாயத்தைக் கடந்து மேலெழுந்த மலர்கள் பொருந்திய சோலைகளும், இக்கு வனம் - கருப்பஞ்சோலைகளும், சூழும் ஏரகம் கண்டவர் - சூழ்ந்து விளங்கும் ஏரகத்தைத் தரிசித்தவர்கள், இ குவலையத்திற்கு காவலர் ஆகுவர் - இந்த நிலவுலகத்தையாளும் அரசராவார்கள், காய் அந்தகன் - கோபிக்கும் இயமனுடைய, காவல் அரிக்கும் வலத்தர்-காவலை அழித்தொழிக்கும் வன்மையையுடையராவார், நலத்தர் - எல்லா நலங்களும் கொழித்தற்குரியராவார், கவின் - அழகு, என்றும் நீங்கா - எக்காலத்தும் கெடாத, அலரிக்கும் அதி காந்தியார் - சூரியனை விட மிகுந்த ஒளியினையுடையராவார் எ-று.

திருவேரகத்தில் முருகவேளைத் தரிசித்தோர் பெறும் பேறு கூறுகின்றார். அலரி - சூரியன். காந்தி - ஒளி. காவலர் - அரசர். அந்தகன் - இயமன்.

கண்டஞ்சங் கந்தர ளந்தந்த
மோதி கவினடைசொற்
கண்டஞ்சங் கந்தர மாமட
வார்மயல் கைத்துப்புவிக்

கண்டஞ்சங் கந்தநிற் கென்றே
ரகந்தொழு கன்னெஞ்சமே
கண்டஞ்சங் கந்தர மாக்கும்
பிறப்பெனுங் காய்வினையே. 28

இ-ள்: கல் நெஞ்சமே - கல்லையொத்த மனமே, கண்டம் சங்கம் - கழுத்து சங்கைப்போன்றும், தந்தம் தரளம் - பற்கள் முத்தைப் போன்றும், ஓதி கந்தரம் - கூந்தல் மேகத்தைப்போன்றும், கவின் நடை அஞ்சம் - அழகியநடை அன்னத்தைப்போன்றும், சொல் கண்டு ஆம் - சொற்கள் கற்கண்டைப்போன்றும் ஆகின்ற, மடவார் மயல் கைத்து - பெண்கள்மேல் உண்டாகின்ற மயக்கத்தை வெறுத்து, கந்த - சுவாமியே, நிற்கு தஞ்சம் என்று - தேவரீருக்கு யான் அடைக்கலமாவேன் என்று சொல்லி, ஏரகம் தொழு - திருவேரகத்தை வணங்குவாயாக, புவிக்கண் - நிலவுலகத்திலே, அஞ்சு - அஞ்சுதற்குக் காரணமான, பிறப்பு எனும் காய் வினை - பிறப்பு என்று சொல்லப்படும் கொடிய வினைகள், கண்டு அங்கு அந்தரம் ஆக்கும் - கண்டு அப்பொழுதே முடிவாக்கும் என்றவாறு.

அந்தரம் - முடிவு, ஆகாயம்: இல்லாமற்செய்யும் என்க.

## தோழி கூற்று

காயந் தியங்கி புனைந்தே வருமதி கண்டுசரு
காயந் தியங்கிய சொல்லா யினளயற் கன்னியர்ச
காயந் தியங்கிரி மன்னேர காவந்து காமடந்தை
காயந் தியங்கி யலையா தசுரர்க் களைந்தவனே. 29

இ-ள்: அசுரர் களைந்தவன் - அசுரர்களை அழித்தருளிய முருகவேள், மன் அம் கிரி ஏரகா - நிலை

பெற்றிருக்கும் அழகிய ஏரகத்தில் உள்ள தலைவனே, மடந்தை - எங்கள் தலைவி, காய் அந்தி அங்கி புனைந்து வரும் - காய்கின்ற மாலைப்பொழுதாகிய நெருப்பை அணிந்து வருகின்ற, மதி கண்டு - சந்திரனைப்பார்த்து, சருகு ஆய்-காய்ந்து போன இலையைப்போல, தியங்கிய-(சோர்ந்து)மயக்கமுற்ற, சொல் ஆயினள் - சொற்களை யுடையவளானாள், (அதனைக்கண்டு) அயல் கன்னியர் - அயலிலுள்ள தோழியர்கள், சகாயம் - செய்யும் உப சாரங்களெல்லாம், தீ - நெருப்புப்போலச் சுடுவதாம், (ஆதலால்)காயம் தியங்கி அலையாது - உடம்பானது சோர்வுற்று அவள் வருந்தாமல், வந்து கா - வந்து பாதுகாத்தருளுக என்றவாறு.

காய் அந்தி என்றது சுடுகின்ற மாலைப்பொழுதை; கணவனைப்பிரிந்து தனித்திருக்கும் மகளிர்க்கு மாலைக் காலம் மிக்க துன்பம் செய்யும்; காமத்தை அதிகரிக்கச் செய்யும். அந்தி அங்கி - மாலையாகிய நெருப்பு; மாலை யாகிய சட்டை எனினுமாம். மாலைக்காலம், நிலாத் தோற்றம் இவை காமுகர்க்குப் பெரும்பகை. சந்திரன் காமத்தை அதிகரிக்கச்செய்து சுடுதலால் தளிர்போன்ற மேனி சருகானாள், மயக்கமுற்றாள், சொற்கள் தடு மாறினாள் என்க. தோழியர் அதைப்பார்த்துச் சைத்திய உபசாரம் செய்யத்தொடங்கினர்.குளிர்ந்த சந்தனத்தை அப்பக் காமவெப்பத்தை மிக உண்டாக்கியது; ஆகலின் அஃது அவளுக்குத்தீயாயிற்று. ''ஆயிரஞ்சால், அத்தனை வேதனை அப்புவள் சாந்தென்றனலரைத்தே'' (திருவரங் கத்தந்தாதி - 24) புனைந்து - தரித்து.

தவரா கமலையை முன்வளைத் தேபுரந் தன்னையெரித்
தவரா கமலை பணியா ரெகினந் தணிவில்சினத்
தவரா கமலைய நின்றார்க்கு ஞானந் தனைமுன்பகர்ந்
தவரா கமலைமன் னேரக வென்றுரை தாழ்மனதே.

இ - ள்: மனதே - நெஞ்சமே, முன் - முற்காலத்திலே, தவர் ஆக - வில்லாக, மலையை வளைத்து - மேருமலையை எடுத்து வளைத்து, புரம் தன்னை எரித்தவர் - திரிபுரத்தைச் சாம்பராகச் செய்தவரும், கமலை - வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் நாமகளுடைய, பணி ஆர் எகினம் - தொண்டைக் கொண்டருளும் அன்னமாகிய பிரமதேவரும், தணிவு இல் சினத்த வராகம் - நீங்காத கோபத்தையுடைய பன்றியுருக் கொண்ட திருமாலும், அலைய நின்றார்க்கு - (முறையே அன்னம் திருமுடியையும் பன்றி திருவடியையும் தேடிச் சென்று) வருந்தும்படி (அனற்பிழம்பாக) நின்றருளிய சிவபெருமானுக்கு, ஞானம் தனை முன் பகர்ந்தவர் - ஞானோபதேசம் செய்தவராகிய இறைவரே, கமலை மன் ஏரக - செந்தாமரை மலரிலுள்ள சீதேவி நிலைபெற்ற திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவரே, என்று உரை - என்றுசொல், தாழ் - வணங்கு என்றவாறு.

கமலை - தாமரையில் வீற்றிருப்பவள்; நாமகள் - வெண்கமலை, திருமகள் - செங்கமலை; கமலம் - தாமரை. தவர் - வில். மனமே! உரை, தாழ் என்க. வராகம் - பன்றி. எகினம் - அன்னம்.

தேகா லையந்திர மாகப்
பலகற்பந் தின்றுகும்பித்
தேகா லையந்திரு நாட்டம்வைத்
தென்கதி சேர்வையிப்போ
தேகா லையந்தி தொழுதிரு
வேரகத் தேவை நினைந்
தேகா லையந்திறு சொற்போன்
மெலிந்துநெஞ் சேயஞ்சுமே. 31

**இ - ள் :** ஐ அந்து இறு சொல்போல் - கோழை யாகிய கிணற்றில் விழுந்து கிடக்கும் சொல்லைப்போல, மெலிந்து அஞ்சும் நெஞ்சே - இளைத்து அஞ்சுகின்ற மனமே, தேக ஆலையம் திரம் ஆக-உடம்பாகிய வீட்டை நிலையுள்ளதாகப் பெரிதும் மதித்து, பல கற்பம் தின்று - பலவகையான கற்பங்களையும் உண்டு, காலை கும்பித்து - பிராணவாயுவைக் கும்பகம் செய்து தேக்கி, திருநாட்டம் வைத்து - பிரமரந்திரத்திலே குறிக்கொண்டு செலுத்தி (யோகம் செய்வதனாலே), என் கதி சேர்வை - என்ன பேற்றைப்பெறுவாய், (ஆதலின்) திரு ஏரகம் தேவை நினைந்து இப்போதே ஏகு - திருவேரகத்திலே வீற்றிருக்கும் சுவாமிநாத சுவாமியை எண்ணி இப்பொழுதே அங்கே செல், காலை அந்தி தொழு - காலைச்சந்தியினும் மாலைச்சந்தியினும் தரிசித்து வணங்குவாயாக எ - று.

ஐ - கோழை. அந்து - கிணறு, ஒருவகைப்பூச்சி. கோழையிலகப்பட்ட அந்து என்னும் பூச்சி மெலிவது போல் எனப் பொருள் கொள்ளலுமாம். தேக ஆலையம்- ஊனுடம்பாலையம் என்றபடி. கால் - பிராணவாயு. கும்பித்தல் - அடக்குதல். நாட்டம் - குறிக்கோள். தேகாலையம்: தீர்க்கசந்தி. ஆலையம் - ஆலயம்.

அஞ்சங் கரிக்கு மருகனை
யேரகத் தண்ணறனை
அஞ்சங் கரிக்குநன் மைந்தனைப்
போற்றுநெஞ் சேயன்பினால்
அஞ்சங் கரிக்கு நிகர்நடை
கொங்கைய ரால்வருநோய்
அஞ்சங் கரிக்கும் பவந்தீர
வேலை யனுப்புவனே. 32

**இ - ள் :** நெஞ்சே - மனமே, அம் சங்கு அரிக்கு மருகனை - அழகிய பாஞ்ச சன்னியம் என்னும் சங்கை ஏந்திய திருமாலுக்கு மருகரும், ஏரகத்து அண்ணல்தனை- திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள பெருமையிற் சிறந்தவரும், அம் சங்கரிக்கு நல் மைந்தனை - அழகுபொருந்திய உமாதேவியாருக்குச் சிறந்த புத்திரருமாகிய முருகக் கடவுளை, அன்பினல் போற்று-அன்பு பொருந்தத் துதிப்பாயாக, (அவ்வாறு நீ துதித்தால்) அஞ்சம் நடை - அன்னப்பறவையை ஒத்த நடையினையும், கரிக்கு நிகர் கொங்கையரால் - யானைத் தந்தத்தையொத்த நகில்களையும் உடைய மகளிர்களால், வரும் நோய் - உண்டாகின்ற காமமயக்கமும், அங்கு அஞ்சு அரிக்கும் பவம் - அவ்விடத்து அஞ்சும்படி கொல்லும் பிறவித்துன்பமும், தீர - நீங்கும்படி, வேலை அனுப்புவன் - தமது திருக்கரத்திலே தங்கும் வேற்படையை விடுத்தருளுவர் எ-று.

அஞ்சம் கரிக்கு நிகர் நடை கொங்கை; முறை நிரனிறை. அஞ்சம் - ஹம்ஸம். கரி - கரத்தையுடையது என்னும் காரணக்குறி. அஞ்சு அரிக்கும் பவம் - பஞ்சேந்திரியங்களால் துன்புறும் பிறவி எனினுமாம். மகளிர் நகில்களுக்கு யானைத் தந்தமும், மத்தகமும் உவமை.

### குலமுறைகூறி மறுத்தல்

புவனங் கடாவுசெங் கோன்மன்ன
 நீநற் புதியகரும்
புவனங் கடாமென் றுழும்பண்ணை
 நாடனிப் பூவைசுனைப்
புவனங் கடாநிறை நாட்டின
 ளாரணம் போதற்குச்செப்
புவனங் கடாதை யெனுந்திரு
 வேரகன் பொன்மலைக்கே. 33

இ - ள்: நங்கள் தாதை - எங்களுடைய பரம பிதாவாயுள்ளவரும், ஆரணம் - வேதத்தினுட்பொருளை, போதற்கு - திருமாலின் உந்தித்தாமரையிலுள்ள பிரமதேவனுக்கு, செப்புவன் எனும் - உபதேசம் செய்வேன் என்னும், திருவேரகன் - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியினது, பொன் மலைக்கு - அழகிய மலையினிடத்துள்ள, புவனங்கள் தாவு செங்கோல் மன்ன - எல்லா உலகத்தும் செல்லுகின்ற செங்கோல் முறைமையையுடைய தலைவனே, நீ நல் புதிய கரும்பு வனம் - நீ நல்ல புதிதாகிய கருப்பங்காட்டை, கடா மென்று - எருமைக்கிடாக்கள் மென்று தின்று, உழும் பண்ணை நாடன் - உழுகின்ற வயல்கள் சூழ்ந்த மருதநிலத் தலைவன், இ பூவை - இந்த நாகணவாய்ப் புட்போலும் தலைவி, சுனை - சுனைகளிலே, கடா புவனம் - மதநீர், நிறைநாட்டினள் - நிறையப்பெற்ற மலைநாட்டின்கண் உள்ளவள் (ஆகலின்) உங்கள் குலத்துக்கு ஒவ்வாதவளாவாள் என்றவாறு.

ஆரணம் - வேதம். போதன் - பிரமதேவன்: போது - தாமரைமலர் என்க. புவனம் - உலகம், நீர். வனம் - காடு. பண்ணை - வயல். பூவை - நாகணவாய்ப்புள். கடா புவனம் - மதநீர். கடாம் - மதம்.

மலைக்கு மராவிடம் போற்புலன்
போம்வழி வந்துபின்னு
மலைக்கு மராமரஞ் செற்றோன்
மருக வனக்குறவ
மலைக்கு மராள நடைத்தெய்வ
யானைக்கு மன்னவருள்
மலைக்கு மரா திரு வேரக
னேயென்றன் மான்மனமே. 34

இ-ள்: மராமரம் செற்றோன் மருக - இராமாவதார காலத்திலே ஏழு மராமரங்களையும் ஒருசேரத் துளைத்து அழியும்படி செய்த திருமாலின் மருகனே, வனம் குற அமலைக்கும் - வனத்திலுள்ள குறவர் குடியில் தோன்றிய தூய வள்ளியம்மையாருக்கும், மராளம் நடை தெய்வயானைக்கும் - அன்னத்தினது நடைபோன்ற நடையினை உடைய தெய்வயானையம்மையாருக்கும், மன்ன - நாயகரே, மலை குமரா - குன்றுதொறாடல் புரியும் குமாரக்கடவுளே, திருவேரகனே - திருவேரகம் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளுபவரே, என் தன் மான் மனம் - என்னுடைய மான்பிணைபோலும் பெண்ணினது மனத்தை, புலன் - ஐம்புலன்களும், அராவிடம்போல் - பாம்பினது நஞ்சத்தைப்போல, போம்வழி வந்து மலைக்கும் - போகும் வழியிலே வந்து தடுமாறுதலைச் செய்யும், பின்னும் அலைக்கும் - அதன் பின்பும் வருந்தச்செய்யும், (ஆதலால்) அருள் - அவை அவ்வாறு வருத்தஞ்செய்யாமல் கருணைவைத்தருளும் என்றவாறு.

இராமன் மராமரம் செற்றமை: "ஏழுமா மரமுருவிக் கீழுலக மென்றிசைக்கும், ஏழுமூடு புக்குருவிப் பின்னுட னடுத்தியன்ற, ஏழிலாமையான் மீண்டதவ் விராகவன் பகழி......" (மராமரப்படலம் - 138.)
மராளம் - அன்னப்பறவை.

மனவா ரணங்கு திகழீசன்
மைந்தவென் மட்டடங்கா
மனவா ரணங்கை வசமாவ
தென்றுசொன் மாமலராண்
மனவா ரணம்பர வேரக
னேதெய்வ யானைவள்ளி
மனவா ரணங்கரத் தேந்திய
சேவக வானவனே. 35

இ - ள் : மன - (திருத்தொண்டர்களுடைய) மனத்தின் கண் வீற்றிருப்பவரே, ஆர் அணங்கு திகழ் ஈசன் மைந்த - உமாதேவியார் விளங்கும் ஒரு பாதியை யுடைய சிவபெருமானது திருக்குமாரரே, மா மலராள் மன் - பெருமைதங்கிய செந்தாமரை மலரிலே தங்கி யிருக்கும் இலக்குமி தேவி நிலைபெற்ற, அ ஆரணம் பரவு ஏரகனே - அழகிய வேதங்களால் துதிக்கப்பெற்ற திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவரே, தெய்வயானை வள்ளி மன - தெய்வயானையம்மையாருக்கும் வள்ளி யம்மையாருக்கும் நாயகரே, வாரணம் - கோழிக் கொடியை, கரத்து ஏந்து - திருக்கரத்திலேந்திய, சேவக வானவனே - வீரம் பொருந்திய தேவரே, என்மட்டு - என்னளவிலே, அடங்கா - அடங்காமல் சுழலும், மன வாரணம் - மனமாகிய யானை, கைவசமாவது என்று - என் கைவசப்பட்டு அடங்கி நடப்பது எக்காலத்திலே, சொல் - என்று சொல்லியருளும் என்றவாறு.

மன - மனத்தில் உள்ளவர். மாமலராள் - இலக்குமி தேவி: ''மாமலராள் நோக்குண்டாம்'' (வாக்குண்டாம்) ஆரணம்-வேதம். ஆரணம் பரவுதலாவது : வேதத்திலே 'சதாசிவோம்' என ஒருமுறை சொல்ல, 'சுப்ரமண் யோம்' 'சுப்ரமண்யோம்' 'சுப்ரமண்யோம்' என்று மும் முறை சொல்வதை நோக்கியதாம் என்க. வாரணம் - கோழி, யானை. மன்ன - மன : தொகுத்தல். நாயகரே என்றபடி. ஈசன் - எப்பொருட்கும் தலைவன்; சர்வை சுவரிய சம்பன்னன். சேவகம் - வீரம்.

## தோழி ஆற்றுவித்தல்

வானவ னந்த னுலகோ
டெலாமுய்ய மாவைவென்ற
வானவ னந்தன் மருகன்
முருகன் மயிற்பரியான்

வானவ னந்த வனஞ்சூழு
மேரக வள்ளறரு
வானவ னந்த மணமாலை
நீயஞ்சன் மாதரசே. 36

**இ - ள்:** வான (உலகு) அனந்தன் உலகோடு - விண்ணுலகம் பாதலவுலகுடன், எலாம் உய்ய - எல்லா உலகங்களும் உய்யும் பொருட்டு, மாவை வென்ற - மாமரவடிவாகிய சூரபன்மனை வெற்றிகொண்டருளிய, வானவன் - தேவரும், நந்தன் மருகன் - பாஞ்சசன்னிய மென்னும் சங்கைத்தரித்த திருமால் மருகரும், முருகன்- முருகக்கடவுளும், மயில் பரியான் - மயிலை வாகனமாகக் கொண்டு செலுத்துபவரும் ஆகிய சுவாமிநாத சுவாமி வீற்றிருக்கும், வான அ நந்தவனம் சூழும்-ஆகாயத்தை யளாவியுயர்ந்த அழகிய நந்தவனங்களால் சூழப்பட்ட, ஏரக வள்ளல் அவன் - திருவேரகத்திலெழுந்தருளியுள்ள வள்ளலாகிய அந்தப்பெருமான், அந்த மணமாலை தரு வான்-அந்த மணமாலையைக் கொடுத்தருளுவார், மாது அரசே-பெண்ணரசியே, நீ அஞ்சல் - நீ அஞ்சாதே எ-று.

வானம் - விண். அனந்தன் - ஆதிசேடன்; அவன் உலகு பாதலம். மா - மாமரம். நந்து - சங்கு. முருகு - மாறுத இளமை, மாறுத அழகு. பரித்தலின்பரியாயிற்று; பரித்தல் - சுமத்தல், தாங்குதல். மயிற்பரி - மயிலாகிய குதிரை. வான உலகு அனந்தனுலகு என்றது, மேலுலகு கீழுலகு ஆகிய பதினுன்கு உலகங்களையும் என்பார் எலாம் என்றுர். எல்லாம் - எலாம்: தொகுத்தல்.

### பாங்கி கொடுஞ்சொற்கூறல்

மாதனந் தங்க மலைபோல விம்ம மயங்குவள்சும்
மாதனந் தங்க மலைகண்டு நாண வடிவுகொண்ட
மாதனந் தங்க வலைசொல் லியுமினம் வஞ்சகமா
மாதனந் தங்க வளமல்கு மேரகம் வாழ்குகற்கே. 37

இ - ள் : தனம் தங்க - திரவியங்கள் தங்கும்படி, வளம் மல்கும் - வளங்கள் நிறைந்த, ஏரகம் வாழ் குகற்கு-திருவேரகத்தில் வாழ்கின்ற குமாரக்கடவுளுக்கு, தன் அந்தம் - தன்னுடைய அழகை, கமலை கண்டு நாண- திருமகள் பார்த்து வெட்கும்படியான, வடிவு கொண்ட மாது - வடிவத்தைப் பொருந்திய நம்முடைய மகள், மாதனம் - பெரிய நகில்கள், தங்க மலைபோல விம்ம - மேரு மலையைப்போலப் பூரிக்க, சும்மா மயங்குவள் - அடிக்கடி மயக்கம் பொருந்துவாள், அனந்தம் கவலை சொல்லியும் - அவளுடைய முடிவில்லாத கவலைகளை எடுத்துரைத்தும், இனம் - இன்னமும், வஞ்சகம் ஆமா - வஞ்சகம் உனக்குப் பொருந்துமா? என்றவாறு.

இன்னம்=இனம்: தொகுத்தல். குகற்கு - குகனை ஒத்த தலைவனே: உருபு மயக்கம். தனம் - செல்வம். குகன் - அடியார்களுடைய இருதய குகையிலுள்ளவர் என்க. கமலை - இலக்குமி. தங்கமலை - பொன்னுலாகிய மலை. விம்ம - பருக்க. சும்மா=சும்மாது - மூச்சுவிடாமல். வாளா = வாளாது. சும்மல்; இருமல், தும்மல் என்பன போலக் கொள்க. 'சும்மாவிரு சொல்லற வென்றலுமே' அருணகிரிநாதர்.

குகனக மாவை யடுஞ்சே
வகன்முனாங் கோவினுக்காங்
குகனக மாநற் குடைகொண்ட
வன்மரு கன்கொண்டலோங்
குகனக மாளிகை சூழே
ரகனைக்கும் பிட்டுவணங்
குகனக மானெஞ்ச மேநீங்கும்
பாசக் கொடுங்கரவே. 38

**இ - ள் :** நகம் ஆம் நெஞ்சமே - மலையைப்போன்ற வலிய மனமே, குகன் - குகன் என்னும் திருநாமத்தை உடையவரும், அகம் மாவை - செருக்குப் பொருந்திய மாமர வடிவமாகிய சூரபன்மனை, அடும் சேவகன் - கொன்றருளிய வீரரும், முனம் - முன்னொரு காலத்திலே, கோவினுக்கு ஆங்கு உக - பசுக்களுக்கு மகிழ்ச்சி உண்டாக, நகம் - கோவர்த்தனகிரியை, மா நல் குடை கொண்டவன் - பெரிய நல்ல குடையாக எடுத்துப் பிடித்த கண்ணனாகிய திருமாலினது, மருகன் - மருகனும், கொண்டல் ஓங்கு - மேக மண்டலம் வரையில் உயர்ந்து விளங்கும், கனக மாளிகை சூழ் ஏரகனை - பொன்மய மாகிய மாடங்களால் சூழப்பட்ட திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவருமாகிய சுவாநாதசுவாமியை, கும்பிட்டு வணங்குக - கைகூப்பி வணங்கக்கடவாய், பாசம் கொடும் கரவு நீங்கும் - அதனால் பாசமாகிய கொடிய வஞ்சகம் தொலையும் என்றவாறு.

நகம் - மலை. நகம் ஆம் நெஞ்சம் - கல்போலும் வலியமனம்; "நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருக" அகம் - பாவம், செருக்கு, தருக்கு. சேவகன் - வீரன். கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த வரலாறு கண்ணபிரானாக அவதரித்த காலத்தில். கனகம் - பொன்.

கரவாக மஞ்சனங் கொண்டுனைப்
பூசிக்குங் கள்வனயிற்
கரவாக மஞ்சன மான்மரு
கா நின் கழல்பெறல்சக்
கரவாக மஞ்ச நடைமுலை
யாம்வள்ளி காந்தசடாக்
கரவாக மஞ்செறி யேரக
யானெந்தக் காலத்திலே. 39

இ-ள்: அயில் கர - வேலாயுதம் பொருந்திய திருக்கரத்தை உடையவரே, ஆகம்-உடம்பு, மஞ்சு அன-மேகத்தைப்போலுங் கரிய, மால் மருகா - திருமாலின் மருகரே, சக்கரவாகம் அஞ்சம் முலை நடை ஆம் - சக்கர வாகப் புள்ளையும், அன்னப்புள்ளையும் ஒத்த நகில்களையும் நடையையும் உடைய, வள்ளி காந்த - வள்ளியம்மை யாருக்கு நாயகரே, சடாக்கரம் - ஆறெழுத்து மந்திர ஓசையும், ஆகமம் செறி - சிவாகம ஒலியும் பொருந்திய, ஏரக - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, கரவு ஆக - வஞ்சகமாக, மஞ்சனம் கொண்டு - திருமஞ்ச னத்தைக்கொண்டு வந்து, உனைப் பூசிக்கும் கள்வன் யான் - உம்மை வழிபடும் கள்வனாகிய அடியேன், எந்தக்காலத்தில் நின் கழல் பெறல் - எந்தக்காலத்திலே உம்முடைய திருவடிகளை அடைதல் கூடும் என்றவாறு.

அயில் - வேற்படை. மஞ்சு - மேகம். சக்கர வாகத்தையொத்த நகில்கள், அஞ்சத்தையொத்த நடை என்க: முறை நிரனிறை. காந்தன் - கணவன். சடாக் கரம் - ஆறெழுத்துமந்திரம். மஞ்சனம் - அபிஷேகத்துக் குரிய ஜலம். கழல் - திருவடி.

காலனஞ் சத்தி முனிந்தா
லெனநமைக் காயவரும்
காலனஞ் சத்தி கழும்வேல்
விடுப்பன் கமலமலர்க்
காலனஞ் சத்திக் குமேரக
மேவிய கந்தன்றண்டைக்
காலனஞ் சத்தி தருஞ்சேயைப்
போற்றுங் கனவினுமே. 40

இ-ள்: கமலம் மலர் - தாமரை மலர்களிடத்தில் பொருந்திய, கால் அனம் சத்திக்கும் - கால்களையுடைய

அன்னப் பறவைகள் ஒலியைச்செய்யும், ஏரகம் மேவிய கந்தன் - திருவேரகத்தில் வீற்றிருக்கும் கந்தசுவாமியும், தண்டை காலன் - பாதச் சிலம்பை அணிந்து விளங்கும் திருவடிகளை உடையவரும், நம் சத்தி தரும் சேயை - நம்முடைய பராசக்தியாகிய உமாதேவியார் தந்தருளிய முருகக்கடவுளை, கனவினும் போற்றும் - சொப்பனத்திலும் அயராமல் துதி செய்யுங்கள், அத்தி கால் - திருப் பாற்கடலினின்றும் தோன்றிய, அ நஞ்சு - அந்த ஆலகாலவிடம், முனிந்தால் என - கோபித்து எழுந்தாற் போல, நமை காய வரும் - நம்மைக் கொல்லவரும், காலன் அஞ்ச - இயமன் பயப்படும்படி, திகழும் வேல் விடுப்பன் - விளங்குகின்ற வேற்படையை அம்முருகவேள் விடுத்தருளுவர் என்றவாறு.

கமலம் - தாமரை. சத்தித்தல் - ஒலித்தல். தண்டை - பாதச்சிலம்பு. சேய் - முருகக்கடவுள், புத்திரர். அத்தி - திருப்பாற்கடல். கால்-கக்கும், வெளிப்படுத்தும். நஞ்சு - ஆலகாலவிடம். முனிவு - கோபம். காய்தல் - கோபித்தல், கொல்லுதல். காலன் - இயமன்.

**கனவா கவிக்குலச் சீரூர்செல் வத்தைக் கருதசுரர்**
**கனவா கவிக்கும் வடிவேல வள்ளி கணவசிற்க**
**கனவா கவிக்கு வனஞ்சூழு மேரகக் கார்மயில்வா**
**கனவா கவிக்கருள் கந்தாவென் பாயுல கத்தி**
[னெஞ்சே. 41

**இ - ள் :** நெஞ்சே - மனமே, உலகத்தில் - இந் நிலவுலகத்திலே, கனவு ஆக - கனவு போலத் தோன்றி மறையத்தக்க, இ குலம் சீர் ஊர் - இந்தக்குலத்தையும் சிறப்பையும் ஊரையும், செல்வத்தை கருது - செல்வத்தையும் பெரிய சம்பத்தாக நினைக்கின்ற, அசுரர்-அசுரர் களுடைய, கன வாகு-மிக்க தோள் வலியை, அவிக்கும்-

அழியச் செய்யும், வடி வேல - கூரிய வேற்படையை ஏந்தியவரே, வள்ளி கணவ - வள்ளியம்மையாருக்கு நாயகரே, சித் ககனம் ஆக - ஞான ஆகாச சொரூபியே, இக்கு வனம் சூழும் ஏரக - கருப்பஞ் சோலைகளால் சூழப் பட்ட திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவரே, கார் மயில் வாகன - பசிய மயில் வாகனத்தை உடையவரே, கந்தா - கந்த சுவாமியே, வா - அடியேனுக்கு முன்னே எழுந்தருளுவீராக, கவிக்கு அருள் - அடியேன் செய்யும் இந்தப் பாடலுக்குத் திருவருள் செய்யும், என்பாய் - என்று சொல்லித் துதிப்பாயாக என்றவாறு.

அழிந்துபடும் குலம் சிறப்பு ஊர் செல்வம் முதலிய வற்றை நிலையுள்ளனவாகப் பெரிதும் மதித்து என்றபடி. வாகு - தோள். வடி - கூர்மை. சித் - ஞானம். ககனம்- ஆகாயம். இக்கு - கரும்பு. கார் மயில் - கரியமயில் என்க: பச்சை நீலம் கறுப்பு நிறங்களை ஒன்முகக் கூறுதல் கவி மரபு. ''கார் மயில் வாகனனைச், சாந்துணைப் போது மறவாதவர்க்கொரு தாழ்விலையே'' என்முர் அருணகிரி நாதர்.

கத்திக்கத் திக்கு நிகர்விழி
யார் நிதங் கண்டுளுவக்
கத்திக்கத் திக்கிணை யாய் நடக்
கின்றவிற் காமனென்று
கத்திக்கத் திக்குண மில்லாரைப்
பாடியென் கண்டனம்பா
கத்திக்கத் திப்பிய வாரிசெய்
யேரகற் காண்மின்களே. 42

இ - ள்: குணம் இல்லாரை - நல்ல குணம் இல்லா தவர்களை, கத்திக்கு - வாளாயுதத்துக்கும், அத்திக்கு நிகர் - கடலுக்கும் ஒத்த, விழியார் - கண்களையுடைய

மகளிர், நிதம் கண்டு உள் உவக்கும்-நாளும் கண்டு மன மகிழும், அ திக்கு அத்திக்கு - அந்த திக்குயானைக்கு, இணை ஆய் நடக்கின்ற-ஒப்பாக நடந்து செல்கின்ற, வில் காமன் என்று - வில்லையுடைய மன்மதனே என்று துதித்து, கத்தி கத்தி பாடி - கதறிக் கதறிப் பாடி, என் கண்டனம் - என்ன பயனைக் கண்டோம். (ஆதலினால்) பாகு அத்திக்கு - கருப்பஞ்சாற்றுக் கடலுக்கு, திப்பிய வாரி செய் - ஒப்பாக விளங்கும்படி பெருகி ஓடும் வயல் களால் சூழப்பட்ட, ஏரகன் காண்மின்கள் - திருவேர கத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியைத் தரிசியுங்கள் என்றவாறு.

கத்தி - வாளாயுதம். அத்தி-கடல் :பெண்களுடைய கண்களுக்கு வாளும் கடலும் உவமைகள். திக்கு யானை- திசையிலுள்ள யானைகள். காமன் - மன்மதன். வில் - பூவில், கரும்புவில், இரும்புவில். பாகு - வெல்லப்பாகு. செய் - வயல். வாரி - மிகுதி. சுவாமிநாத சுவாமியைக் கண்டு வணங்குவதால் இம்மைப்பேறு மறுமைப்பேறு களை எளிதிலே பெறலாம் என்றபடி.

களவனை யாவி கவர்ந்தோ
னுடலங் கவினுடைமை
களவனை யான்மரு காவேர
காச களாவுயர்நிட்
களவனை யாயினிச் சென்மங்க
ளென்று கழறுமின்கை
களவனை யாதரத் தோடஞ்
சலிப்பக் கதிவருமே. 43

இ - ள் : களவனை ஆவி கவர்ந்தோன் - வஞ்சகத் தன்மையுடையவனாகிய இராவணன் உயிரைப் போக்கி யவனும், உடலம் - திருமேனி, களவு அனைய - களாப்

பழத்தைப்போலும், கவின் உடைமையான் மருகா - அழகினை உடையவனுமாகிய திருமாலின் மருகரே, ஏரகா - திருவேரகத்தில் கோயில்கொண்டருள்பவரே, சகளா-சகளத்திருமேனியையுடையவரே, உயர் நிட்களம் மேலான நிட்கள வடிவுடையவரே, அனையாய் - தாய் போன்றவரே, என்று கழறுமின் - என்று பலபடியாகக் கூறித் தோத்திரம் பண்ணுவீராக, அவனை - அந்தச் சுவாமிநாதசுவாமியை, ஆதரத்தோடு-விருப்பத்துடன், கைகள் அஞ்சலிப்ப - கைகளால் கூப்பி வணங்க, இனி சென்மங்கள் கதி வரும் - (உமக்கு) இனிமேல் வரும் பிறப்புக்கள் அழிந்தொழியும் என்றவாறு.

களவு - திருட்டு, வஞ்சகம். களவன் என்றது சீதா பிராட்டியாரை வஞ்சக வேடங்கொண்டு தூக்கிச்சென்ற காரணத்தால்: ''இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற, வளையெயிற் றிராவணன் வஞ்ச முற்றுவான், முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத், தளையரி தவத்தர்தம் வடிவுந் தாங்கினன்'' (கம்பராமா - ஆரணிய - சடாயு வுயிர் 20). சகளம் - உருவுடைமை. நிஷ்களம் - அருவம். ''அருவமு முருவு மாகி'' என்பது கந்தபுராணம். களவு- களாப்பழம்; கரிய நிறத்துக்குவமை: ''களங் கனியை நிகர் தண்டதரற்கு'' என்றார் சிவப்பிரகாச சுவாமிகள் இயமனை. ஆதரம் - விருப்பம். அஞ்சலித்தல் - கை குவித்து வணங்குதல். சென்மங்கள் என்றார் பிறப்புக் கள் பல ஆதலின். கதி வரும்=கதித்தல் வரும் - செதுக் கப்படும்: பகுதி மாத்திரமாய் நின்றது.

இராவணன்: பிரமபுத்திரரான புலத்திய முனிவரது புத்திரராகிய விச்சிரவ முனிவருடைய குமாரன். கேகசி என்னும் இராக்கத மாதினிடம் பிறந்தவன். பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் உடையவன். இலங் கைக்கு அரசன். இந்திரனையும் வென்று அடக்கியவன்.

அரும்பெருந் தவத்தால் பெருவரங்களைப் பெற்றுச் செருக்குற்றவன் என்க.

வருந்தா மரையயன் வாசவ ஞர்தொழ வாழ்குவர்யா
வருந்தா மரைதிரி கானக் குறவர் மகண்மனங்க
வருந்தா மரைநற் றிருவே ரகரை மருதிருக்கில்
வருந்தா மரைநொடிப் போதுநெஞ் சேசென்ம
[வாரிக்குள்ளே. 44

**இ-ள்:** நெஞ்சே - மனமே, தாம் மரை திரி - தாவிச்செல்லும் மரை என்னும் விலங்குகள் திரிகின்ற, கானம் குறவர் மகள் மனம் கவரும் - காட்டிலுள்ள குறவர் மகளாகிய வள்ளியம்மையாரது மனத்தைக் கொள்ளைகொள்ளும், ஏரகரை - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாதசுவாமியை, தாமரை நல் திரு (ஏரகரை) - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் வசிக்கும் (ஏரகரை) என்க, மருது இருக்கில் - மனத்தால் மறுத்துத் தள்ளாமல் இருப்பாராயின், யாவரும் - எவ்வகைப்பட்டோரும், சென்ம வாரிக்குள் - பிறவியாகிய சமுத்திரத்திலே விழுந்து, அரைநொடி போதும் - அரைநிமிஷகாலமும், வருந்தாம் - துன்புறுத வராய், வரும் தாமர் - பொருந்தும் கவுத்துவமணிமாலையுடைய திருமாலும், ஐ அயன் - அழகிய பிரமதேவரும், வாசவனர் - இந்திரனும், தொழ வாழ்குவர் - வந்து வணங்கும்படி வாழ்வார்கள் என்றவாறு.

தாம் மரை - தாவும் மரை. வள்ளியம்மையார் வேடர் சேரியில் வளர்ந்தமையால் குறவர் மகள் எனப் பட்டார். சென்மவாரி - பிறவிக்கடல். வாசவன் - வசுக்களுக்குத் தலைவன். மருது இருத்தலாவது இடைவிடாது தியானம் செய்தல்; மாறுது எனற்பாலது மருது எனக் குறுகி நின்றது எனினுமாம். மாமலராள் ஆகலின் 'தாமரை நல் திரு' என்ருர்.

### தோழிகூற்று

வாரிக் குவலை வளைத்தே
யுருவிலி வந்துவந்து
வாரிக் குவலயத் தூக்கிணை
யாங்கண் மடந்தைதன்மேல்
வாரிக் குவலைய மெய்யநைந்
தாடமர் வம்பினிச்சொல்
வாரிக் குவலயம் வாழ்த்தே
ரகமலை வாழ்கந்தனே. 45

இ - ள்: இ குவலையம் வாழ்த்து ஏரக - இந்நில வுலகத்திலுள்ளார் துதிக்கும் திருவேரகத்தில் எழுந் தருளியுள்ளவரே, மலை வாழ் கந்தனே - குறிஞ்சி நிலத் தெய்வமாகிய கந்தசுவாமியே, உரு இலி - அனங்கனாகிய மன்மதன், உவலை - தழைத்த, இக்கு வளைத்து வந்து - கரும்பை எடுத்து வில்லாக வளைத்து வந்து, உவந்து ஆடு அமர் - மகிழ்ந்து எதிர்த்து நின்று செய்யும் போரில், வார் இ கு வலயத்துக்கு - நீண்ட இந்தப்பூமியை வளைந் துள்ள கடலுக்கு, இணை ஆம் - ஒப்பாகிய, கண் மடந்தை தன்மேல் - கண்களையுடைய இந்தப் பெண்ணின்மீது, குவலயம் - நீலோற்பல மலராகிய அம்பை, வாரி எய்ய- அள்ளி அள்ளித் தொடுத்தலால், இனி நைந்து - இனி மேல் நொந்து, வம்பு சொல்வார் - பழிமொழிகளைச் சொல்லித் தூற்றுவார்கள் (ஆகலின் இவளைக் கருணை வைத்துக் கா என்க) என்றவாறு.

குவலையம் = குவலயம் - பூமி, நீலமலர். உரு இலி- வடிவமில்லாத மன்மதன். உவலை - தழை. இக்கு - கரும்பு. பூவில், கருப்புவில், இருப்புவில் என்னும் மூவகை வில்லுகளையும் முறையே தேவர்மீதும் மனிதர்மீதும் அரக்கர்மீதும் மன்மதன் வளைப்பான் என்க. வலயம் -

வளையம். வம்பு - வீண்வார்த்தை, பழிமொழி. ''நினைக்கு மரவிந்தம் நீள்பசலை மாம்பூ, அனைத்துணவு நீக்கும் அசோகு - வனத்திலுறும், முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம், கொல்லுமத னம்பின் குணம்'' என்னும் வெண்பா இங்கே அறியத்தக்கது.

கந்தனந் தந்தம் பெறத்தரித்
தான்மரு கன்குழன்மே
கந்தனந் தந்த முலைமலை
யாம்வள்ளி காந்தற்கன்பு
கந்தனந் தந்தமிழ் சொல்லே
ரகந்தொழு கன்னியர்மோ
கந்தனந் தந்தன மென்றுநெஞ்
சேயுட் கருதுவையே. 46

**இ - ள் :** நெஞ்சே - மனமே, கன்னியர் மோகம் - பெண்கள் காரணமாக உண்டாகும் ஆசையே, தன் அந்தம் தனம் என்று-தனக்குரிய அழகாகிய செல்வமாம் என்று, உள் கருதுவை - உனக்குள்ளேயே கருதியிருப் பாய், (அதனல்யாது பயனுண்டாம் ஆகலின்) கந்தன் - கந்தசுவாமியும், நந்து அந்தம்பெற தரித்தான் மருகன்- பாஞ்சசன்னியம் என்னும் சங்கத்தை அழகுபெறத்திருக் கரத்திலேந்திய திருமால் மருகரும், குழல்மேகம் தனம் மலை தந்தம் முலை ஆம் - கூந்தல் மேகமென்றும் நகில்கள் மலையென்றும் பற்கள் முல்லை யரும்பென்றும் சொல்லப் படும், வள்ளி காந்தற்கு - வள்ளியம்மையின் கணவரு மாகிய முருகக்கடவுளுக்கு, அன்பு உகந்து - மெய்யன்பு செய்து, அனந்தம் தமிழ் சொல் - அளவிடப்படாத தமிழ்ப் பாடல்களால் துதிக்கப்படும், ஏரகம் தொழு - திருவேரகத்தை வணங்குவாயாக என்றவாறு.

தனம்-செல்வம், நகில். முல்லை=முலை: தொகுத்தல். காந்தன் - கணவன்.

**கருமங் குலங்கல்வி யெல்லா மறந்து கமலங்கணி**
**கருமங் குலவுநின் ருள்போற்ற லென்று கடலுமரக்**
**கருமங் குலத்த லுறக்கணை யேவுகண் ணன்மருகா**
**கருமங் குலமரு மாளிகை யேரகக் காவலனே. 47**

இ-ள்: கடலும் - சமுத்திரமும், அரக்கரும் - இராக்கதர்களும், அங்கு உலத்தல் உற - (சீராமாவதார காலத்திலே) அவ்விடத்து அழிந்துபடும்படி, கணை ஏவும்- இராமபாணங்களைச் செலுத்திய, கண்ணன் மருகா - திருமாலின் மருகரே, கரு மங்குல் அமரும் மாளிகை - கரிய மேகங்கள் வந்து தங்கும்படியான மாளிகைகளை யுடைய, ஏரகம் காவலனே - திருவேரகப்பதியில் வீற்றிருந்தருளும் தலைவரே, கருமம் குலம் கல்வி - உலக காரியங்கள் சாதி கல்வி முதலிய, எல்லாம் மறந்து - எல்லாவற்றையும் மறந்துபோய், கமலங்கள் நிகரும் - செந்தாமரை மலர்களைப் போலும், அம் குலவு நின் தாள் - அழகுபொருந்தும் உம்முடைய திருவடிகளை, போற்றல் என்று - வணங்கித் துதிப்பது எந்தக்காலமாம் என்றவாறு.

கடலை வற்றச் செய்தமை : சீதாபிராட்டியார் இராவணனாகிய கபட சந்நியாசியால் கவரப்பட்டு இலங்கையிலிருக்கும் செய்தியை அனுமானால் அறிந்தான் சீராமன். வானர சேனைகளுடன் இலங்கையை நோக்கிப் புறப்பட்டுக் கடற்கரையை அடைந்தான். கடலைக் கடக்க வேண்டிய உபாயம் யாதெனச் சிந்தித்தான். தருப்பசயனத்தில் படுத்து ஏழு நாட்கள் தவங் கிடந்தான். கடலரசன் அதனை அறியாமல் உபேட்சையாய் இருந்தான். சீராமன் கோபங்கொண்டு ஆக்கினே

யாத்திரத்தால் கடலை வற்றச்செய்வேன் என்று எடுத்துத் தொடுத்துவிடத் தொடங்கிய அப்பொழுதே வருணன் அஞ்சி ஓடிவந்து சரணமடைந்தான். கடல்மீது அணைகட்ட உடன்பட்டு ஒடுங்கி நின்றான். பின்புசீராமன் வானரங்களைக் கொண்டு சேதுபந்தனம் செய்தருளினன் என்பது வரலாறு.

அரக்கரையழித்தமை: கபந்தன், மாரீசன், கரன், தூஷணன், கும்பகருணன், இராவணன் முதலியோரை அழித்தமையாம்.

### தலைவன் பாகனொடுகூறல்

காவல வாமைக் கடன்மூழ்கி
மேய்ந்தெழு கார்வருமுன்
காவல வாயிற் கலங்குவ
னென்றனள் கன்னிமெய்நீங்
காவல வாமணித் தேர்விரைந்
தோடக் கடாவுகைவா
காவல வாபொன்னி சூழே
ரகத்தன் கனவரைக்கே. 48

இ-ள்: வலவா - தேர்ப்பாகனே, கன்னி - தலைவியானவள், காவல் அவாம் - (தேவேந்திரனுடைய) ஆணையின் விரும்பி அமைகின்ற, மை - மேகங்கள், கடல் மூழ்கி மேய்ந்து-கடலின் கண்ணே முழுகி நீரைக்குடித்து, எழுகார் வரும்முன் - மேலே எழுந்து சஞ்சரிக்கும் கார் காலம் வருவதற்கு முன்பே, கா-காத்துக்கொள்வாயாக, அ(ல்)ல ஆயின் - அவ்வாறு காத்துக் கொள்ளாமற்போயின், கலங்குவன் என்றனள்-நான் துன்புறுவேன் என்று சொன்னாள், மெய் - இது சத்தியமாம், அவா நீங்கா அலவாம்-அவளுடைய ஆசையும் நீங்காதாம்,(ஆதலின்)

பொன்னி சூழ் ஏரகத்தன் - காவிரிநதியால் சூழப்பட்டுள்ள திருவேரகத்தின்கண் வீற்றிருந்தருளும்சுவாமிநாத சுவாமியினுடைய, கனம் வரைக்கு - பெரிய மலையினிடத்து, கை வாகா-கைவாகாக, மணிதேர் விரைந்து ஓட - மணிகள் கட்டப்பெற்ற தேரானது விரைவாகச் செல்லும்படி, கடாவு - செலுத்துவாயாக என்றவாறு.

வலவனே! நான் தலைவியைப் பிரிந்து வரும்போது கார்காலம் வருதற்கு முன்பே வந்து சேருவேன் என்று அவளைத்தேற்றினேன். அவள் கார்காலம் வருமுன்பே காத்துக்கொள்ளும், நான்துன்புறுதல் சத்தியம் என்றாள். ஆகலின், விரைந்து தேரைச் செலுத்துக எனத் தலைவன் கூறினான்.

'காவல் அவாம் மை' என்றார்: 'சத்த மேகங்களும் வச்சிரதரன் ஆணையிற் சஞ்சரித்திடவில்லையோ' என்பது கருதி. மை - மேகம். கார் - கார்காலம்: நிறத்தின் பெயர் மேகத்திற்குஆய், மேகத்தின்பெயர் அதுபெய்யும் பருவத்திற்காயினமையின் இருமடியாகுபெயர். வலவன் தேர்ப்பாகன்.

## முகிலொடு கூறல்

கனகங் களிக்கு வெறுப்பா கியதனங் கைத்தனள்
கனகங் களிக்கு வனஞ்சூழு மேரகன் காயரிமு [கோ
கனகங் களிக்கு வலயத் தழித்த கதிரயிற்கு
கனகங் களிக்கும் படிசொல்லு வீரெழு கார்க்குலமே.

இ - ள் : எழு கார் குலமே - (கடல் நீரைக் குடித்து) மேலெழுந்து செல்லும் கரிய மேகக் கூட்டங்களே, கோகனகங்கள்-தாமரைப் பொய்கைகளும், இக்குவனம் - கருப்பஞ்சோலைகளும், சூழும் ஏரகன் - சூழ்ந்து விளங்கும் திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரும், காய் - சினந்

தெழுந்த, அரிமுகன் அகங்கள் - சிங்கமுகாசுரனுடைய செருக்குகளை, இ குவலயத்து அழித்த - இப்பூமியின் கண்ணே அழித்தருளிய, கதிர் அயில் குகன் - கிரணங் களை வீசும் வேற்படையை ஏந்திய குகன் என்னும் திருநாமத்தையுடைய சுவாமிநாதசுவாமியையொத்த தலைவனிடத்து, அகம் களிக்கும்படி - மனமகிழும்படி, கனகங்கள் - பொன்னாலாகிய அணிகலங்களும், இக்கும் - கரும்பும், வெறுப்பாகியது - (நம்முடைய தலைவிக்கு) வெறுப்பைத் தந்தன, (அன்றியும்) அனம் கைத்தனள் - அன்னத்தையும் வெறுத்தாள் என்று, சொல்லுவீர் - (அவன் சென்றிருக்குமிடத்துச்சென்று) சொல்லுவீராக என்றவாறு.

கார் - மேகம்: கார் என்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய மேகத்திற்கு ஆயினமையின் குணவாகு பெயர். கோகனகம் - தாமரை: அதனையுடைய பொய் கைக்கு ஆயிற்று; தானியாகுபெயர். இக்கு - கரும்பு: தலைவிக்குக் கரும்பும் வேம்பாயிற்று என்றாள். அரி - சிங்கம். அகம் - செருக்கு, மனம். கதிர் - கிரணம், ஒளி. அயில் - வேலாயுதம். குகன் - அடியார்களுடைய இதயமாகிய குகையின்கண் வீற்றிருப்பவன். கனகம் - பொன்: ஆகுபெயர். அன்னம் = அனம்: தொகுத்தல். கைத்தல்-கசத்தல், வெறுத்தல். அவன்மனம் மகிழும்படி சமயமறிந்து சொல்லுவீராக என்றாள். சிங்கமுகாசுரன் சூரபன்மன் தம்பி; ஆயிரம் சிரங்களும் இரண்டாயிரம் கரங்களும் உடைய வீரன்; மிக்க தவமுடையவன்.

காரணங் காகன் முதலோர்க்கு
மற்றிலைக் கந்தனன்றிக்
காரணங் காக வுணவுட
லீர்வணி கன்றந்தவக்

காரணங் காகச்செய் யேரக
வேலனைக் கைதொழுநீங்
காரணங் காக ருடணஞ்செய்
தாலுநுங் கண்வருமே. 50

**இ - ள்:** காக உணவு உடலீர் - காகங்களுக்கு இரையாகின்ற உடலைச் சுமந்து திரியும் மாக்களே, வணிகன் தந்த அக்கு - (மயிலாப்பூரிலே) சிவநேசச் செட்டியார் (பாதுகாத்துவைத்துத்)தந்த எலும்புகளை யும்(சாம்பரையும்), ஆர் அணங்கு ஆக செய் - அரிய பெண்வடிவாகச் செய்தருளிய, ஏரகவேலனை-(திருஞான சம்பந்தப்பிள்ளையாராகவுள்ள) திருவேரகத்திலெழுந் தருளிய வேலாயுதராகிய் சுவாமிநாத சுவாமியை, கை தொழும் - கைகூப்பித்தொழுவீர்களாக, கார் அணங்கு- மேகம் போலும் அழகிய, ஆகன் முதலோர்க்கும் - திரு மேனியையுடைய திருமால் முதலிய தேவர்களுக்கும், கந்தன் அன்றி மற்று இலை - கந்தசுவாமியையல்லாமல் வேறொரு தெய்வமில்லையாம், காரணம் - இந்தக் காரணத்தினால், அணங்கு நீங்கார் - துன்பத்தினின்றும் நீங்காதவராய், ஆகருடணம் செய்தாலும் - அழைத் தாலும், நும் கண்வரும் - உம்மிடத்துக்கு வந்து அருள் செய்வார்; ஆகலான் என்பது எஞ்சி நின்றது எ - று.

> "ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
> காக்கை கடிவதோர் கோல்"

என்றவாறு; அருவருப்புக்கு இடமான உடம்பை ஓம்பு தலையே மேற்கொண்டு உழலும் மக்கள் யாக்கையை யுடையவர்களே! நீங்கள் உறுதுணையாகவுள்ள சுவாமி நாதசுவாமியை விரும்பி வழிபாடு செய்யுங்கள். அவரை அன்றி வேறொரு தெய்வமில்லை. மிகத் துன்பமுடைய வராய் அழைத்தாலும் உம்மிடத்து வந்து அப்பெருமான் அருள் செய்வார் என அறிவுறுத்தியபடி.

162997

முருகக்கடவுளின் அவதாரமாக ஆளுடையபிள்ளையாரைக் கூறுதல் ஒருவகை வழக்கு; அருணகிரிநாதர் இக்கொள்கையினையுடையார் என்பது அவர் பாடல்களால் தெளிவாம். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" ஆகலின் சைவர் அவ்வாறு கொள்ளார்; இதனை உபசாரமெனவே கொள்வர். தக்கயாகப்பரணியாசிரியராகிய ஒட்டக்கூத்தரும், அருணகிரிநாதரது கொள்கையை உடையவரே.

கண்ணனை யானனன் வேதன்
றுதிகுக னைப்பனிரு
கண்ணனை யானந்த வாழ்வே
ரகனைக் கமலத் தெழிற்
கண்ணனை யானற் றனம்வயி
ரும்வள்ளி காந்தனையென்
கண்ணனை யானவ னைமற
வேன்பிற வாக்கதிக்கே. 51

இ - ள்: கண்ணன்-கண்ணபிரான் அவதாரமாகிய திருமாலும், ஐ ஆனனன் - ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமானும், வேதன்-பிரமதேவனும், துதி குகனை - துதிக்கின்ற குகன் என்னும் திருநாமத்தையுடையவரும், ப(ன்)னிரு கண்ணனை - பன்னிரண்டு திருக்கண்களையுடையவரும், ஆனந்த வாழ்வு ஏரகனை - தம்முடைய அடியார்களுக்குப் பேரானந்தப் பெருவாழ்வைத் தரும் ஏரகச் செல்வரும், எழில் - அழகினையுடைய, கமலம் கண் - தாமரை மலர்போலும் கண்களையும், நனை தனம் - தாமரையரும்புபோலும் நகில்களையும், நல் ஆல் வயிறு - நல்ல ஆலந்தளிர் போலும் வயிற்றினையும் உடைய, வள்ளி காந்தனை - வள்ளியம்மையாருடைய நாயகரும், என் கண் அனையான் - என்னுடைய கண் போன்றவரும் ஆகிய, அவனை - அந்த சுவாமிநாதசுவாமியை, பிறவா

O-,12 ,T
N70

கதிக்கு மறவேன் - (யான்) இனிப் பிறவாத நெறியாகிய முத்தியை அடையும்பொருட்டு மறவாமல் (எப்பொழு தும்) தியானித்திருப்பேன் என்றவாறு.

கண்ணன்: பாகதச்சிதைவு. கருநிறமுள்ளவன் என்பது பொருள். ஆனனம் - முகம். ஐந்து முகங்களா வன: ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. முருகவேளுக்கு ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களுமுள்ளன; பதினெட்டுக் கண்கள் எனவும் கூறுவதுண்டு: தியான சுலோகம் காண்க. ஆனந்தம் - சிவானந்தம். 'கமலத்து எழிற்கண், நனே ஆல் நல்தனம் வயிறு ஆம்': நிரல்நிறை. காந்தன் - கணவன். 'என் கண் அனேயான்'; ''கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்'' என்று அருளியமையும் காண்க. பிறவா: ஈறுகெட்டு நின்றது. கதி - முத்தி. கதிக்கு: பொருட்டுப் பொருளில் வந்த நான்கனுருபு.

வாச மனஞ்ச லசவத
　　னக்குற மங்கைவிசு
வாச மனஞ்ச வயலே
　　ரகாமயி லேறியென்முன்
வாச மனஞ்ச வுதைத்தோன் றன்
　　மைந்த மலேகடொறும்
வாச மனஞ்ச லியாதொழி
　　சென்ம வலேத்திருக்கே. 52

இ - ள்: வாசம் மன் - மணம் நிலேபெற்றுள்ள, அம் சலச வதனம் - அழகிய தாமரை மலர்போலும் முகத்தினேயுடைய, குற மங்கை - வேடர் குலத்திலே தோன்றிய வள்ளியம்மையாரிடத்து, விசுவாசம் மன் - அன்புமிக்க தலேவரே, அஞ்சம் வயல் ஏரகா - அன்னப் பறவைகள் வசிக்கப்பெற்ற வயல்களால் சூழப்பட்ட

ஏரகத்தில் வீற்றிருப்பவரே, சமன் அஞ்ச - இயமன் அஞ்சும்படி, உதைத்தோன்தன் மைந்த - உதைத்தருளிய சிவபெருமானது திருக்குமாரரே, மலைகள்தொறும் வாச-குன்றுகள் தோறும் ஆடல்புரிபவரே, மயில் ஏறி என் முன் வா - மயிலின்மீது எழுந்தருளி அடியேன்முன் வந்தருளுவீராக, மனம் சலியாது - மனஞ் சலிக்காமல், சென்ம வலை - பிறவி வலையாகின்ற, திருக்கு ஒழி - மாறுபாட்டை ஒழித்தருளுவீராக என்றவாறு.

வாசம் - மணம். சலசம் - தாமரை. வதனம்-முகம். குறவர் - வேடர். விசுவாசம் - அன்பு. அஞ்சம் - அன்னப் பறவை. சமன் - இயமன். ஆறு திருப்பதிகளுள் 'குன்றுதோருடலும்' ஒன்ருகலின் மலைகள்தொறும் வாச என்ருர், அன்றியும், 'சேயோன் மேய மைவரை யுலகமும்' என்றமையால் குறிஞ்சி நிலத்துக்கு உரிய தெய்வம் முருகவேள் ஆகலின் அவ்வாறு கூறினருமாம். குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும். சூரபன்மனை வேலாயுதத்தால் இருகூருக்கியபின் சூரபன்மன் சேவலும் மயிலுமாக வடிவங்கொண்டுவர, செவ்வேள் மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டருளினர். இவர் குமாரக் கடவுளை மயில் வாகனத்தோடு காட்சியருள வேண்டினர்.

" அகல்திரைப் பரப்பிற் சடையசைந் தலையாது
கீழிணர் நின்ற மேற்பகை மாவின்
ஓருட லிரண்டு கூறுபட விடுத்த
... ... ... ... அரத்தநெடு வேலோய்"

" மணிதிரைக் கடலுள் மாவெனக் கவிழ்ந்த
களவுடல் பிளந்த ஒளிகெழு திருவேல் "

" பெருங்கள விணர்தந் தலைகீழ்க் குலவிய
விடமாக் கொன்ற நெடுவேற் குளவன்"

என்னும் கல்லாடச் செய்யுட்களானறிக.

"… … … … சகமுடுத்த,
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்த நெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய் - போரவுணன்
அங்கமிரு கூறு யடன் மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னூர்த்தெழுந்து தோன்றுதலும்
— அங்கவற்றுள்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்து மிளையோனே - மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே"

என்றருளினர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கந்தர்கலி வெண்பாவில். பகைவனுகிய சூரனே சேவலுருவமு மெடுத்தான்.

சென்மவலே - சென்மமாகிய வலே எனவும், சென்ம அலே - சென்மமாகிய கடல் எனவும் பொருள் கொள்ள நின்றது. சென்மம் - பிறப்பு. அலே - கடல்: ஆகுபெயர். திருக்கு - மாறுபாடு.

திருக்கு மதிமுக வாய்பெற்று
நிற்றெரி சித்திலர்பொய்த்
திருக்கு மதியர் துதியாரக்
காலன்முன் செய்யவெங்க
திருக்கு மதிகச் சுடர்வேல
நாளுந் திருமகள்வீத்
திருக்கு மதிற்றிரு வேரக
வென்செய்கு வாரவரே. 53

இ - ள் : செய்ய - செந்நிறம் பொருந்திய, வெங் கதிருக்கும் - வெப்பத்தைத்தரும் சூரியனுக்கும், அதிக சுடர் வேல - மிக்க ஒளியைவீசும் வேற்படையையுடைய வரே, நாளும் - எக்காலத்தும், திருமகள் - இலக்குமி தேவியானவள், வீத்திருக்கும் மதில் ஏரக - வீற்றிருக்

கும் மதில்களையுடைய திருவேரகத்தில் எழுந்தருளி விளங்குபவரே, மதி முகம் வாய் திருக்கு பெற்று - சந்திரனையொத்த முகமும் வாயும் மாறுபடப்பெற்று, நின் தெரிசித்திலர் - தேவரீரைக் கண்டு தரிசனம் செய்யாதவரும், பொய்த்து இருக்கும் மதியர்-பொய்ம்மையுடைய அறிவினரும், துதியார் - துதித்து வணங்கமாட்டார், அவர் - அப்புல்லர்கள், அ காலன் முன் என் செய்குவார் - அந்த இயமனுக்கு எதிரிலே என்ன செய்வார்கள் என்றவாறு.

''கொற்ற வருணனை நின்றன் றுழக்கிய கொக்குருவைச், செற்ற அருணனை யன்னசெவ் வேற்படைச் செந்திலர்க்கு'' என்றார் சிவப்பிரகாச சுவாமிகள். வெங்கதிர் - சூரியன்; தண்கதிர் - சந்திரனுகலின். எதுகை நயம்பற்றி வீற்றிருக்கும் என்பதை 'வீத்திருக்கும்' என்றார். வீற்றிருக்கும் ஏரக, மதில் ஏரக எனத் தனித்தனி கூட்டுக. இயமனிடத்திலிருந்து தப்பவேண்டுமாயின், காலசங்காரக் கடவுளின் புத்திரராகிய செவ்வேளைத் தரிசித்து வணங்கித் துதிக்கவேண்டும் என்றபடி. அற்பர்கள் புண்ணிய மில்லாமையால் கடவுளைத்தரிசித்தும், வணங்கியும், துதித்தும் வழிபடார். அவனை வணங்குதற்கும் அவன் அருள் வேண்டும் என்க. காலன் - உயிர்கள் உடலோடு கூடி வாழுங்காலத்தைக் கணக்கிட்டிருப்பவன்: உரிய காலம் வருமாயின் உடலையும் உயிரையும் கூறுபடுத்துவன்: ஆகலின் அவன் கூற்றுவனுவான்.

### தலைவி சுரஞ்செல நற்றாய் இரங்கல்

வார மருந்தனத் தார்கேட்கி லேரகம் வாழ்த்திக்கவி
வார மருந்தன மில்விர தஞ்செய் துபவளத்து
வார மருந்தன சொல்லாளை யான்பெற்ற வாறிகழு
வார மருந்தனங் கன்போன்ற வன்பின் வனஞ்
[சென்றதே. 54

இ - ள் : ஏரகம் வாழ்த்தி - திருவேரகத்து முருக வேளைப் போற்றி, கவி வாரம் - ஐப்பசி மாதச் சுக்கிர வாரந் தொடங்கிச் சுக்கிரவாரந்தோறும், அருந்து அனம் இல் - உண்ணும் (நீரும்) அன்னமுமின்றி, விரதம் செய்து - சுப்பிரமணிய விரதத்தை அநுட்டித்து, பவளத்து ஆர் - பவளம்போன்ற வாயினிடத்து நிறைந்த, அ மருந்து அன - அந்தத் தேவாமிர்தத்தை யொத்த, சொல்லாளை - இனிய சொற்களையுடைய இப்பெண்ணை, யான்பெற்ற ஆறு - நான்பெற்ற விதத்தையும், அமர் உந்து அனங்கன் போன்றவன் பின் - போரைச் செய்யும் மன்மதனைப் போன்ற ஒருநாயகன் பின்னே தொடர்ந்து, வனம் சென்றதும் - (எங்களை விட்டுப் பிரிந்து தனியே) பாலை நிலத்திலே சென்ற விதத்தையும், வார் அமரும் தனத்தார் கேட்கில் இகழுவார் - கச்சுப் பொருந்திய நகில்களையுடைய பெண்கள் கேட்பாராயின் இகழ்ச்சி செய்வார்கள் (ஆகலின் நான் என்ன செய்யக்கடவேன்) என்றவாறு.

கவி-சுக்கிரன்: கவிவாரம் - சுக்கிரவாரம். சுப்பிரமணிய விரதங்களில் சுக்கிரவார விரதமும் ஒன்று. உபவாசமாக இருத்தல் வேண்டுதலின் 'அருந்து அனம் இல் விரதம்' என்றார். விரதங்கிடந்து வருந்திப் பெற்ற பெண் இவ்வாறு அயலான் பின்னே சென்றாள் என்று பெண்டிருலகம் இகழ்ந்து சிரிக்குமே என்னசெய்வேன் என்று நற்றாய் இரங்குகின்றாள். வார் அமரும் தனம் - கச்சுப்பொருந்தும் தனங்கள். அனங்கன் - மன்மதன்.

வனக மனகன தனத்தா
ராசை வழிமயங்கு
வனக மனகம் வருவதெந்
நாளகசு ரன்மடிய

வனக மனக வொளிர்வா
ளெனக்கொண்ட மான்மருகா
வனக மனகவி னேரகம்
வாழ்மயில் வாகனனே. 55

இ-ள்: அசுரன் மடிய - இரணியன் என்னும் அசுரன்மாளும்படி, வல் நகம்-வலிய உகிரை,ஒளிர்வாள் என கொண்ட-விளங்குகின்றவாட்படை என்று சொல்லுமாறு கொண்ட, மால் மருகா - நரசிங்கமூர்த்தியாகிய திருமாலினது மருகரே, அனக மன - பரிசுத்தமான மனத்தில் வீற்றிருப்பவரே, கவின் - அழகினையுடைய, ஏரகம் வாழ் - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள, மயில் வாகனனே - மயில்வாகனத்தையுடையவரே, வல் நகம் அன - சூதாடு கருவியையும் மலையையும் ஒத்த, கன தனத்தார் - கனம் பொருந்திய நகில்களையுடைய பெண்களது, ஆசை வழி - ஆசைவழியிலே சென்று, மயங்குவன் அகம் - மயங்குகின்றவனாகிய என்னுடைய மனம், அனகம் வருவது எ நாள்-பாவம் நீங்கித்தூய்மை பெறுவது எந்தக்காலம் என்றவாறு. ஐயனே அருள் வாயாக என்றது எஞ்சி நின்றது.

"மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென."

(திருவாரூர் - நான்மணி).

அசுரன்-இரணியன் என்னும் அசுரன், பிரகலாதன் தந்தை. நகம் - உகிர், மலை. அனகம்-பரிசுத்தம். வல் - சூதாடுகருவி. அகம் - மனம், பாவம். கனதனம் - பாரமான நகில், பருத்த தனமென்க.

கன ந்தங்கந் தந்தம் புயங்கா
லிடைமெய் கவினளகம்
கன ந்தங்கந் தந்திக ழாடி
யெனவுருக் காட்டவணி
கன ந்தங்கந் தந்தந் தனைக்கன்னி
யாக்கிய காங்கெயன்கு
கன ந்தங்கந் தன்றிரு வேரக
னேசுரர் காவலனே. 56

இ-ள்: கவின் அளகம் கனம் - அழகிய கூந்தல் மேகமாம், மெய் தங்கம் - உடம்பு பொன்னும், இடை தந்து - இடுப்பு நூலாம், கால் அம்புயம் - பாதங்கள் தாமரையாம், க(ன்)னம் அந்தம் தங்கு திகழ் ஆடி - கன்னங்கள் அழகு நிலைபெற்றுத் திகழும் கண்ணுடியாம், என - என்று சொல்லுமாறு, உரு காட்ட - தம்முடைய வடிவத்தைக் காட்டும்படி, வணிகன் - திருமயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார், தந்த நந்து அங்கம் தனை - (எலும்பும் சாம்பருமாகக் கொண்டுவந்து இறைவன் சந்நிதியிலே வைத்துக்) கொடுத்த இறந்துபட்ட எலும்பை, கன்னி ஆக்கிய காங்கெயன் - பெண்ணுகை எழுந்துவரச் செய்த கங்காபுத்திரரும், குகன் - குகன் என்னும் திருநாமத்தை உடையவரும், நம்தம் கந்தன் - நம்முடைய கந்தசுவாமியுமாகிய, திருஏரகனே - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாதசுவாமியே, சுரர் காவலன் - தேவர்களைப் பகைவரிடமிருந்து காக்க வல்லவராவர் என்றவாறு.

அளகம் - கூந்தல். கனம் - மேகம். தந்து - நூல். அம்புயம் - செந்தாமரை. ஆடி - கண்ணுடி. நந்துதல் - கெடுதல், ஆக்கம் பெறல். அங்கம் - எலும்பு. கன்னி - பூம்பாவை. காங்கெயன் - கங்காபுத்திரர். கந்தன் - சேர்க்கப்பட்டவன். சுரர் காவலன் - தேவசேனுதிபதி. கன்னம்=கனம்: தொகுத்தல்.

" அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் ருகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன் "

" சேயவன் வடிவ மாறும் திரட்டி நீ யொன்ருச் செய்தாய்
ஆயத ஞலே கந்த ஞமெனு நாமம் பெற்ருன்"

(கந்தபுராணம்).

" ஆறுமோ ருருவ தாக வாக்கலிற் கந்த ஞனன்"

(தணிகைப்புராணம்).

காவா சனனந் துடையான் கமல மலரெனுமங்
காவா சனனந் தினுநந் திடாவுனைக் கண்டுவணங்
காவா சனனந் திகழ்வய லேரக கந்தவந்து
காவா சனனந் தவிர்த்தொழிப் பாயென் கவலை
[யையே. 57

இ - ள்: அனம் திகழ் வயல் ஏரக - அன்னப் பறவைகள் விளங்கும் வயல்களால் சூழப்பட்ட திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, கந்த - கந்தசுவாமியே, கா வாசன் - கற்பகச்சோலையில் வசிக்கும் இந்திரனும், நந்து உடையான் - பாஞ்சசன்னியம் என்னும் சங்கையுடைய திருமாலும், மங்கா கமல மலர் எனும் ஆசனன் - அழியாத செந்தாமரை மலர் ஆசனத்தில் இருக்கும் பிரமதேவனும், நந்தினும் - அழிந்தாலும், நந்திடா உனை - அழிதலில்லாத உம்மை, கண்டு வணங்கு ஆவாசன் - தரிசித்துப் போற்றும் கீழானவனை, வந்து கா - வந்து பாதுகாத்தருளும், என் சனனம் தவிர்த்து-என்னுடைய பிறப்பையொழித்து, கவலையை ஒழிப்பாய் - என் மனத் துன்பத்தைப் போக்கியருளும் என்றவாறு.

அன்னம் = அனம். கா - கற்பகச்சோலை; ஏனைய தருக்களுமாம். மங்கா: ஈறுகெட்டது. ஆபாசன் = ஆவாசன் - கீழ்மைக்குணமுடையான்; ஆபாசம் - எண்ணம் எனினுமாம்.

கவலைக் குளமொரு வீடாக்கும்
வஞ்சனைக் கன்னியர்மோ
கவலைக் குளகப் படாதருண்
மாவலி காய்துயர்மூழ்
கவலைக் குளவடி வங்கொண்ட
மான்மரு காநறைதேங்
கவலைக் குளம்புய மாடுறு
மேரக தேசிகனே. 58

இ-ள்: மாவலி - மகாபலிச்சக்கரவர்த்தியை, காய் துயர் மூழ்க - கோபித்துத் துன்பத்திலே அமிழ்ந்து கிடக்கும்படி, வ(ல்)லை - விரைவிலே, கு(ள்)ள வடிவம் கொண்ட - வாமனவுருக்கொண்ட, மால் மருகா - திருமாலுக்கு மருகரே, நறை தேங்க-தேன்நிறையும்படி, அலைக்குள் - அலைகளையுடைய தடாகங்களிலே, அம்புயம் ஆடுறும் - தாமரைமலர்கள் அசைகின்ற, ஏரகம் தேசிகனே - திருவேரகத்தில் வீற்றிருந்தருளும் குருநாதராகிய சுவாமிநாதசுவாமியே, கவலைக்கு - துன்பங்களுக்கு, உ(ள்)ளம் ஒரு வீடு ஆக்கும் - மனத்தை ஒரு இருப்பிடமாகச் செய்யும், வஞ்சனை - வஞ்சகத்தன்மையுடையவனாகிய என்னை, கன்னியர் மோக வலைக்குள் அகப்படாது - மகளிருடைய காமமாகிய வலையினுள்ளே சிக்குண்டு உழலாமல், அருள் - அருள் செய்வீராக எ-று.

மூவுலகங்களையும் முன்னைத் தவவிசேடத்தால் ஒரு குடைக்கீழ் அரசு செலுத்திய மாவலிச்சக்கரவர்த்தியிடம் திருமால் தன்காலால் மூன்றடிமண் வேண்டிக் குள்ளவடிவான வாமன அவதாரங்கொண்டு காசிப முனிவருக்கு அதிதிபால் தோன்றிய பிராமணப்பிரமசாரியாகி, வேள்வியியற்றி யாவருக்கும்வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கும் காலத்தே சென்று கேட்க, அவன் அதற்கு இசைந்து தாரைவார்த்துத் தத்தஞ்செய்து

கொடுத்த நீரைக் கையிலேற்ருர். உடனே திரிவிக்கிரமஞக ஆகாயத்தையளாவி வளர்ந்து ஓர் அடியால் பூவுலகையும், மற்ருேரடியால் மேலுலகத்தையும் அளந்தார். மூன்ரும் அடிக்கு இடமில்லாமற்போகவே,. அவன் வேண்டுகோளின்படி அவன் முடியில் ஓர் அடியைவைத்துப்பாதலத்தில் அழுத்தி அவன் செருக்கை அடக்கினர் என்பது வரலாறு. இதனை,

"நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலகு மெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னரே"

என்னும் திருநேரிசையால் அறிக.

திருமறைக்காட்டிலே எலியாயிருந்து, திருவிளக்கு நெய்யுண்ணப் புகுந்து, சுடர்சுட மூக்கால் தூண்டிய அபுத்திபூருவ புண்ணியத்தின் பயனுக மறுமையில் மூவுலகாளும் மாவலி வேந்தானமை குறிக்கப்பட்டது காண்க.

### பாங்கி கூற்று

சிகர வளைகட லுக்குங் குயிற்குந் தியங்கியவஞ்
சிகர வளையுந் தரியா டுயிலுஞ் செயாள்விசுவா
சிகர வளையுண் டவன்ருெழு மேரகத் தேவர்நந்தே
சிகர வளையின் றுவந்தின்ன மும்வந்து சேர்ந்
[திலரே. 59

இ - ள்: சிகரம் - உயர்ந்த, வளை கடலுக்கும் - சங்கங்களையுடைய கடலின் மிக்க ஒலிக்கும், குயிற்கும் - குயிலின் இனிய ஓசைக்கும், தியங்கிய வஞ்சி - வருந்தி மயங்கிய கொடிபோன்ற எம்முடைய பெண், கரம் வளையும் தரியாள் - கைகளிலே வளையல்களையும் அணிந்து கொள்ளமாட்டாள், துயிலும் செயாள் - தூங்கவுமாட்டாள், விசுவாசி - அன்புடையவள், கரவு அளை உண்டவன் தொழும் - (ஆயர்பாடியில் ஆய்ச்சியர் அறியாமல்) திருட்டுத்தனமாக வெண்ணெயை வாரியுண்ட கண்ணபிரானாகிய திருமால் வணங்கும், தேவர் ஏரகத்து - கடவுளாகிய சுவாமிநாதசுவாமியினது திருவேரகத்திலுள்ள, நம் தேசிகர் - நம்முடைய தலைவர், அவளை இன்று உவந்து - அப்பெண்ணை இன்று விரும்பி, இன்னமும் வந்து சேர்ந்திலர் - இன்னமும் வந்து பொருந்திலர் என்றவாறு.

சிகரம் - உச்சி, உயர்வு. கடல், குயில் என்பன ஆகுபெயர்கள். தியங்குதல் - மயங்குதல். கடலின் முழக்கமும், குயிலின் ஓசையும் காமுகருக்குத் துன்பஞ் செய்யும். விசுவாசம் - அன்பு. அளை - வெண்ணெய். தேசிகர் - தலைவர்; "தேசிகன் வணிகன் தேசாந் தரியொடு குருவு மாமே" (சூடாமணி நிகண்டு).

இலங்கா திபனை யடுமான்
மருக னிமையவர் தம்
இலங்கா திபந்திக ழும்பொழில்
சூழ்பொன்னி யேரகத்தில்
இலங்கா திபதந் தொழக்கை
யிலம்புகழ் கேட்பதனுக்(கு)
இலங்கா திபமன்ன நெஞ்சேயென்
செய்வமின் னல்லலைக்கே. 60

**இ - ள் :** இபம் அன்ன நெஞ்சே - மதம்பொருந்திய யானையைப் போன்றமனமே, இலங்காதிபனை - இலங்கைக்கு அரசனாகிய இராவணனை, அடும் மால் மருகன் - சீராமனாக அவதரித்து வானரசேனைகளுடனே சென்று கொன்றிட்ட திருமாலினது மருகரும், இமையவர்தம் இ(ல்)லம் - தேவருலகத்திலேயுள்ள அவரது மாளிகைகளிற் சென்று, காது - மோதுகின்ற, இபம் திகழும் பொழில் சூழ் - மரங்களின் கொம்புகள் விளங்கும் சோலைகளால் சூழப்பெற்றதும், பொன்னி - காவிரிநதி பாய்வதுமாகிய, ஏரகத்தில் இலங்கு - திருவேரகத்தில் வீற்றிருக்கும், ஆதி பதம் - முதற்கடவுளாகிய சுவாமிநாத சுவாமியினுடைய திருவடிகளை, தொழ கை இலம் - தொழுவதற்குரிய கைகளைப் பெற்றேமில்லை, புகழ் கேட்பதனுக்கு - அப்பெருமானுடைய புகழ்களை விரும்பிக் கேட்பதற்குரிய, காது இலம்-நல்ல காதுகளைப் பெற்றேமில்லை, இன்னல் அலைக்கு என் செய்வம்-இந்தத் துன்பமாகிய கடலைக்கடத்தற்கு யாம் யாது செய்வோம் என்றவாறு.

இபம் - யானை, மரக்கொம்பு. இல்லம் = இலம்: தொகுத்தல். காதுதல் - மோதுதல். பொழில் - சோலை. பொன்னி - காவிரி. ஆதி - முழுமுதற்கடவுள்; சிவபெருமானுக்கும் முருகவேளுக்கும் வேறுபாடின்மை பற்றிக் கூறினார். நாம் கை, காது முதலியவைகளைப் பெற்றிருந்தும் இறைவனைக் கரங்குவித்துத் தொழவும், அவன் புகழ்களைக் கேட்டு மகிழ்ந்து இன்புறவும் கூடவில்லையே என இரங்கினார். 'திருஅங்கமாலை' முற்றும் நோக்குக. கூப்பி வணங்காத கை முடமாமே, காது செவிடாமே என்றபடி; ஏனைய அங்கங்களும் பயனின்றிப் பழுதுபட்டொழியுமே; இன்று அங்க ஈனமுடையார் பெறும் அவதி கண்கூடன்றோ? என்க.

## தலைவி மாரனை முனிதல்

அலைய மருப்புல கேத்தே
ரகத்துறை யண்ணல்வந்தான்
அலைய மருப்புக் களிற்றனங்
காவெதி ராகவந்தாய்
அலைய மருப்புப் பெறுமோ
வினிக்குடை யந்தரத்தே
அலைய மருப்புங் கமுந்தீயு
நீயிங் ககல்குவையே. 61

இ - ள்: ஐய மருப்பு - அழகிய தந்தங்களையுடைய, அல் களிற்று அனங்கா - இருளாகிய யானையையுடைய அனங்கனே, அலை அமர் உப்பு உலகு ஏத்து - அலைகள் பொருந்தும் கடல்நீரால் சூழப்பட்ட உலகத்தாரால் துதிக்கப்பெற்ற, ஏரகத்து உறை - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள, அண்ணல் வந்தான் - பெருமையிற் சிறந்த தலைவன் வந்துவிட்டான், எதிர் ஆக வந்தாய் - (நீ எனக்கு இப்போது) எதிரிட்டுப் (போர்புரிய) வந்திருக்கின்றாய், (எனினும்) அலை - (பிரிந்தாரை) வருந்தச்செய்யும், அமர் - (உன்னுடைய) போர்த் தொழில், உப்புப் பெறுமோ - உப்புக்காயினும் பயன் படுமோ, இனி குடை - (அதுகிடக்க) இனிமேல் உன் குடையாக உள்ள சந்திரன், அந்தரத்தே அலைய - (யாதொரு பற்றுக்கோடுமின்றி) ஆகாயத்திலே அலை யட்டும், மரு - மணம்பொருந்திய, புங்கமும் - மலரம்பு கமும், தீயும் - கருகிப்போம், நீ இங்கு அகல்குவை - (ஆதலால்) நீ இவ்விடத்தைவிட்டு அகன்று போவாயாக என்றவாறு.

ஐய - அழகிய. மருப்பு - தந்தம். அல் - இருட்டு. களிறு - ஆண்யானை. அனங்கன் - அங்கமில்லாதவன். உப்பு - உப்புக்கடல். அண்ணல் - பெருமையிற்சிறந்

தோன். எதிர் ஆக - எதிரியாக, பகைவனுக. 'உப்புக் காயினும் உருப்படுமோ' என்பது பழமொழி. அந்தரம் - ஆகாயம், பற்றுக்கோடின்மை. மன்மதனுக்கு இருள் யானைப்படை, சந்திரன் கொற்றக்குடை, மலர் அம்புகள் என்க. தீயும் - தீந்துபோம். புங்கம் - உயர்ச்சி, அம்பு. அலைய=அலைக: வியங்கோள். தலைவன் பிரிந்த காலத்து வருத்தும் நீ அவன் வந்து சேர்ந்த காலத்து என்ன செய்யக்கூடும்? ஆதலால், இவ்விடத்தை விட்டு அகல்வாய் என்றாள்; இது சினக்குறிப்பு.

அகல வியாகம் பலசெய்து மென்கடம் பாரலங்கல்
அகல வியாதனைப் போற்கலை கற்றெ னரும்பிறவி
அகல வியாதி வராமனல் லேரகத் தன்பர்நெஞ்சாம்
அகல வியாவிளக் கா நின் கழல்பணி யாதவரே. 62

இ-ள்: கடம்பு ஆர் அலங்கல் - கடப்ப மலரால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த, அகல - மார்பையுடையவரே, அரும் பிறவி அகல - கடத்தற்கு அரிய பிறவிக்கடல் நீங்குதற்பொருட்டும், வியாதி வராமல் (அகல) -உடம்பைப்பற்றிய பிணிகள் வராமல் இருத்தற் பொருட்டும், நல் ஏரகத்து - சிறந்த தலமாகிய திருவேரகத்திலுள்ள, அன்பர் நெஞ்சு ஆம் அகல் - அடியார்களது உள்ளமாகிய தகழியிலுள்ள, அவியா விளக்குஆம் - அணைந்துபடாத விளக்காகிய. நின்கழல் பணியாதவர் - உம்முடைய திருவடிகளை வணங்காதவர், அகல் - விரிவாகவுள்ள, அவி - அவிசுகளைக் கொண்டு, பல யாகம் செய்தும் என் - பலவகையான வேள்விகளைச் செய்தும் யாது பயனும், வியாதனைப்போல் - வியாசமுனிவரைப் போல, கலை கற்றும் என் - பலநூல்களையும் கற்றறிந்த தனுலும் யாது பயனும் (ஒன்றுமில்லை) என்றவாறு.

அலங்கல் - மாலை. அகலம் - மார்பு. பிறவி - பிறப்புக்கள். பிறவி கடல்போலப் பரந்துகிடத்தலின் அதன்

கரைகாண இயலாமைபற்றி அரும்பிறவி என்றார். அரும்பிறவி-கடத்தற்கரிய பிறப்பு இறப்புக்கள். வியாதி-நோய்; இஃது உடற்பிணி. பிறவிநோய் உயிர்ப்பிணி. மலப்பிணியால் பிறவிப்பிணி உண்டாகியது. உடம்பு உள்ளபோதே உடம்பைப் பற்றிய நோய்களும்உள. உடம்பு தீப்பிணியிருக்கை, குற்றக் கொள்கலமாம்; 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' என்றமையும் காண்க. நெஞ்சம் ஆம் அகல்; 'உள்ளமே தகழியாக' என்னும் தேவாரம் சிந்திக்க. தகழி-அகல். அவி-பொரி நெய் முதலியன. வியாதன் - வேதசாகைகளைத் தொகுத்து நான்காகச்செய்த முனிவர். வேதவியாசர் வேதத்திற் கூறியபொருளை விளக்கப் பதினெண்புராணங்களையும் பகுத்துணர்த்தியவர்; பராசரமுனியின் புதல்வர்.

தவந்தனை வேண்டு கிலேனொரு
நாளுந் தனிச்செந்திற்கந்
தவந்தனை யுந்நினக் குச்செய்கி
லேன்பவந் தானெனும்பா
தவந்தனை யெவ்வண்ணம் யான்கடப்
பேனற் சதுமறைநா
தவந்தனை போலெனை யாடிரு
வேரகத் தற்பரனே. 63

**இ-ள்:** தனி செந்தில் கந்த - ஒப்பற்ற திருச் செந்தூர் என்னும் திருச்சீரலைவாயிலில் எழுந்தருளி யிருக்கும் கந்த சுவாமியே, நல் சது மறை நாத - நல்ல நான்குவேதங்களுக்கும் தலைவரே, திருஏரகம் தற்பரனே-திருவேரகத்தில் வீற்றிருக்கும் தனக்குத்தானே மேலான வரே, தவம்தனை ஒருநாளும் வேண்டுகிலேன் - தவஞ் செய்தலை ஒருகாலும் விரும்பினேனில்லை, நினக்கு - உமக்கு, வந்தனையும் செய்கிலேன் - விதிப்படி வழிபாடும்

செய்திலேன், பவம் தான்.எனும் பாதவம் தனை - பிறவியைப் பெருக்கும் அகங்காரம் என்று சொல்லப்படும் காட்டை, யான் எவ்வண்ணம் கடப்பேன் - அடியேன் எவ்வாறு கடந்து செல்வேன், (ஆகலின்)அ(ன்)னைபோல் வந்து எ(ன்)னை ஆள் - தாயைப்போலும் அன்புகொண்டு என்பால் வந்து என்னை ஆண்டருளுவீராக என்றவாறு.

‘சீரலைவாய்த், தெள்ளு திரைகொழிக்கும் செந்தூர்’ (கந்தர்கலி); ‘‘அலைவாய்ச் செருமிகு சேஎய்’’ (அக266); ‘‘நஞ்செந்தின் மேய வள்ளி மணுளன்’’ (தேவா).

செந்தில் - திருச்செந்தூர்;திருச்சீரலைவாய் என்னும் படைவீடு. சதுமறை-நால்வேதம். தற்பரன் - தனக்குத் தானே பரனுகவுள்ளோன்;ஆன்ம நாயகன் எனினுமாம். தவமாவது-சரியை கிரியா யோகங்களும் அதனுற்பெறும் சிவஞானமுமாம்; ‘‘ஈண்டுத்தவம் என்றது சரியைகிரியா யோகங்களை’’ என்ருர். தான் - அகங்காரம்; ‘‘நானெனுமகந்தைதான்’’ என்பது காண்க. பவம் - பிறப்பு. பாதவம் - அடிமரம்; அது காட்டையுணர்த்திற்று. அன்னை, என்னை என்பன அனை எனை என நின்றன. வந்தனை - வழிபாடு.

பரவச் சிரப்படை யான்ருெழு
மேரகப் பண்ணவவன்
பரவச் சிரத்தையில் வாராத
தேவ பழிப்பில்சந்தம்
பரவச் சிரதி பதியென்று
லோபரைப் பாடிநித்தம்
பரவச் சிரங்கை படைத்தேனை
யோவென்ன பாதகமே. 64

**இ - ள் :** பர - மேலானவரே, வச்சிரம் படையான் தொழும் - வச்சிராயுதத்தை உடைய தேவேந்திரன்

வணங்கும், ஏரகம் பண்ணவ - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள கடவுளே, வன்பர் அவம் சிரத்தையில் - அன்பில்லாத கொடியவரது வீணன விசுவாசத்துக்கு, வாராத தேவ - வாராத தெய்வமே, பழிப்பு இல் - இகழப்படாத, சந்தம் பரவு அச்சு - அழகு பரவியுள்ள மேனியையுடைய, இரதிபதி என்று - மன்மதனே என்று புகழ்ந்து, உலோபரை பாடி - உலோபத்தன்மையுடைய மனிதரைப் பாடி, நித்தம் - நாடோறும், பரவ சிரம் கை படைத்தேன் - வணங்கும்பொருட்டுத் தலையையும் கைகளையும் யான் பெற்றேன் (போலும்), ஐயோ என்ன பாதகம் - இச்செயல் ஐயோ என்ன பாவத்தால் விளைந்தது என்றவாறு.

வச்சிரப்படை - குலிசாயுதம். பரம் - மேல். பண்ணவன் - கடவுள். வன்பர் - கொடியவர். சந்தம் - அழகு. அச்சு - உடம்பு. இரதிபதி - இரதிதேவிக்கு நாயகனுகிய மன்மதன். உலோபர் - உலோபகுணமுள்ளவர், உலுத்தர்.

தகர வரிக்குழ லாய்ச்சியர் தங்கலை தன்னையொளித்
தகர வரிக்கு மருகா வசுரன் சயிலம்பிளந்
தகர வரிக்குலஞ் சூழே ரகாதணித் தாள்வெவ்விடந்
தகர வரிக்கு மதியால் வருந்திவ டாகத்தையே. 65

இ - ள்: தகர அரி குழல் ஆய்ச்சியர் தம் - மயிர்ச்சாந்து பூசப்பெற்ற வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய இடைப்பெண்களது, கலைதன்னை - ஆடைகளையெடுத்து, ஒளித்த கரவு அரிக்கு மருகா - மறைத்து வைத்த வஞ்சனை பொருந்திய கண்ணபிரானுகிய திருமாலுக்கு மருகரே, அசுரன் - தாரகாசுரனையும், சைலம்- கிரவுஞ்சமலையையும், பிளந்த கர-பிளந்த (வேலாயுதத்தையுடைய) திருக்கரமுடையவரே, அரி குலம் சூழ் ஏரகா-வண்டின் கூட்டங்கள் சூழ்கின்ற திருவேரகத்தை

யுடையவரே, இவள் - இந்தப் பெண்ணினுடைய,வெவ் விடம் தகு அரவு - கொடிய நஞ்சினையுடைய இராகு என்னும் பாம்பினுல்,அரிக்கும்-விழுங்கப்பட்ட, மதியால் வருந்து தாகத்தை - சந்திரனுல் துன்பப்படும் காமதா பத்தை,தணித்து ஆள்-போக்கியருளுவீராக என்றவாறு.

தகரம் - மயிர்ச்சாந்து. அரி - வண்டு, திருமால். ஆய்ச்சியர் - இடைச்சியர். கலை - ஆடை. சைலம் - மலை. தாரகாசுரன் சூரபன்மன் தம்பி. இராகு சந்திரனை விழுங்கும் என்றல் மரபு. மதி - சந்திரன். தாகம் - காம தாபம், காமவிடாய். சந்திரனை இராகு பற்றுதலின் காரணத்தைக் கந்தபுராணத்திலே மாசாத்தாப் படலத் திற் காண்க. கூர்மபுராணம் இராகுவைப் பூமியின் சாயை எனக் கூறும். சூதசங்கிதையும், சாமவேத உப நிடதமாகிய தரிசனேபநிடதமும் இதனுண்மைவேறென உரைத்தன என்பர் ஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்கள். அசுரனையும் சைலத்தையும் பிளந்தது: ''கொன்னெடு வேற்ருரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக, வீர வடிவேல் விடுத்தோனே'' (கந்தர்கலிவெண்பா).

கத்தான கத்த வன ந்தீர்க்கு மான்மரு கன்வள்ளி
கத்தான கத்தன் றியாகந் தர நற் கடிமனைய [மோ
கத்தான கத்தொலி மல்கே ரகன்சுரர் கைதொழும
கத்தான கத்தன் றிருவடி யேமுத்தி காத்தவர்க்கே.

இ - ள்: கத்து ஆன் அகம் தவனம் - கதறுகின்ற பசுக்களினிடத்துள்ள தவிப்பை, தீர்க்கும் மால் மருகன்- போக்கியருளிய கண்ணனுகிய திருமாலின் மருகரும், வள்ளி மோகத்தான் - வள்ளியம்மையாரிடத்து விருப்ப முடையவரும், அகத்தன் - அடியார்களது இதயத்தில் நீங்காதிருப்பவரும், தியாகம்தர - வேண்டியவற்றைக் கொடுக்கும்பொருட்டு, நல் கடி மனை அகத்து - நல்ல காவல்களோடுகூடிய வீடுகள்தோறும், ஆனகத்து ஒலி

மல்கு - தேவதுந்துபிகளின் ஒலிகள் நிறைந்த, ஏரகன் - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரும், சுரர் கை தொழும் - முப்பத்துமுக்கோடிதேவரும் யாவரும் கை குவித்து வணங்கும், மகத்தான கத்தன் - பெருஞ்சிறப் புடனே கூடிய கர்த்தாவுமாகிய சுவாமிநாத சுவாமியி னிடத்து, காத்தவர்க்கு - காத்துக்கொண்டு பாடு கிடந்த வர்களுக்கு, திருவடியே முத்தி - திருவடியே முத்தி தருவனவாம் என்றவாறு.

ஆன் - பசுக்கள். அகம் - இடம். தவனம் - தவிப்பு. தியாகம் - கொடை. கடி - காவல். ஆனகம் - தேவ துந்துபி வாத்தியம். மகத் - பெருமை. காத்திருத்த லாவது: உம்மையன்றி எமக்கு வேறு புகலிடமில்லை யென்று பாடுகிடத்தல். இந்திரன் கல்மழை பொழி வித்ததனுல் அந்த மழை பசுக்களுக்கு வருத்தத்தை விளை வித்தது; அன்றியும் பேரிடிகளின் ஓசையும் அச்சந்தந்து ஆநிரையை மிக வருத்தின. கண்ணபிரான் கோவர்த் தனமலையை எடுத்துக் குடையாகப்பிடித்து அவைகளின் தவிப்பை நீக்கினுன் என்க. ''ஆதவ னந்தரந் தோன் ருமற் கன்மழை யார்த்தெழுநாள், ஆதவ னந்தர வெற் பெடுத்தான்'' (திருவரங்கத்தந்தாதி).

தவர வரவரை யன்றேவர் வாசவன் சந்திரனு
தவர வரவரை மேவ வசுரர் சமரிடைமுந்
தவர வரவரைப் போதி லறுத்தரு டன்னையளித்
தவர வரவரை மன்னே ரகற்குச் சமானமின்றே. 67

இ - ள்: தவர் - முனிவர்களும், அ அரவர் - அந்த ஆதிசேடனை அணையாகக்கொண்டு கிடக்கும் திருமாலும், அயன் - பிரமதேவரும், தேவர்-தேவர்களும், வாசவன் - வசுக்களுக்குத் தலைவனுகிய இந்திரனும், சந்திரன் - சந்திரனும், ஆதவர் - பன்னிருசூரியரும், அவர் - (ஆகிய) அவர்கள் எல்லோரும், அவரை மேவ - அம்முருகக்

கடவுளையடைந்து (வேண்டிக்கொள்ள), அசுரர் - சூர பன்மன் சிங்கமுகன் முதலிய அசுரர் சேனைவெள்ளம், சமரிடை முந்த வர வர - போரிலே முற்பட்டு வந்து கொண்டிருக்க, அரை போதில் அறுத்து - அரைநொடிப் பொழுதிற்குள்ளே அவரையெல்லாம் அழித்து, அருள் தன்னை அளித்தவர் அவர் - கருணைசெய்து (அத்தேவர் களையெல்லாம்) பாதுகாத்தருளிய கடவுள் அவராவார், (ஆகையால்) ஏரகற்கு சமானம் இன்று - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாத சுவாமிக்கு ஒப்பாக வேறொரு கடவுளுமில்லை, (ஆதலின்) அவரை மன் - அந்தத் திருவேரகமாகிய சுவாமிமலையிலே போய் அவரை வழிபட்டிருங்கள் என்றவாறு.

தவர் - தவசிகள். அரவர் - திருமால். ஆதவர் - சூரியர்: அவர் பன்னிருவர். சமர் - போர். சமானம் - ஒப்பு.

## தலைவி கூற்று

**மான வராக மருப்பரன் மைந்தர் வரிக்குயிலை**
**மான வராக மொழிபேசும் வள்ளி மனத்துக்கின்ப**
**மான வராக வினோரக வென்பார்க் குவந்தருள்கோ**
**மான வராக மணத்தா ரொழிக்கு மயற்கடலே. 68**

இ - ள்: மானம் வராக மருப்பு - பெருமையை யுடைய திருமாலாகிய பன்றியினது கொம்பை அணிந்த, அரன் மைந்தர் - சிவபெருமானுடைய திருக்குமாரரும், வரி குயிலை மான - வரிகளையுடைய குயிலின்குரலையொத்த, அராக மொழி பேசும் - இனியசொற்களைப் பேசுகின்ற, வள்ளி - வள்ளியம்மையாரது, மனத்துக்கு இன்பமானவர் - மனத்துக்கு இன்பமானவரும், ஆ - பசுக்களையுடைய, கவின் ஏரக என்பார்க்கு - அழகிய திருவேரகத்தில் உள்ளவரே என்று சொல்லித் துதிப்பவர்க்கு, உவந்து

அருள் கோமான் - மகிழ்ந்து அருள் செய்கின்ற தலைவரு மாகிய, அவர்-அந்தச் சுவாமிநாத சுவாமியினது, ஆகம்- திருமார்பில் அணிந்து விளங்கும், மணம் தார் - மணம் பொருந்திய மாலையானது, மயல் கடல் ஒழிக்கும் -(காம) மயக்கமாகிய கடலை ஒழித்து விடும் என்றவாறு.

மானம் - பெருமை. வராகம் - பன்றி. மருப்பு - கொம்பு. மான - ஒப்ப: உவமவுருபு. அராகம் - இச்சை, விருப்பம். ஆகம் - மார்பு. தார் - மாலை.

கடகர டக்குஞ் சரமங்கை
பங்க கதிரயில்வி
கடகர டக்குலம் போற்றமர்
சுற்றவக் காலன்செய்நோய்
கடகர டக்குன் று போன்மகத்
தோன்றிக் கதித்துமுன்றி
கடகர டக்குந் திருவே
ரகாகன காசலனே. 69

இ - ள்: கடம் - மதநீர் ஒழுகுகின்ற, கரடம் - கன்னத்தையுடைய, குஞ்சரம் மங்கை பங்க - ஐராவதம் என்னும் இந்திரனுடைய பட்டத்து யானையால் வளர்க் கப்பெற்ற தெய்வயானையம்மையாரைப் பாகத்தில் உடையவரே, கதிர் - கிரணங்களை வீசும், அயில் - வேற் படையையேந்திய, விகடகர - அழகாகிய திருக்கரத்தை யுடையவரே, அடு - கொல்லும், அ குன்று போல் - அந்த மலைபோலும், மகம் தோன்றி - நாரதமுனிவர் இயற்றிய யாகத்திலே தோன்றி, கதித்து முன் திகழ் - எழுந்து முன்னே விளங்கிய, தகர் - ஆட்டுக்கிடாயை, அடக்கும்-அடக்கிய, திருஏரகா - திருவேரகத்தில் எழுந் தருளியுள்ளவரே, கனகம் அசலனே - பொன்போலும் அழகிய மலைகள்தோறும் விளங்குபவரே, டக்கு - முரண்

பட்ட, உலம்போல் - திரண்ட கல்லைப்போலும் (தோள் களையுடைய), தமர் சுற்ற - இயமதூதர்கள் சூழ, அ காலன் செய் - அந்த இயமன் செய்யும், நோய்கள் தகர்- துன்பங்களை நீக்கியருளுவீராக என்றவாறு.

கடம் - மதநீர். கரடம் - மதச்சுவடு, கதுப்பு. குஞ் சரம்-யானை; இங்கே அயிராவத யானையைக் குறித்தது. அயில் - வேற்படை. விகடம் - அழகு. மகம் - யாகம். அசலம் - மலை. டக்கு=இடக்கு; முதற்குறை. தமர் - தம் மவர், சுற்றத்தார். தூதுவர்களுடன் சூழ்ந்து வந்து இயமன் செய்யும் துன்பத்தைப் போக்கியருளுக என்ற படி. தகர்த்தல் - பொடிபடுத்தல். நாரதர் யாகத்தில் தோன்றிய ஆட்டுக்கிடா: - ''நெருப்பிலுதித், தங்கட் புவன மனைத்து மழித்துலவும், செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந் - தெங்கோன், விடுக்குதியென் றுய்ப் பவதன் மீதிவர்ந் தெண்டிக்கும், நடத்தி விளையாடு நாதா'' (கந்தர் கலிவெண்பா). காலன் - யமதூதர்க்கு நாயகஞ்செய்வான்.

கனகா சலம்ப விள ந்தேமல் பூத்துக்கச் சுக்கடங்காக்
கனகா சலமுலை யாளெனும் வள்ளி கருத்துறைமோ
கனகா சலகலச் செய்யே ரகமுரு காபன்னிரு
கனகா சலனப் பவந்திர நல்குநின் காலெனக்கே.

இ - ள்: கன காசு அலம்ப - பெரிய மணிமாலை கள் ஒலிக்கும்படி, இளம் - இளமையான, தேமல் பூத்து - சுணங்கு பொன்போலப்படர்ந்து, கச்சுக்கு அடங்கா - கச்சுக்குள் அடங்காத, கனக அசல முலையாள் எனும் - மேரு மலைபோலும் தனபாரங்களை உடையாள் என்று சொல்லும், வள்ளி - வள்ளியம்மையாரது, கருத்து உறை மோகன - மனத்தில் வீற்றிருக்கும் மோகத்தை யுடையவரே, காசு - இரத்தினங்களும் பொன்னும், அல்

அகல செய் - இருளைக் கெட்டோடச்செய்யும், ஏரக முருகா - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளே, பன்னிரு கனகாசலன - பன்னிரண்டு (தோள்களாகிய) பொன்மலைகளையுடையவரே, பவம் தீர - என்னுடைய பிறவிநோய் நீங்கும்படி, நின்கால் - உம்முடைய திருவடிகளை, எனக்கு நல்கு - அடியேனுக்குக் கொடுத்தருளுவீராக என்றவாறு.

காசு - இரத்தினம். கனகாசலம் - பொன்மலை, மேரு. அல் - இருட்டு. பவம் - பிறப்பு. கால் - திருவடி. கச்சு - இரவிக்கை; "நகில்கள் விம்மிவீங்கா வகை கட்டுவது. கச்சிட்டுக்கட்டுவது கொங்கைகள் தாம் காணுமல்; துகிலிட்டு மறைப்பது அவற்றைப் பிறர் காணுமல்" என்பர் தக்கயாகப்பரணி உரையாசிரியர்.

காலா யுதங்கலென் னென் றுவெங்
கூற்றங் கடுகுமுன்னே
காலா யுதமு மயிலு
மயிலுங்கண் டாலுய்குவேன்
காலா யுதகமண் விண்ணங்கி
யாகிய கந்ததண் டைக்
காலா யுததி யுலகேத்து
மேரகங் காண்கையுற்றே. 71

இ - ள்: கால் - வாயு, ஆய் உதகம் - ஆராயப்படும் அப்பு, மண் - பிருதிவி, விண் - ஆகாயம், அங்கி - தேயு, ஆகிய கந்த-ஆகிய ஐம்பெரும்பூதங்களாகவும் விளங்கும் கந்தசுவாமியே, தண்டை காலா - தண்டை என்னும் அணியை அணிந்த திருவடிகளையுடையவரே, உததி உலகு ஏத்தும் - கடலாற் சூழப்பட்ட உலகத்தார் துதித்து வணங்கும், ஏரகம் காண்கை உற்று - திருவேரகத்தைத் தரிசித்து, ஆயு தங்கல் என் என்று - (இவன்)

ஆயுளின் முடிவு நீட்டித்துத் தங்குதற்குக் காரணம் யாதாம் என்று, வெம் கூற்று கடுகும் கால் - கொடிய இயமன் விரைந்து என்பால் வருங்காலத்து, முன்னே - (அடியேன்) எதிரிலே, காலாயுதமும் மயிலும் அயிலும் - உம்முடைய கோழிக்கொடியையும் மயில் வாகனத்தையும் வேற்படையையும், கண்டால்-தரிசனம் செய்தால், உய்குவேன் - நான் கடைத்தேறுவேன் என்றவாறு.

உதகம் - நீர். இறைவன் பஞ்சபூதங்களிலும் கலந்து நின்றும் அவற்றைத் தொழிற்படச் செய்வன். தண்டை-ஒருவகைக்காலணி. உததி - கடல். ஆயு - ஆயுட்காலம். கூறுபடுத்துதலின் கூற்று என்றார், உடலையும் உயிரையும் வேறுசெய்தல். கடுகுதல் - விரைதல். காலாயுதம்-காலை ஆயுதமாகவுடையது கோழி. 'மயிலும் அயிலும்' என்றார் 'வேலுமயிலும்' என்னும் மகாமந்திரம்நோக்கி. உய்தல் - உஜ்ஜீவித்தல், பிழைத்தல். உய்குவேன் - க்ருதார்த்தனுவேன் என்றபடி.

கயவா னனத்தன் றனக்கிளை
யாய்வள்ளி காந்தமுரு
கயவா னனத்தரி தன்மரு
காவயிற் கையதெய்வக்
கயவா னனத்த மடையாமற்
காத்தருள் கந்தநற்பங்
கயவா னனத்தடஞ் சூழே
ரகத்துக் கதிபதியே. 72

**இ-ள்:** கயம் ஆனனத்தன் தனக்கு இளையாய் - யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளுக்கு இளையவரே, வள்ளி காந்த - வள்ளியம்மையாருக்குக் கணவரே, முருகய-முருகையனே, நல் வால் நத்து அரிதன் மருகா-நல்ல வெண்மையான பாஞ்சசன்னியம் என்னும் சங்கை

ஏந்திய திருமாலின் மருகரே, அயில் கைய - வேற்படை பொருந்திய கையை உடையவரே, கந்த-கந்தசுவாமியே, நல் பங்கயம் - நல்ல தாமரை மலர்களில், வான் அனம்-பெரிய அன்னப்பறவைகள் தங்கியிருக்கும், தடம் சூழ் - தடாகங்கள் சூழ்ந்துவிளங்கும், ஏரகத்துக்கு அதிபதியே-திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவரே, தெய்வம் கயம் வான் - தெய்வத்தன்மை பொருந்திய ஐராவதம் வசிக்கும் இந்திரலோகம் (அமராவதி), அனத்தம் அடையாமல் காத்தருள் - துன்பமடையாமல் பாதுகாத்தருள்வீராக என்றவாறு.

கயம்-யானை. ஆனனம்-முகம். காந்தன் - கணவன். வால் நத்து - வெள்ளிய சங்கு. அயில்-வேல். பங்கயம் - செந்தாமரை மலர். தெய்வக் கயம் - தெய்வயானையாகிய ஐராவதம்; தெய்வயானையம்மையார் வசித்த வானுலகம் எனினுமாம். அனத்தம் - துன்பம். முருகைய=முருகய: போலி. முருகு - மாறாத இளமை: அதனையுடையவர் முருகக்கடவுள்.

கதிகா விரிகங்கை யாடிவந்
தாலுண்டு காதல்செல்லுங்
கதிகா விரிமைப் பொழுதும்
விடீர்நுங் கபடத்துச்சங்
கதிகா விரிய வினையாவு
நீங்கிக் களிப்பவெய்துங்
கதிகா விரிதிரு வேரக
வென்றொரு காற்சொலவே. 73

இ-ள்: நும் கபடம் துச்சங்கதி - உம்முடைய வஞ்சகத்தன்மையையுடைய கெட்டசெயல்களை, இமைப் பொழுதும் விடீர் - ஒரு நொடிப்போதாயினும் விடமாட்டீர், கா வினை யாவும் - (நும்பால் வாராமல்)

பாதுகாத்தற்குரிய வினைகளெல்லாம், நீங்கி இரிய - நீங்கிக்கெட்டோடும்படி, காதல் செல்லும் கதி - மன விருப்பம் செல்லும் வேகத்தை, காவிர் - செல்லாமல் தடுக்கமாட்டீர், கா விரி திருவேரக என்று - சோலைகள் பரவிய திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியே என்று, ஒரு கால் சொல - ஒருமுறை வாயாற் சொல்ல; காவிரி கங்கை ஆடிவந்தால் - காவிரிநதியிலும் கங்காநதியிலும் சென்று விதிப்படி முழுகி வந்தால், கதி உண்டு - (அதனுல் உண்டாகும்) பயன் உண்டாகும், (அதுவல்லாமலும்) களிப்ப - நீங்கள் மனமகிழ, கதி எய்தும் - (மறுமையில்) மோட்சமும் சித்திக்கும் எ-று.

மனிதர்களே! நீங்கள் வஞ்சகமுடைய கெட்ட செய்கைகளையும், கண்டவிடத்து மனம் செலுத்துதலையும் நீக்கித் திருவேரகத்திலே முருகவேளை ஒருமுறை துதியுங்கள். புண்ணிய நதிகளிலே சென்று முழுகும் பயனையும், முத்திப்பேற்றையும் எளிதில் பெறுவீர்கள் என்று அறிவுறுத்தியபடி.

துச்சங்கதி - துச்செயல்கள். சங்கதி - விஷயம். இரிய - கெட்டோட. ஒருகால் - ஒருமுறை. காவிரி தென்னுட்டிலும், கங்கை வடநாட்டிலுமுள்ள புண்ணிய நதிகள். கதி - பயன், முத்தி. ''கங்கையாடிலென் காவிரியாடிலென், கொங்கு தண்கும ரித்துறை யாடிலென், ஓங்கு மாகட லோதநீ ராடிலென், எங்குமீச னெனுதவர்க் கில்லையே'' (திருக்குறுந்தொகை) என்பதனையும் இதனுடன் இணைத்துக் காண்க.

வேதா கமஞ்சுகஞ் சொல்லே
ரகவடி வேலவுய்க
வேதா கமஞ்சுமொன் றும்படைத்
தோய்வரம் வெப்பெழும்ப

வேதா கமஞ்சும் படிசாந்
திணையப்பு வார்கள்விஞ்ச
வேதா கமஞ்சள கத்தார்கைத்
தேனிட்ட மேற்பணியே. 74

இ - ள் : சுகம் - கிளிப்பிள்ளைகள், வேதாகமம் சொல் ஏரக - வேதாகமங்களைச் சொல்லும் திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, வடிவேல - கூரிய வேற்படையையுடையவரே, கம் அஞ்சும் ஒன்றும் படைத்தோய் - திருமுடிகள் ஆறுகவுள்ளவரே, வெப்பு எழும்ப- காமத்தால் உண்டாகிய வெப்பம் மிக, தாகம் - அதனுல் உண்டாகும் விடாய், அஞ்சும்படி - அச்சத்தைத்தர, மஞ்சு அளகத்தார் - மேகம் போலும் கரிய கூந்தலையுடைய மகளிர், சாந்தினை அப்புவார்கள் - சந்தனத்தை அரைத்துப்பூசுவார்கள், தாகம் விஞ்ச- (அந்தச்சந்தனப் பூச்சினுல்)மேலும் காமவிடாய் பெருகுதலினுல், இட்டம் கைத்தேன் - அப்பெண்கள்பால் வைத்த விருப்பத்தை வெறுத்தொழிந்தேன், (ஆதலால் அடியேன்) மேல்-இனி மேல்,உய்க - உய்யும் பொருட்டு, வரம்தா - வரத்தைக் கொடுத்தருளும், பணி - அவ்வாறு பணிப்பீராக எ - று.

சுகம் - கிளி. வடி - கூர்மை. கம் - தலை, திருமுடி. மஞ்சு - மேகம். அளகம் - கூந்தல். சாந்து - சந்தனம். அந்தணச்சிறுர் சந்தை சொல்ல அதனைக்கேட்டிருக்கும் கிளிப்பிள்ளைகளும் வேதாகமத்தைச் சொல்லுவனவாம் என்க. இதனுல், திருவேரகத்தில் அந்தணர் மிக்குள்ளனர் என்றும், அவர்கள் மக்களாகிய சிறுர்களெல்லாம் வேத அத்தியயனம் செய்கின்றனர் என்றும் அறிக. ‘‘ வேதியர் மாதவர் செல்வந்தவிரா மனை சூழ் ஏரகா’’ (பாடல் - 11) என்றுர் முன்னும்.

பணியக் கரமரர் மாலயன்
வந்து பரவிநிதம்
பணியக் கரவுறு சூர்வென்ற
வேரகப் பண்ணவநற்
பணியக் கரவணிந் தோன்பால
நின்புகழ் பாடுதற்கே
பணியக் கரமிரு மூன்ருேயென்
னுட்க படமறவே. 75

இ - ள்: பண் இயக்கர் - இராகத்தைப் பாடும் இயக்கர்களும், அமரர் மால் அயன் - தேவர்களும் திரு மால் பிரமர்களும், வந்து நிதம் பரவி பணிய - வந்து நாடோறும் (தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லித்) துதித்து வணங்க, கரவு உறு சூர் வென்ற - வஞ்சனை பொருந்திய சூரபன்மனை வென்று அழித்த, ஏரகம் பண்ணவ - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் கடவுளே, நல் பணி - சிறந்த ஆபரணங்களாக, அக்கு - எலும்பு மாலையையும், அரவு - பாம்புகளையும், அணிந்தோன் - அணிந்து விளங்கும் சிவபெருமானது, பால - திருக் குமாரரே, அக்கரம் இரு மூன்ருேய் - ஆறெழுத்து மந்திரத்திற்குரியவரே, நின் புகழ் பாடுதற்கு - உம் முடைய கீர்த்தியைச் சொல்லிப் பாடுவதற்கு, என் உள் கபடம் அற பணி - என்னுடைய மனம் கபடமில்லாமல் இருக்கும்படி அருள்செய்வீராக என்றவாறு.

பண் - இராகம். கரவு, கபடம் - வஞ்சனை. பண்ண வன் - கடவுள். பணி - ஆபரணம், கட்டளை. அக்கரம் இரு மூன்று - ஆறெழுத்து; அது சுப்பிரமணிய மந்திரம்.

படவர வந்தி மதிபுனை
வார்தரு பாலருக்காட்
படவர வந்தினஞ் சேரா
தருள்வர் பணிமயற்க

படவர வந்திகழ் மாத
ரிடைப்படி யாதுநன்னேய்
படவர வந்தியர் சூழே
ரகத்தையன் பாலுளமே. 76

இ - ள் : உளமே - மனமே, பட அரவு - படத்தை யுடைய பாம்புகளையும், அந்தி மதி - அந்திக்காலத்தே தோன்றும் சந்திரனையும், புனைவார் - தரிப்பவராகிய சிவபெருமான், தரு பாலருக்கு - பெற்றருளிய முருகக் கடவுளுக்கு, ஆட்படு - அடிமைப்படுவாயாக, (நீ அவருக்கு அடிமைப்படுவாயாயின்) அவர் - அம்முருகக் கடவுள், அவம் தினம் சேராது அருள்வர் - வீண்செயல்கள் நாடோறும் (உன்னை வந்து) சாராமல் அருள் செய்வர், (ஆகலின்) மயல் - காம மயக்கமும், கபடம் - வஞ்சகமும், அரவம்-ஆரவாரமும், திகழ் மாதர் இடை- விளங்கும் பெண்களிடத்து, படியாது-மனம் தோயாமல், நல் நோய் பட - மிக்க பிறப்பிறப்புக்கள் தொலைய, வரம் வந்தியர் சூழ் - மேலான மங்கலப் பாடல்களைப் பாடுவோர் சூழ்ந்திருக்கும், ஏரகத்து ஐயன்பால் பணி - திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாதசுவாமி யினிடத்துப் போய் வணங்குவாயாக என்றவாறு.

அந்தி மதி - பிறைச்சந்திரன். பாலர் - குமாரர். அவம்-வீண், பயனின்மை. மாதரிடை: இடை ஏழனுருபு. நோய் - பிறவிப்பிணி. வந்தியர் - மங்கலம் பாடுவோர்.

பாலிக் குமரிய சொல்லென்
றவர்கைப் படாதெற்கருள்
பாலிக் குமரி மருகா
வயற்கும் பரந்தொளிர்க

பாலிக் குமரிய ஞானஞ்சொல்
வோய்தண் பழனங்களின்
பாலிக் குமரியுஞ் சூழேர
காமலர்ப் பாதத்தனே. 77

இ-ள்: பாலிக்கும் அரி மருகா - காத்தற்றொழிலை யுடைய திருமாலின் மருகரே, அயற்கும் - பிரமதேவருக்கும், பரந்து ஒளிர் கபாலிக்கும் - பரவி விளங்கும் பிரமகபாலத்தையேந்திய சிவபெருமானுக்கும், அரிய ஞானம் சொல்வோய் - அருமையான ஞானேபதேசம் செய்தருளியவரே, தண் பழனங்களின்பால் - குளிர்ந்த வயல்களினிடத்து, இக்கும் - கரும்பும், அரியும் சூழ் - நெற்கதிர்களும் சூழ்ந்திருக்கும், ஏரகா - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, மலர் பாதத்தனே-செந்தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகளையுடையவரே, பால் இக்கும் அரிய சொல் என்றவர் - பாலினும் தேனினும் மிக்க சுவையையுடைய சொற்களையுடையவர் என்று சொல்லப்படும் மகளிர், கைப்படாது - கையின்கண் சிக்காதபடி, எற்கு அருள் - அடியேனுக்கு அருள் செய்வீராக என்றவாறு.

கபாலி - பிரமகபாலத்தையுடையவர். பழனம் - வயல். இக்கு - கரும்பு. அரி - நெற்கதிர். கைப்படல் - கைவசப்படுதல், சிக்குண்ணல். அரிய - அருமையான.

தத்துவந் தானந் தவமோர்
கிலங்கதிர்ச் சத்தியையத்
தத்துவந் தானந் திருவே
ரகந்தொழச் சார்கிலம்ம
தத்துவந் தானந் தருமா
நிகர்நெஞ்ச மேயினிச்சாந்
தத்துவந் தானந் திடாவகை
யுன்னலந் தாரணிக்கே. 78

இ - ள் : மதத்துவம் - கொழுப்புத் தன்மையையும், தானம்தரு - மதநீரையும் உடைய, மா நிகர்நெஞ்சமே- யானையைப்போலும் செருக்குடையமனமே, தாரணிக்கு- இந்நிலவுலகத்தில், தத்துவம் - தத்துவவுணர்வும், தானம் தவம் - தானமும் தவமும் ஆகிய இவற்றை, ஓர்கிலம் - ஆராய்ந்தறிந்தோமில்லை, கதிர் - கிரணங்களை வீசும், சத்தியை - வேற்படையை, அத்தத்து உவந்தான் - திருக்கரத்திலே மகிழ்ந்து தரித்தருளும் சுவாமிநாத சுவாமியினது, அம் திரு ஏரகம் தொழ - அழகிய திரு வேரகத்தை வணங்கும் பொருட்டு, சார்கிலம் - சென்று சேர்ந்தோமில்லை, இனி - மற்றும், சாந்தத்துவந் தான் - சாந்தநிலையானது, நந்திடாவகை - கெடாமலிருக்கும் பொருட்டு, உன்னலம் - தியானம் செய்தோமில்லை எ-று.

இனி நாம் உய்யும் வகை எப்படி என்பது எஞ்சி நின்றது.

மதம்-கொழுப்பு; மதத்துவம்-கொழுப்புத்தன்மை. தானம் - மதசலம், சற்பாத்திரத்திற்கொடுத்தல். தாரணி-பூமி; தரணி என்ற வடசொல் விகாரப்பட்டது.

தாரா தனத்துக் கவலையை
நாளுந் தவஞ்செயின்பத்
தாரா தனத்துக் கருகாக்
குவையெனைத் தண்கடப்பந்
தாரா தனத்துவர் வாய்வள்ளி
பங்க சதுமறைக்கா
தாரா தனத்துய ரேரக
சூர சமரத்தனே. 79

இ - ள் : தண் கடப்பந் தாரா - குளிர்ந்த கடப்ப மலர்மாலையைத் தரித்தவரே, தனம் துவர் வாய் வள்ளி பங்க - நகில்களையும் சிவந்தவாயையுமுடைய வள்ளி

அம்மையாரை (வலப்) பக்கத்திலுடையவரே, சது மறைக்கு ஆதாரா - நான்குவேதங்களுக்கும் ஆதாரமாக வுள்ளவரே, தனத்து உயர் ஏரக - செல்வங்களால் உயர்ந்த திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, சூர சமரத்தனே - சூரபன்மனேடு போர்செய்து கொன்ற ருளியவரே, நாளும் - எக்காலத்தும், அனத்து கவலையை தாராது-அடியேனுக்குச் சோற்றுக் கவலையைத்தராமல், எனை - என்னை, தவம் செய் இன்பத்தார் - தவம்செய் திருத்தலையே தமக்குப் பெரிய இன்பமாகக் கொண் டொழுகும் முனிவர்களது, ஆதனத்துக்கு அருகு ஆக்கு வை - இருக்கைக்குச் சமீபமாக இருக்கும்படி செய்தருளு வீராக என்றவாறு.

தார் - மார்பிலணியும் மாலை. ஆதாரன் - நிலைக் களமாகவுள்ளவர். தனம் - நகில், செல்வம். சமரம் - போர்; சமரத்தன்: அத்துச்சாரியை. அன்னம்=அனம் - சோறு. தவம் என்றது ஈண்டுச் சரியை கிரியா யோகங் களை. ஆதனம் = ஆசனம் - பீடம். இவ்வுடல்‘ சோற்று லெடுத்த சுவர்’ ஆகலின், இதன் பொருட்டு இரைதேடி அலமராமல் தவஞ் செய்யும் முனிவர் பக்கலில் என்னைச் செலுத்துவீராயின் எப்படியாயினும் யான் கடைத் தேறுவேன் என்றபடி.

சமனம ராட வரும்போதுன்
றண்டைச் சரணமென்வஞ்
சமனம ராவணி யான்பால
வுன்னத் தனிவரந்தா
சமனம ராபதி யென்றேங்கு
மேரகந் தான்வளர்வா
சமனம ராமர மட்டோன்
மருகநிற் சார்ந்தனனே. 40

இ - ள் : அரா அணியான் பால - பாம்பை ஆபரண மாகத் தரித்தருளும் சிவபெருமானது திருக்குமாரரே, அமராபதி - இந்திரன் நகரமாகிய அமராபதி, சமன் என்று - ஒப்பாகும் என்று சொல்லும்படி, ஓங்கும் - உயர்ந்துவிளங்கும், ஏரகம் தான் வளர் வாச-திருவேர கத்தை தாம் எழுந்தருளியிருக்கும் இடமாகக்கொண்டு வசித்தருள்பவரே, மன் அம் மராமரம் - நிலைபெற்ற அழகிய மராமரங்கள் ஏழையும், அட்டோன் மருக - ஒருசேரத் துளைத்து அழித்த சீராமனாகிய திருமாலின் மருகரே, நின் சார்ந்தனன் - உம்மை அடைக்கலமாக வந்தடைந்தேன், சமன் - இயமன், அமர் ஆட வரும் போது - என்னிடத்துப் போர்செய்ய வருங்காலத்தில், உன் தண்டை சரணம் - உம்முடைய தண்டையணிந்த திருவடிகளை, என் வஞ்சமனம் உன்ன - என்னுடைய வஞ்சநெஞ்சம் தியானம் செய்திருக்கும்படி, தனி வரம் தா - ஒப்பற்ற வரத்தைத் தந்தருளும் என்றவாறு.

அரா - பாம்பு. அணி - ஆபரணம். அமராபதி - இந்திரனுடைய நகரம். சமன் - ஒப்பு, இயமன். சமம்= சமன் : இறுதிப்போலி. அடுதல் - கொல்லுதல். அமர் ஆட - போர்செய்ய; போரிலே வெற்றிகொள்ள எனினு மாம். உன்ன - தியானம் செய்ய. மண்ணுலகத்திலுள்ள திருவேரகம் விண்ணுலகத்திலுள்ள இந்திரன் நகரமாகிய அமராபதிக்கு ஒப்பு என்று சொல்லும்படி உயர்ந்து விளங்கும் என்றபடி.

## தோழிகூற்று

தனம்பூசிக் காளன்ன முண்ணுண்மின்
 னுட்குத் தணிவிலுள்வி
தனம்பூசிக் காற்றிக் குழன்முடி
 யாள்வெஞ் சமர்புரிம

தனம்பூசிக் குங்கடி தாய்மெய்யிற்
றைக்கத் தளர்ந்துநற்சந்
தனம்பூசிக் காடிரு வேரக
நின்னடி தந்தருளே. 81

இ - ள்: திரு ஏரக - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியே, மின்னுட்கு - மின்னற்கொடிபோன்ற எம்முடைய தலைவிக்கு, வெம்சமர் புரி - கொடிய (காமப்)போரைச்செய்யும்,மதன் அம்பு -மதனவேளின் மலரம்புகள், ஊசிக்கும் கடிது ஆய் - (எஃகினுற் செய்த) ஊசியைவிடக் கடுமையுடையதாய், மெய்யில் தைக்க - உடம்பு முழுவதும் குத்தித்துன்புறுத்த, தணிவு இல் உள் விதனம் - (அதனுல் அவள்)ஆறுதலில்லாத மனத்தில் உண்டாகிய துக்கத்தால்,தளர்ந்து -மனமுடைந்து, தனம் பூசிக்காள் - தன்னுடைய பொருள்களை (விரும்பிப்) பாதுகாத்தலைச் செய்யாள், அன்னம் உண்ணுள் - உணவினை உண்ணுள், குழல் - தன்னுடைய கூந்தல், சிக்கு ஆற்றி-சிக்குதலைப் போக்கி, பூ முடியாள் - மலர்களைச் சூட்டிக்கொள்ளாள், நல் சந்தனம் பூசிக்காள் - வாசனைபொருந்திய சந்தனச்சேற்றை உடம்பிலே பூசிக்கொள்ள மாட்டாள், (இவ்வாறு அவள் ஒன்றும் செய்யாமல் துன்புறுதலால்) நின் அடி தந்து அருள் - உம்முடைய திருவடியைத் தந்து அவளைப் பாதுகாத்தருளும் என்றவாறு.

சமர்-போர். கடிது-கொடுமையுடையது. விதனம்= விசனம் - துக்கம். தனம் - பொருள்,திரவியம். பூசித்தல்- போற்றுதல், காப்பாற்றுதல். சந்தனம் பூசிக்காள் உலகவழக்கு. சிக்கு - மயிரிலுள்ள சிக்கல்கள்.

தந்தந் தனம்பந்து முல்லை
வதனஞ் சலசமிடை
தந்தந் தனந்தனி மெய்யாகும்
வள்ளி தலைவநின்ப

தந்தந் தனந்தங் கவியுனக்
கேசொலத் தண்ணளிகள்
தந்தந் தனந்த மெனும்பொழி
லேரக தாதவமே. 82

இ - ள்: தந்தம் முல்லை - பற்கள் முல்லையரும்பைப் போன்றன, தனம் பந்து - நகில்கள் பந்தைப்போன்றன, வதனம் சலசம் - முகம் செந்தாமரை மலர் போன்றது, இடை தந்து - நுண்ணிய இடையானது நூல் போன்றது, தனி மெய் அம்தனம் - ஒப்பற்ற மேனி அழகிய பொன்னைப்போன்றது, ஆகும் வள்ளி தலைவ - ஆம் என்று சொல்லும் வள்ளியம்மையாருக்குக் கணவரே, தண் அளிகள் - குளிர்ந்த வண்டுகள், தந்தம் தனந்தம் எனும் - தந்தந் தனந்தம் என்னும் ஒலிக்குறிப்புடன் இசைகளைப் பாடும், பொழில் ஏரக - சோலைகள் சூழ்ந்த திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியே, நின் பதம் தந்து - உம்முடைய திருவடிகளை (அடியேனுக்குக்) கொடுத்து, அனந்தம் அம் கவி - அளவில்லாத அழகிய பாடல்களை, உனக்கே சொல-உம்முடைய விஷயமாகவே பாடும் பொருட்டு, தவம் தா - தவஞ்செய்தலை அருளுக என்றவாறு.

'தந்தந்தனம்பந்து முல்லை' என்பது எதிர் நிரனிறை. வதனம் சலசம் இடைதந்து தனம் மெய் என்பன முறை நிரனிறை. 'தந்தந்தனந்தம்' இசைக்குறிப்பு. அனந்தம்- அளவில்லாதன. தவம் - தவச்செயல். "தருக்காவலாவென்று புல்லரைப்பாடி"; "பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" (தேவா). "அற்பரைப்பூ, ஆசுகவிக்கு வில்வேள் வடிவா அறிவாலகத்தியா, சுக இக்ஷுவலய மன்ன" என்று அற்பரைப்பாடி அலமந்து திரியாமல் நின் திருவடி சம்பந்தமாகப் பாட வரந்தா என்றார்.

தோழிகூற்று

தவனந் தருங்கணை வேளெய்தி
னன்வருஞ் சந்திரனு
தவனந் தருங்குயி லோசையென்
றேங்கித் தளர்ந்துசிறந்
தவனந் தருண முலையா
ளருந்தில டண்மலர் நந்
தவனந் தருமிக வோங்கே
ரகம்வளர் சண்முகனே. 83

இ - ள் : தண் மலர் - குளிர்ந்த மலர்களையுடைய, நந்தவனம் - நந்தனவனங்களும், தரு - பூமரங்களும், மிகஓங்கு - மிகுதியாக உயர்ந்து வளரும், ஏரகம் வளர் - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள, சண்முகனே - ஆறு திருமுகங்களையுடைய சுவாமிநாத சுவாமியே, தருணம் முலையாள் - பருவம் வந்த மங்கையாகிய நமது தலைவி யானவள், வேள் எய்தினன் - காமவேள் வந்துவிட்டான், கணை - அவனுடைய மலரம்புகள், தவனம் தரும்-(காம) வெப்பத்தை உண்டாக்கும், சந்திரன் ஆதவன்-குளிர்ந்த சந்திரன் (காமவெப்பத்தை மிகச்செய்து சுடுதலால்) வெய்ய சூரியன் போன்றவனுனன். அருங் குயில் ஓசை - அருமையான குயிலினது இனிய குரல், நந்து வரும் என்று - கேட்டைத்தரும் என்று, ஏங்கி தளர்ந்து - மனத்திலே ஏக்கங்கொண்டு சோர்ந்து, சிறந்த அனம் அருந்திலள் - மிக்கசுவையுடைய அன்னத்தையும் உண்ண மாட்டாள் என்றவாறு. வனம் - நீரெனினு மாம்; தண்ணீரும் இறங்கவில்லையே என்க.

நந்தவனம்=நந்தனவனம் - பூத்தோட்டம். தரு - பூக்களுக்குரிய மரங்களும், பழந்தரு மரங்களுமாம். நந்தன வனத்திலே கோட்டுப்பூ, கொடிப்பூ, புதர்ப்பூ,

நீர்ப்பூ என்பன எல்லாம் உள்ளன; அவை பூசனைக் குரியன. பழங்கள் நிவேதனத்துக்குரியன. வேள் - குமர வேள், மதனவேள்; இவர் முறையே செவ்வேள், கரு வேள் எனக் கூறப்படுவர். தருணம் - பருவமுற்ற வயது; புத்திவந்தகாலம். நந்து - கேடு. சிறந்தவனம், சிறந்த அனம்; வனம் - நீர். அனம் - அன்னம், சோறு.

முகமனந் தங்கஞ்ச மென்றோதும்
வள்ளிதன் மோகமுன்னான்
முகமனந் தங்கையிற் கொண்டோ
னமரர் மொழியவர
முகமனந் தங்கு சினங்காட்டு
சூரன்றன் மொய்மணிவிம்
முகமனந் தந்துகள் செய்யே
ரகபொன் முடிக்கந்தனே. 84

இ - ள்: முகம் அல் நந்து அம் கஞ்சம்-முகமானது இருளைக்கெடச் செய்யும் அழகிய தாமரைமலராம், என்று ஓதும் - என்று கண்டோர் சொல்லும், வள்ளிதன் மோக-வள்ளியம்மையாரிடத்து மிக்க நேசமுடையவரே, நான்முக மன் - நான்கு திருமுகங்களையுடைய பிரம தேவரும், நந்து அம் கையில் கொண்டோன் - பாஞ்ச சன்னியம் என்னும் சங்கை அழகிய திருக்கரத்திலேந்திய திருமாலும், அமரர் - முப்பத்து முக்கோடி தேவர்களும், மொழிய - (சூரபன்மன் முதலிய அசுரர்களால் நேரிட்ட தங்களுடைய அவல நிலையைச்) சொல்லி விண்ணப்பம் செய்ய, மனம் தங்கு - மனத்திலே நிலைபெற்றுள்ள, சினம் காட்டு - கோபத்தை மிகவும் வெளிப்படுத்து நின்று (போரைச்செய்த), சூரன் தன் வரம் உக-சூரபன் மனுக்குச் சிவபெருமான் தந்தருளிய வரங்கள் முழுமை யும் (தன் தீ நடத்தையால்) அழிந்தொழியும்படி, விம்மு மொய் மணி-பருமையையுடைய நெருங்கிய இரத்தினக்

கற்கள் பதிக்கப்பெற்ற, கம் - (முடியினைத்தரித்த)சிரம், அனந்தம் துகள் செய் ஏரக - அளவிறந்த பொடிகளாகச் (துண்டுகளாக) செய்தருளிய திருவேரகத்தில் எழுந்தருளிய சுவாமிநாத சுவாமியே, பொன் முடி கந்தனே - சிறந்த பொன்னாற் செய்யப்பெற்ற கிரீடத்தையணிந்து விளங்கும் கந்தசுவாமியே (என்று சொல்லித் துதித்து), முன் - தியானம் செய்வாயாக என்றவாறு.

அல் - இருள். நந்துதல் - கெடுதல், ஆக்கம் பெறல்: ''நந்தலே கெடுத லாக்கம்'' (நிகண்டு). தாமரை சூரியனைக்கண்டால் மலரும், சந்திரனைக்கண்டால் கூம்பும்; அஃது இயற்கை. இந்தக் கஞ்சம் அல் நந்து கஞ்சமாம்: ஆகலின் சுவண கஞ்சம்போலும். மன்-தலைவன். பாஞ்ச சன்னியம்-பஞ்சசனன் என்னும் அரக்கன் வயிற்றினின்று எடுக்கப்பட்டது. அது, இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம் புரி, இடம்புரிச்சங்கு ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி, வலம் புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம், சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்ச சன்னியம் என அறிக. சூரன் வரம் உகச் செய்தமை :-

'மாயையின் வலியோ னாகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னி வைப்பாம்.'

— (கந்தபுரா - தக்ஷ - உபதேசப்)

என்பதனாலறிக.

கந்தனந் தாதிய வாளேந்து
மான்மரு கன்குழன்மே
கந்தனந் தாதில குங்கஞ்ச
மாம்வள்ளி காந்தன்விளங்

கந்தன ந் தா திவ் வுலகரு
ளேரகக் காங்கெயனநங்
கந்தன ந் தாதி படித்தார்க்
கிலேச்சங் கடவினையே. 85

இ - ள்: கந்து நந்து வாள் ஆதிய - கதை, சங்கம், வாள் முதலிய படைகளை, ஏந்தும் மால் மருகன் - ஏந்தியிருக்கும் திருமாலின் மருகரும், குழல் மேகம் - கூந்தல் மேகம் போன்றும், தனம் தாது இலகும் கஞ்சம் ஆம் - நகில்கள் மகரந்தப்பொடிகளுடன் விளங்கும் தாமரையரும்பு போன்றும், ஆம் - காட்சிதரும், வள்ளிகாந்தன் - வள்ளியம்மையாருக்குக் கணவரும், அந்தம்-அழகானது, நந்தாது விளங்கு - கெடாமல் விளங்கும், இ உலகு அருள் - இந்த உலகத்தைப் படைத்தருளிய, ஏரகம் காங்கெயன் - திருவேரகத்தில் உள்ள கங்காபுத்திரரும் ஆகிய, நம் கந்தன் அந்தாதி - நம்முடைய கந்தசுவாமியாகிய சுவாமிநாத சுவாமியின் மீது பாடப்படும் அந்தாதியாகிய பிரபந்தத்தை, படித்தார்க்கு - படித்தவர்களுக்கு, சங்கடவினை இலே - சங்கடத்தைத்தரும் வினைகள் இல்லையாம் என்றவாறு.

கந்து நந்து வாள் என்னும் ஆயுதங்களைக் கூறவே ஏனைய இரண்டும் அடங்குவனவாம். திருமாலின் சங்கம்- பாஞ்சசன்னியம் என்றும், சக்கரம் - சுதர்சனம் என்றும், கதை - கௌமோதகீ என்றும், வில் - சார்ங்கம் என்றும், வாள் - நந்தகம் என்றும் பெயர் பெறுவனவாம். ''கூராழி சங்கந் திருக்கதை நாந்தகம் கோதண்டமே'' எனப் பஞ்சாயுதங்களைக் கூறியமை காண்க. கந்தனந்தாதி - அருணகிரி நாதர் பாடியருளிய கந்தரந்தாதியு மாம். முருகவேள்படைத்தமை:- பிரமதேவனுக்குப் பிரணவத்தின் பொருள் தெரியாமையால் அவன் தலையிலே குட்டிச் சிறையிட்டபோது தாமே படைத்தல் தொழிலைச் செய் தருளினர் என்பது வரலாறு.

கடக்கா ரியானை யளறுற்
றென நிதிக் காதல்வினை
கடக்கா ரியாவும்பொய் யாக்கண்டிம்
மக்கள் கருத்தென்கொல்சங்
கடக்கா ரியாமனை யாதிய
துன்பங் களைந்துய்ந்திடார்
கடக்கா ரியாக முழங்கே
ரகாவுயர் காசினிக்கே. 86

இ - ள்: தக்கார் - தகுதியையுடைய அந்தணர்கள், யாகம் முழங்கு - வேள்வி செய்யும் மந்திரவொலி மிகுதியும் ஒலிக்கின்ற, ஏரகா - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியே, உயர் காசினிக்கு - உயர்ந்த இந்தப் பூமியில், கடம் கார் யானை - மதநீரை மழைபோலச் சொரியும் யானையானது, அளறு உற்று என - சேற்று நிலத்திலே சென்று அகப்பட்டுக்கொண்டாற்போல, நிதி காதல் வினை கடக்கார் - செல்வத்தின் மீதுள்ள ஆசையும் பெண்களின் மீதுள்ள ஆசையும் (மண்மீதுள்ள ஆசையும்) ஆகிய (பொல்லாத) வினைகளைக் கடத்தல் செய்யார், இ மக்கள் - இந்த மனிதர்கள், யாவும் பொய் ஆ(க) கண்டு - உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் அழியுந் தன்மையுடையனவே என்பதைக் கண்டுவைத்தும், சங்கடம் காரி ஆம் - துன்பத்தைச் செய்வனவாகிய, மனை ஆதிய துன்பம் - மனைவி மக்கள் சுற்றம் மண் பொன் முதலிய துன்பத்தை, களைந்து உய்ந்திடார் - (தம் அறிவால்) அவைகளை நீக்கி உய்யமாட்டார்கள், கருத்து என் கொல் - (ஐயோ) அவர்கள் எண்ணம் யாதாங் கொல் (என அறிய மாட்டோம்) என்றவாறு.

“ ஏரகம் என்னும் திருப்பதியிலே முருகன் எழுந்தருளியிருத்தலும் உரியன். இங்கே அவனை இருபிறப்

பாளராகிய அந்தணர் உரிய காலத்தைத் தெரிந்து துதிப்பர். இவர்கள் தாய்வழியிலும் தந்தை வழியிலும் நன்கு மதிக்கப்பட்ட பழைய குடிகளிலே தோன்றிய வர்கள்; தங்களுக்குரிய(ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும்) ஆறு தொழில் களிலும் இலக்கணம் வழாது நடப்பவர்கள்; தங்கள் இளமையில் நாற்பத்தெட்டு வருடங்களைப் பிரம சரியத்தில் கழித்தவர்கள்; அறத்தைச் சொல்லும் கொள்கையுடையவர்கள்; மூன்று வடிவாக அமைத்து வளர்க்கும் (ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணக்கினி யாகிய) முத்தீயாகிய செல்வத்தையுடையவர்கள்; ஒன்பது இழைகளைக் கொண்டு முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலையுடைவர்கள்; இவர்கள் ஈரமான ஆடை உடம்பிலே கிடந்து உலரும்படியுடுத்து, கைகளை உச்சியிற்குவித்து, முருகனைப்புகழ்ந்து, ஆறெழுத்தாகிய மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரித்து, மணம் பொருந் திய நல்ல புஷ்பங்களை ஏந்தி வழிபடுவார்கள். இவ் வழி பாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து முருகன் இங்கே (திருவேர கத்தில்) தங்கியிருப்பான். அதுவுமன்றி,''

என்னும் உரை நடையமைந்த 'திருமுருகாற்றுப் படைப்பகுதி' யறிந்து இன்புறத்தக்கது. இவ்வுரை நடைப்பகுதி 1933 ஆம் ஆண்டிலே சைவசித்தாந்த மகாசமாஜத்தாரால் பதிக்கப்பட்டுள்ள, திரு. S. வையா புரிப்பிள்ளை எழுதிய திருமுருகாற்றுப்படை உரையி லிருந்து எடுத்துச் சேர்க்கப்பெற்றது. நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் காண்க.

காசிக் குமதிக்க வேதேடு
வீர்நெஞ் சகநெருங்கக்
காசிக் குமதி முகமொழி
யார்துயர் காட்டுமுன்னே

காசிக் குமதி கமகிமை
யேரக கந்தவந்து
காசிக் குமதியை யென்கீர்
துணைகொனுங் கைத்தனமே. 87

இ - ள்: இகு மதிக்கவே - இந்த நிலவுலகத்திலுள்ளார் மதிக்கும்படியாகவே, காசு தேடுவீர் - பொன்னைத் தேடித்தொகுப்பீர்கள், அ காசு நெருங்கு நெஞ்சகம் - அழகிய இரத்தினங்கள் பதித்த அணிகலங்கள் நிறைந்து விளங்கும் மார்பையும், மதிமுகம் - சந்திரன் போன்ற முகத்தையும், இக்கு மொழியார் - கரும்பையொத்த இனிய சொற்களையும் உடைய பெண்கள், துயர்காட்டும் முன்னே - துன்பத்தை விளைவித்தற்கு முன்னமேயே (மிகவிரைவில்), காசிக்கும் அதிக மகிமை ஏரக - வட நாட்டிலுள்ள காசியாகிய புண்ணிய க்ஷேத்திரத்தைவிட மிக்க மகிமை வாய்ந்த திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாதசுவாமியே, கந்த-கந்தசுவாமியே, வந்து கா என்கீர் - வந்து பாதுகாத்தருளும் என்று சொல்லித் துதிக்க மாட்டீர்கள், உம் சிக்கு மதி-உம்முடைய முரண் பட்ட அறிவும், கை தனம் - கையிலுள்ள பொருளும், துணைகொல் - (உம்மை இயமன் வந்துகொண்டுபோகும் காலத்திலே) துணையாக வருமோ? வாராது. ஆகையால், முருகக்கடவுளை வந்தித்து வழிபாடுசெய்திரும் என்பது எஞ்சி நின்றது.

கு - பூமி. காசு - பொன், மணி. இக்கு - கரும்பு. மகிமை - மகத்துவம், பெருமை. சிக்குமதி - முரண் பட்ட புத்தி. தனம் - திரவியம். இதனை,

" விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்ரு
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே."

(கந்தரலங்காரம் - 70).

என்பதால் அறிக.

தனத்திருக் கும்பொழு தாவிபின்
னே நுந் தமருமண் ணுந்
தனத்திருக் கும்ப மடவாரு
மெய்துவ ரோசயிலா
தனத்திருக் கும்பர னேரக
மேத்துஞ் சலந்தருவி
தனத்திருக் கும்பவ முந்தீரு
மெய்யிது சத்தியமே. 88

இ - ள்: தனத்து இருக்கும்பொழுது - பெரும் பொருளைத் தேடி அதன்மேல் நீங்கள் படுத்துக்கொண்டிருக்கும்போது, (மிக்க பொருளோடு இருக்கும்போது), ஆவி பின்னே - (இயமதூதர் வந்து உம்முடைய உயிரைக் கவர்ந்துகொண்டு இயமலோகம் செல்லுங்காலத்தில்) அந்த உயிரின்பின்னே (தொடர்ந்து), நும் தமரும் - உம்முடைய சுற்றத்தாரும், மண்ணும் - நிலபுலங்களும், இரு கும்ப தனத்து மடவாரும் - இரண்டு குடங்களைப் போன்று விளங்கும் நகில்களையுடைய மனைவியரும், எய்துவரோ - பிரியாமல் வருவார்களோ? (வரமாட்டார்களே), சயிலம் ஆதனத்து இருக்கும் - மலைகளைத் தமக்கு வசிக்குமிடமாகக் கொண்டு வீற்றிருந்தருளும், பரன் - மேலானவராகிய சுவாமிநாத சுவாமியினுடைய, ஏரகம் ஏத்தும் - திருவேரகத்தைத் துதிப்பீர்களாக, சலம் - துன்பமும், விதனம் - வியாகூலமும், தரும் திருக்கும் - உண்டாக்குகின்ற மாறுபாடும், பவமும் தீரும் -

பிறவிநோயும் நீங்கும், இது மெய் சத்தியம் - இது சத்தியம் சத்தியம் என்றவாறு.

" கூர்கொண்ட வேலனைப் போற்றும
லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு
போமன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரு மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு
வீர் நும் மறிவின்மையே."

எனவும்,

" பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல் வைத்த
வங்காரமு முங்கள் சிங்கார வீடு மடந்தையரும்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே."

எனவும் வரும் கந்தரலங்காரச் செய்யுள்களானும்;

" மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை [டே
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவம்
தனையாளவென்றும் பரலோகம் சித்திக்கும் சத்தியமே."

எனவும்,

" அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே"

எனவும் வரும் பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களானும் அறிக.

சத்திக் கராவை யகம்போற்று
மேரக தந்திபற்றுஞ்
சத்திக் கராவை யடர்த்தோன்
மருக சமர்செயவா
சத்திக் கராவை மலரம்பு
கொண்டுவந் தார்மதியஞ்
சத்திக் கராவை யிடையாட்கு
வேறின்று தாவரமே. 89

இ - ள்: சத்தி கரா - சத்திவேலைத்தரித்த திருக்கரத்தையுடையவரே, வையகம் போற்றும் ஏரக - நிலவுலகத்தோரால் புகழ்ந்து துதிக்கப்படும் திருவேரகத்தில் உள்ளவரே, தந்தி பற்றும் - கஜேந்திரன் என்னும் யானையைப்பற்றிய, சத்தி கராவை அடர்த்தோன் மருக - வலிய முதலையைக் கொன்றருளிய திருமாலின் மருகரே, சமர் செய - காமப்போரைச் செய்யும் பொருட்டு, இக்கு ஆர் - கரும்பு வில்லிலே பொருந்திய, வாசத்து - மணம் தங்கிய, ஐ மலர் அம்பு கொண்டு - ஐந்தாகிய மலரம்புகளைக்கொண்டு, வந்தார் - (மன்மதனுர்) வந்திருக்கின்ருர், அரா - பாம்பின் படத்தைப் போலும், ஐ இடையாட்கு - அழகிய அல்குலையுடைய இப்பெண்ணுக்கு, மதி அஞ்ச - அறிவு கலங்க, திக்கு வேறு இன்று - பற்றுக்கோடு வேறென்று மின்று, (ஆதலால்)வரம் தா - (வருந்தாதிருத்தற் பொருட்டு) வரத்தைக் கொடுத்தருளுவீராக என்றவாறு.

சத்திவேல் என்றது உமாதேவியார் குமாரக் கடவுளுக்குக் கொடுத்த வேலை. தந்தி-கஜேந்திரன் என்னும் யானை; இந்திரத்யும்நன் என்னும் அரசன் அகத்திய முனிவர் சாபத்தால் யானையாயினன். திருமாலை விடாமல் நாடோறும் ஆயிரந்தாமரை மலர்களால் அந்த

யானை அருச்சித்து வந்தது. அது ஒரு நாள் ஒருதாமரைப் பொய்கையில் பூப்பறிக்க இறங்கியது. முன்பு தேவல முனிவனால் சபிக்கப் பெற்று அங்கே முதலையுருப்பெற்றுக் கிடந்த கந்தருவன் யானையின் காலைப்பற்றிக் கௌவிக் கொள்ள யானை ஆதிமூலமே என்று ஒலிட்டது. திருமால் அதனை விடுவித்து அருள் செய்தார் என்பது வரலாறு. திக்கு - பற்றுக்கோடு; "திக்குவேறில்லை திருவுளமே" (அருணகிரியந்தாதி). இக்கு ஆர் ஐ மலரம்பு கொண்டு வந்தார்; இக்கு ஆர் ஐ - மன்மதன்.

தாதா ரகல வுடலம்பொய்
யென்றுண்மை தான்பெறவே
தாதா ரகல வடிவேல
வாசெழுந் தாமரைப்பா
தாதா ரகப்பொரு ளேயரு
ளேநின் சரணங்கரு
தாதா ரகம்புகு தாவே
ரகாநற் சிவாசலனே. 90

இ-ள்: தார் அகல - (கடப்பமலர்) மாலையைத் தரித்த மார்பையுடையவரே, வடி வேலவா - கூரிய வேற்படையைத் தரித்தவரே, செழும் தாமரை பாதா - செழித்த செந்தாமரை போலும் திருவடிகளை உடையவரே, தாரகம் பொருளே - பிரணவ மந்திரப்பொருளானவரே, அருளே - அருளே வடிவாக விளங்குபவரே, நின்சரணம் - உம்முடைய திருவடிகளை, கருதாதார் - எண்ணாதவர்களுடைய, அகம் புகுதா ஏரகா - மனத்தகத்துப் புகாத திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, நல் சிவாசலனே - நல்ல சிவசைலத்தில் வசிப்பவரே, தாது ஆர் அகல உடலம் - எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்டுள்ள பருத்த உடம்பு, பொய் என்று - நிலையில்லாது அழியுந்தன்மை உடையதென்று உணரும்,

உண்மைபெற - உண்மை (தத்துவ) உணர்ச்சியை அடையும்பொருட்டு, தா - கருணைசெய்தருளும் என்றவாறு.

தார் - மார்பிலணியும் மாலை; கடப்பந்தார் முருகவேளுக்குரியது. தாரகம் - பிரணவம். தாது-எழுவகைத் தாதுக்கள்; எலும்பு, தோல், இறைச்சி, உதிரம், மேதை, மூளை, சுக்கிலம் என்பன. தாது ஆர் உடலம்: " கால் கொடுத் தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை யார்த்துத், தோலுடுத் துதிர மட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை'' (நாவு - தேவா). ஆர்த்தல் - கட்டுதல்; யாத்தலின் யாக்கையாயிற்று: யாத்தல் - கட்டுதல். அகல உடலம் - தூல உடம்பு. உண்மை - தத்துவவுணர்ச்சி, மெய்யுணர்வு.

சலங்கண் டகனெனுங் காலன்கொண்
டெய்துஞ் சமயத்திற்சஞ்
சலங்கண் டகங்குழைந் தேசுற்றத்
தார்க டனித்தனியே
சலங்கண் டகநின் றிரங்குந்
துயரொழிப் பார்கள்சலஞ்
சலங்கண் டகவர விந்தமல்
கேரகஞ் சார்குவரே. 91

இ - ள்: சலம் - கோபத்தையுடைய, கண்டகன் எனும் காலன் - கொடியவன் என்று கூறப்படும் இயமன், கொண்டு எய்தும் சமயத்தில் - (உடலினின்று உயிரை வேறாகப் பிரித்துத் தன்னுடைய இயமலோகத்துக்குக்) கொண்டுபோகும் காலத்திலே, சுற்றத்தார் - மனைவி மக்கள் ஒக்கல் முதலிய சுற்றத்தார்கள் யாவரும், சஞ்சலம் கண்டு - இயம வேதனையைப் பார்த்து, அகம் குழைந்து-மனம் உருகி, தனித்தனியே - ஒவ்வொருவரும் தனித்தனியாக, சலம் கண்களில் நிறைய - கண்களில்

நீரானது நிறைந்து பெருக்கெடுக்க, நின்று இரங்கும் - நின்றுகொண்டு அழுகையொலியுடன் புலம்பும், துயர் ஒழிப்பார்கள் - துன்பத்தை நீக்கிக்கொள்ளும் வன்மை யுடையவராவார், (அவர் யாவரெனில்) சலஞ்சலம் - சங்குகளும், கள் தகு அ அரவிந்தம் - தேன் மிகுந்த அழகிய தாமரை மலர்களும், மல்கு ஏரகம் - நிறைந்த வளப்பம் பொருந்திய திருவேரகத்தை, சார்குவர் - சென்று சேர்ந்து சுவாமிநாத சுவாமியை வணங்கித் துதிப்பவர்கள் என்றவாறு.

சலம் - கோபம். கண்டகன் - கொடியவன்; கண்டகம் - முள் : முள்போலும் துன்பத்தைச் செய்பவன் என்னும் காரணக்குறி. சஞ்சலம் - துன்பம், வேதனை. இயம வேதனையாவது: ''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி, அலமந்த போதாக'' (சம் - தேவா) என்பது. சலம் - ஜலம், நீர்.

குவலைய வாவி திகழே
ரகாமணிக் கோவையின்வா
குவலைய வாவி யுழலுமென்
னெஞ்சன்பு கொள்வதென்றோ
குவலைய வாவித னந்தீர்க்கு
மான்மரு காகுற்றமோங்
குவலைய வாவிர வும்பிறப்
பாங்கங் குலகலவே. 92

**இ - ள் :** குவலையம் வாவி திகழ் ஏரகா - கருங் குவளை மலர்கள் பொருந்தும் தடாகங்கள் விளங்கும் திருவேரகத்தில் எழுந்தருளியுள்ளவரே, மணி கோவை - மணிகள் வரிசையாக வைத்துப் பதிக்கப்பெற்ற, வாகு வலய - தோள்வளையையுடையவரே, கு வலையம் - நில வுலகத்திலே, ஆ - பசுக்களுக்கு, விதனம் தீர்க்கும் -

(இந்திரனுல் பெய்விக்கப்பட்ட கல்மழையால் உண்டாகிய) துன்பத்தைப் போக்கி யருளிய, மால் மருகா - கண்ணபிரானுக அவதாரம் செய்த திருமாலினது மருகரே, குற்றம் ஓங்கு - குற்றங்கள் மிகுந்த, வலே அவா விரவும் - வலேயாகிய ஆசைகளால் உண்டாகும், பிறப்பு ஆம் கங்குல் அகல - பிறப்புக்களாகிய இருள் நீங்குதற்கு, வாவி - உலகமுழுவதும் தாவிச் சென்று, உழலும் - சுழலுகின்ற, என் நெஞ்சு-என்னுடையமனம், அன்பு அது கொள்வது என்ருே-உம்மிடத்து இடையருத பத்தி பூண்பது எந்தக்காலமோ? அறியமாட்டேன் எ-று.

குவலேயம்-கருங்குவளேமலர், நீலோற்பலம். வாவி - தடாகம், பொய்கை, குளம். கோவை - வரிசை. குவலேயம்-பூமியாகிய சுற்று; பரப்பு என்றபடி. விதனம்= விசனம் - துன்பம். வலே அவா: பண்புத்தொகை; உவமத்தொகையுமாம். கங்குல்-இருள். வாவுதல்-தாவுதல். அன்பு அது, அது பகுதிப்பொருள் விகுதி. கோவையின்; இன்: சாரியை.

கலங்காம னம்பு முலேவிழி
யாமங் கயர்மயலேக்
கலங்காம னம்புயன் போற்றிடு
மேரகன் கால்கடொழு
கலங்காம னம்புன் னெறியடை
யாம லெனக்கருதோங்
கலங்காம னம்புகி லேமென்
றியாங்கதி கண்டிடலே. 93

**இ - ள் :** மனம் - உள்ளமானது, புல் நெறி அடையாமல் - கீழானநெறிகளிலே சென்று கெடாதபடி, அம்- அழகிய, காமன் - கற்பகச்சோலேகளுக்கு அதிபதியாகிய இந்திரனும், அம்புயன் - தாமரைமலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவரும், போற்றிடும் ஏரகன் - துதித்து

வணங்கும் திருவேரகத்தில் உள்ளவராகிய சுவாமிநாத சுவாமியின், கால்கள் தொழுகலம் - திருவடிகளை (விதிப் படி) வணங்கினேமில்லை, கல் காமன் அம்பு மூலை விழி ஆம் - மலையும் மன்மதபாணமாகிய நீலோற்பல மலரும் (முறையே) நகில்களும் விழிகளும் ஆகின்ற, மங்கையர் - பெண்கள் மீது கொள்ளும், மயலை - காமமயக்கத்தை, கல் என கருதோம்-கல்லிவிடவேண்டுமென்று (சிறிதும்) எண்ணமாட்டோம், கலங்காமல் - மனம் கலங்குதலில் லாமல், நம்புகிலோம்-(நாங்கள் அத்திருவடிகளை உறுதி யாக) நம்பினேமில்லை, யாம் கதி கண்டிடல் என்று-நாம் முத்தியின்பத்தை அடைதல் எப்பொழுது என்றவாறு.

'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினையொழித்து மேலாம், நன்னெறி யொழுகச் செய்தல்' எப்பொழுது என்க. பின்னே நவையறு காட்சி நல்கல், என்னையும் அடியனுக்கல், இருவினை நீக்கியாளல் முதலியவெல்லாம் ஒல்லுமோ என்றபடி. கல் காமன்அம்பு முலை விழி: முறை நிரனிறை. கல்லுதல் - தோண்டுதல்; கல்: முதனிலைத்தொழிற்பெயர். கதி - முத்தி. கா மன் - இந்திரன், மன்மதன். மயல் - காமமயக்கம்.

கண்டக ரத்த மலர்நோக்
　　கசுரக் கயவரெனுங்
கண்டக ரத்தப னன்முன்
　　னிருளெனக் காசினியின்
கண்டக ரத்த திருவேர
　　காமுரு காகடம்பா
கண்டக ரத்தயில் வைத்தோ
　　யருள்வினைக் கட்டறவே. 94

இ - ள்: கண்-கண்கள், தகு அரத்த மலர்நோக்கு- நல்ல செவ்வரத்த மலர்போலும் சிவந்த பார்வையைச்

செய்யும், அசுரக் கயவர் எனும் கண்டகர் - அசுரர்களாகிய கீழ்மக்கள் என்று சொல்லப்படும் கொடியோரை, அ தபனன் முன் - அழகிய சூரியன் முன் எதிர்ப்பட்ட, இருள் என - இருள் கெட்டு அழிந்தொழிவதுபோல, காசினியின்கண் - பூமியில், தகர் - (தகர்த்த) பொடி படுத்தருளிய, அத்த - தலைவரே, திரு ஏரகா - திருவேரகத்தில் எழுந்தருளி விளங்குபவரே, முருகா - முருகக்கடவுளே, கடம்பு ஆர்கண்ட - கடப்பமலர் மாலை பொருந்திய கழுத்தை உடையவரே, கரத்து அயில் வைத்தோய் - திருக்கரத்திலே வேலாயுதத்தைக் கொண்டருள்பவரே, வினை கட்டு அற - என்னுடைய பந்தபாசங்களாகிய இருவினைக்கட்டுகளும் நீங்க, அருள் - அருள்செய்வீராக என்றவாறு.

அரத்தமலர் - செவ்வரத்தம்பூ. கயவர்-கீழ்மக்கள். அசுரக் கயவர்: பண்புத்தொகை. கண்டகர் - கொடியோர். தபனன் - சூரியன். காசினி - பூமி. தகர்த்தல் - பொடியாக்கல். முருகு - இளமை. கண்டம் - கழுத்து. அயில் - வேல். வினைக்கட்டு - இருவினைப் பந்தபாசங்கள்.

கட்டா மரைநொடிப் போதுநில்
லாதுசெல் காதலையிக்
கட்டா மரைபடுங் காலன்கை
யிப்பெருங் காயம்பற்றிக்
கட்டா மரையென வாணாளை
வீணிற் கழித்துக்கல்லோங்
கட்டா மரைநல் வயலே
ரகன்புகழ்க் கல்வியையே. 95

**இ - ள்:** கைபற்றி கட்டு - கையிலே அகப்படுத்திக் கட்டுகின்ற, ஆ மரை என - பசுவையும் மரை என்னும் விலங்கையும் போல, கட்டு அரை நொடி

போதும் நில்லாது - தடைப்பட்டு அரைநொடிப்பொழு தாயினும் நில்லாமல், செல் காதலை - பொருள்கள்மேற் செல்லுகின்ற விருப்பத்தை(யுடைய மனத்துடன்கூடி), காலன் - இயமனுடைய, இக்கட்டு - துன்பத்திலே கிடந்து, அரைபடும் - நசுக்கப்படும், இ பெருங்காயம் - இந்தத்தூலவுடம்பிலே, வாழ்நாளை - (உயிர் கூடியிருந்து) வாழ்கின்ற ஆயுட்காலத்தை, வீணில் கழித்து - பயனில் லாத வழிகளிலெல்லாம் (செலுத்திக்) கழித்து, கள் தாமரை - தேன்பொருந்தும் தாமரைமலர்கள் மலரும், நல்ல வயல் ஏரகன் - நல்ல வயல்களையுடைய திருவேர கத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிநாதசுவாமியினது, புகழ் கல்வியை கல்லோம்-கீர்த்திகளைச்சொல்லும் கல்வி களைக் கற்கமாட்டோம்; அங்ஙனமாக, நாம் எவ்வாறு உய்வோம் என்றவாறு.

இறைவணுகிய சுவாமிநாத சுவாமியினது பொருள் சேர் புகழ்களைக் கற்கமாட்டோம்;உயிர் இவ்வுடம்புடன் கூடிவாழும் வாழ்நாட்களை வீணிலே கழிப்போம்; அரை நொடிப்போதும் கட்டுப்பட்டு நில்லாது காதல் மனம் செல்லும்; இவ்வாறுக, நாம் எவ்வாறு உய்வோம் என இரங்கியபடி. ‘‘அரைநிமிட நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத, சடகசட மூடமட்டி ’’ என்றமையும் காண்க.

கல்லார வாவி திகழே
ரகன்மணிக் காருெழுது
கல்லார வாவினை வீடெய்த
வேகதி காட்டுமெய்ந்நூல்
கல்லார வாவி நிலையல
வென்று கருதிநெஞ்சாங்
கல்லார வாவி மலாவென்
றுரைத்திலர் கண்கசிந்தே. 96

இ - ள்: கல் ஆர் - மலைபோலும் (பல சன்மங்களிலே செய்து தொகுத்துத் தேடியுள்ள), அவாவினை - ஆசைகளால் உண்டாகிய நல்வினை தீவினைகளை, வீடு எய்த - விட்டுநீங்கித் தொலையுமாறு, கதி காட்டும் - முத்தியின்பம் (பெறுவதற்குச் சாதனமாயுள்ள வழிகளைத் தெளிவாகத்) தெரிவிக்கும், மெய்ந்நூல் கல்லார் - தத்துவ (உண்மை) நூல்களை (நல்லாசிரியர்பால் வழிபட்டுக்) கற்கும் புண்ணியமில்லாதவர், ஆவி - உயிர், நிலை அல என்று கருதி - (உடம்போடு கூடிவாழும் தன்மை) நிலையுடையதன்று என உறுதியாக எண்ணி, கல்லாரம் வாவிதிகழ்-நீலோற்பல மலர்கள் பொருந்திய தடாகங்கள் விளங்கும், ஏரகன் - திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிநாத சுவாமியினது, மணி கால் தொழுது - அழகிய (இரத்தினம் போலும் கிடைத்தற்கரிய) திருவடிகளைத் துதித்து வணங்கி, விமலா - மலரகிதரே, நெஞ்சு ஆம் கல் - மனமாகிய கல்லினிடத்தே, ஆர வா என்று - பொருந்துமாறு எழுந்தருளி வருவீராக என்று வேண்டி, கண் கசிந்து உரைத்திலர் - கண்கள் ஆனந்தக்கண்ணீர் பொழிய நின்று விண்ணப்பம் செய்திலர், ஐயோ! என்ன பாவம் என்றவாறு.

கல் ஆர் வினை - பல சென்மங்களிலே செய்து தொகுத்து மலைபோலும்குவிந்துள்ள நல்வினை தீவினைகள்; அவை சஞ்சிதமாம். பழவினைகளாகிய அந்தச் சஞ்சிதங்கள்: "பந்தித்த பாவங்கள் அம்மையிற்செய்தன இம்மை வந்து, சந்தித்தபின்னைச் சமழ்ப்பதென்னே"; "என் பழவினைநோய் ஆய்ந்தறுத்தாய்"; "பண்டை வல்வினை பற்றறுக்கும் வகை உண்டு சொல்வன் கேண்மின்"; "அண்ட வாணன்றன் ஆரூர் அடி தொழப், பண்டை வல்வினை நில்லா பறையுமே" (திருநாவு - தே).

"திணியா னமனே சிலைமீ துனதாள், அணியா ரரவிந் தமரும் புமதோ"; "நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந்

துருக'' என நெஞ்சைக் 'கல்' என அருணகிரிநாதசுவாமிகள் குறித்தமைகாண்க. 'கல்லேனு மையவொருகாலத்திலுருகுமென் கன்னெஞ்ச முருகவிலேயே' (தாயுமானவர் பாடல்). நெஞ்சமானது கல்போன்ற ஒரு கடினமான உருவப்பொருள் அல்ல வாயினும், அருள் வழிச்செல்லாமல் மருள்வழியையே நாடிச் சென்றுகொண்டிருத்தலின் 'நெஞ்சு ஆம் கல்' என்றார். நெஞ்சிற்கு வன்மையுண்டாதற்குக் காரணம் பிராரத்துவமாம் என்க.

ஆனந்தக் கண்ணீர் சொரிதல் முதலியன உண்மையடியார் மெய்ப்பாடுகள். இதனை, "என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட லிளகமன தழலின் மெழுகாய், இடையறா துருகவரு மழைபோ லிரங்கியே இருவிழிகள் நீரிறைப்ப'' (தாயுமா) என வருவனவும் பிறவும் காண்க.

சிந்து வணக்கணன் சேய்கணை
பாயத் தியங்கிக்கண்ணீர்
சிந்து வணக்க னுதல்விழி
போற்றுயர் செய்யமதி
சிந்து வணக்கவி பாடாளென்
றேகண்டு சென்றுளங்க
சிந்து வணக்கத் துடனே
ரகற்குரை செய்ம்மின்களே. 97

இ - ள் : சிந்து வ(ண்)ணம் க(ண்)ணன் - கடல் போலும் கரிய நிறத்தையுடைய கண்ணனாக அவதரித்தருளிய திருமாலினது, சேய் கணை பாய - குமாரனாகிய மதனவேளினுடைய மலர்ப்பாணங்கள் உடலில் தைத்தலால், தியங்கி கண்ணீர் சிந்துவள்-மயங்கிக் கண்ணீரைப் பெருக்குகின்றாள், மதி - சந்திரன், நக்கன் நுதல் விழி போல் - சிவபெருமானது நெற்றிக் கண்ணாகிய அக்கினி

யைப்போல, துயர் செய்ய - துன்பத்தைச் செய்தலால், சிந்து வ(ண்)ணம் கவி - சிந்து வண்ணம் முதலிய பாட்டுக் களை, உளம் கசிந்து பாடாள் என்று - மனமுருகிப் பாடு கின்ருளில்லை, என்று, ஏரகற்கு - திருவேரகத்தில் வீற் றிருந்தருளும் சுவாமிநாத சுவாமிக்கு, சென்று கண்டு - அவர் சந்நிதியிலே போய்த் தரிசித்து, வணக்கத்துடன் உரை செய்ம்மின் - (தோழிகளே) வினயத்துடனே விண் ணப்பம் செய்வீர்களாக என்றவாறு.

சிந்து - கடல். வண்ணம்=வணம், கண்ணன்= கணன்: தொகுத்தல். சேய் - புத்திரன். கணை - அம்பு. தியங்கி - மயங்கி. நக்கன் - நிர்வாணி. நுதல் - நெற்றி. சிவபெருமானுக்கு வலது கண் சூரியன், இடது கண் சந்திரன், நெற்றிக்கண் அக்கினி. சந்திர ஒளி காமுக ருக்குக் காமத்தை மிகுவிக்கும்; ஆகலின், சந்திரனை நெருப்பு என்ருள். சிந்து வண்ணம் என்பன பாடல் வகை. இறைவனிடத்து மிக்க மரியாதையுடன் சொல்லு மாறு தலைவி தோழிகள்பால் கூறுகின்ருள்.

களங்கண் டனமலை வேல்வளை
யாங்குழல் கார்வசனங்
களங்கண் டனமட வார்மால்
படிந்து கலந்தவருட்
களங்கண் டனமினி நெஞ்சேசும்
மாவொழி யாக்கருவாங்
களங்கண் டனந்திரு வேரகஞ்
சேர்ந்துய்வை கைதொழுதே. 98

இ-ள்: நெஞ்சே - மனமே, களம் வளை - கழுத்து சங்குபோலும், கண் வேல் - கண்கள் வேல்போலும், தனம் மலை - நகில்கள் மலைபோலும், குழல் கார் - கூந்தல்

மேகம் போலும், வசனங்கள் அம் கண்டு அன - சொற்கள் அழகிய கற்கண்டினைப்போலும் (என்று சிறப்பித்துச் சொல்லப்படும்), மடவார்-பெண்களது, மால் படிந்து - காமமயக்கமாகிய கடலில் முழுகி, கலந்து - அம்மடவாரோடு கூடி, அவர் உள் களம் கண்டனம் - அவர்கள் மனத்திலுள்ள வஞ்சகத்தை நன்ருக அறிந்தோம், இனி- இனிமேலும், சும்மா - பயனின்றிக்கழியும், ஒழியா கரு ஆம் - நீங்காத பிறப்பு ஆகிய, களம் கண்டனம் - இடத்தைக் கண்டோம் (ஆதலின்) திருவேரகம் சேர்ந்து - சுவாமிநாத சுவாமி எழுந்தருளியிருக்கும் திருவேரகத்தையடைந்து, கை தொழுது உய்வை - கைகளைக்கூப்பித் தொழுது உய்வாயாக என்றவாறு.

களம் - கழுத்து. வளை - சங்கு. கண்டு - கற்கண்டு. உள் களம்=உள் கள்ளம்: தொகுத்தல்; மனத்திலுள்ள வஞ்சகம். சும்மா = சும்மாது = மூச்சுவிடமுடியாமல்: என்றது மூச்சுவிடக்கூட நேரமின்றி என்க. ''சும்மாகஞ் சாவிலேயே தூளிடித்துத் தின்ருலும் தம்மாகஞ் சாவிலேயே தான்'' (அருணைக் கலம்பகம்). கரு - கருப்பம், பிறப்பு. களம் - இடம்.

மகளிரது உறுப்புக்களை வியந்து உரைத்துக்கொண்டு, காமமயக்கத்திலே முழுகியிருந்தும் அவர் வஞ்ச நெஞ்சத்தை நன்ருக அறிந்தோம். இனியும் பிறப்பிறப்புக்களில் செல்லாமல் சுவாமிநாதசுவாமி எழுந்தருளியுள்ள திருவேரகத்தைத் தொழுது மனமே உய்க என நெஞ்சிற்கு அறிவுறுத்தியது.

கைத்த வருக்க முளையம்பு
சாயக் களத்திடைப்ப
கைத்த வருக்க வசுரருஞ்
சூருங் கலங்குறத்து

கைத்த வருக்க னிகர்வேல
வேரக காதற‌னைக்
கைத்த வருக்கன்ப னுவதென்
• றுறிரு கட்பரனே. 99

இ - ள்: கை தவர் உக்க - கையிலுள்ள வில்லானது பொடிபடவும், முனை அம்பு சாய - கூரிய அம்புகள் ஒடிந்துபோகவும், களத்திடை - போர்முனையினிடத்து, பகைத்த - பகைமையை மேற்கொண்ட, வருக்கம் அசுரரும் - கூட்டமாயுள்ள அசுரர்களும், சூரும் கலங்குற - சூரபன்மனும் கலக்கத்தையடைய, துகைத்த-சவட்டிய, அருக்கன் நிகர் வேல - சூரியனைப்போலச் செவ்வொளி பரப்பும் வேற்படையை உடையவரே, ஏரக - திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பவரே, ஆறு இரு கண் பரனே - பன்னிரு திருக்கண்களையுடைய பரம்பொருளே, காதல் தனை - (மண் பெண் பொன் என்னும் இவற்றில் உள்ள) ஆசைகளையெல்லாம், கைத்தவருக்கு - வெறுத்தொழித்து நீங்கினவருக்கு (உண்மையான அடியார்களுக்கு), அன்பன் ஆவது என்று - அன்புடையவனுய்த் தொண்டுபூண்டொழுகுவது எக்காலமாம்; அடியார்க்கு அடியனுய் அடிமைத்திறம் பூண்டொழுகுமாறு அருள் செய்வீராக என்றவாறு.

தவர் - வில். உகுதல் - சிந்துதல், அழிபடுதல். முனை - கூர்மை. துகைத்தல் - சவட்டுதல். அருக்கன் - சூரியன். காதல் ஈண்டுப் பற்று. கைத்தல் - வெறுத்து ஒதுக்குதல்.

பரங்கிரி யார்திரு வேரக
வேலர் பரவுறுமும்
பரங்கிரி யாமற் கொடுஞ்சூரை
வென்ற பரமசொரூ

பரங்கிரி யார்மண் ணளந்தான்
மருகர்நம் பால்வந்திருப்
பரங்கிரி யாமுதற் சித்தியு
மீவர்பைம் பூதலத்தே. 100

இ - ள் : பரங்கிரியார் - திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியுள்ளவரும், திரு ஏரக வேலர் - திருவேரகத்தில் வீற்றிருந்தருள்பவராகிய வேலாயுதரும், பரவு உறும் உம்பர் - துதித்தலையுடைய தேவர்கள், இரியாமல் - கெட்டோடாமல், அங்கு - வீரமகேந்திரபுரத்தின் போர் முனையிலே, கொடும் சூரை வென்ற - கொடிய சூரபன்மனை அழித்து வெற்றிகொண்ட, பரம சொரூபர் - மேலான சொரூபத்தையுடையவரும், அம் கிரியார் - அழகிய மலைகள்தோறும் திருவிளையாடல் செய்தருள்பவரும், மண் அளந்தான் மருகர் - (மாவலியிடம் மூன்றடி மண்ணை யாசித்துப்பெற்று) விண்ணையும் மண்ணையும் ஈரடியால் அளந்த (மூன்றாவது அடிக்கு இடமின்மையால் அவன் வேண்டுகோளின்படி தலையின்மீது ஓரடியை வைத்துப் பாதலத்திலழுத்திய) திருமாலின் மருகரும், ஆகிய சுவாமிநாதசுவாமியானவர், நம் பால் வந்து இருப்பர் - நம்மிடத்தும் எழுந்தருளிவந்து இருப்பார், பை பூதலத்து - பசிய நிலவுலகத்திலே, அம் கிரி ஆம் முதல் சித்தியும் ஈவர் - அழகிய அணிமா முதலிய அட்டமாசித்திகளையும் நமக்குச் சித்தியாம்படி அருள் செய்வர் என்றவாறு.

திருப்பரங்கிரி திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்ட முதற் படைவீடாம்; திருவேரகம் நாலாவது படைவீடாமென அறிக. குன்றுதொறாடல் ஐந்தாம் படைவீடு.

**திருவேரக யமகவந்தாதி மூலமும் உரையும்**
**முற்றியது**

## வாழ்த்து

பார்வாழி யேரக வேலவன்
• வாழி பகர்கடப்பந்
தார்வாழி சேவற் கொடிவாழி
வேன்மயில் வாழிதக்கோர்
சீர்வாழி யந்தணர் வேதங்கள்
வாழி செழுங்குடியி
னேர்வாழி சைவ நெறியோர்கள்
வாழி யிசைபெறவே.

இ-ள்: பார் வாழி - உலகெலாம் வாழக்கடவன, ஏரகவேலவன் வாழி - திருவேரகமென்னும் சுவாமிமலை யினில் உறையும் வேற்படைக் கடவுளாகிய சுவாமிநாத சுவாமி வாழக்கடவர், பகர் கடப்பந்தார் வாழி-புகழ்ந்து சொல்லப்படும் கடப்பமலர் மாலை வாழக்கடவது,சேவல் கொடி வாழி - சேவலை எழுதிக்கட்டிய கொடியானது வாழக்கடவது, வேல் வாழி - அம்முருக வேள் கையில் தரித்து விளங்கும் ஞானசத்தியாகிய வேற்படை வாழக் கடவது, மயில் வாழி - குமாரக்கடவுள் ஏறிச்செலுத்தும் மயில் வாகனம் வாழக்கடவது, தக்கோர் சீர் வாழி - கல்வி அறிவு ஒழுக்கம் அநுபூதி முதலியவற்றை அடைந்துவாழும் பெரியோர்களுடைய கீர்த்திகள் வாழக் கடவன, அந்தணர் வாழி - அந்தணர்கள் வாழக்கடவர், வேதங்கள் வாழி - வேதங்கள் வாழக்கடவன, செழும் குடியின் ஏர் வாழி - வளம் பொருந்திய வேளாண் மக் களின் ஏர்த்தொழில் வாழக்கடவது, சைவ நெறியோர் கள் - சைவசமய நெறியிலே வழாதொழுகும் பெரி யோர்கள், இசைபெற வாழி - கீர்த்தியுண்டாக வாழக் கடவர்கள் என்றவாறு. ஏர்: ஆகுபெயர்.

கடப்பந்தார் முருகவேளின் அடையாளப் பூமாலை. சேவல் கொடி, மயில் வாகனம், வேல் ஞானசத்தி, வள்ளியம்மையார் இச்சாசத்தி, தெய்வயானையம்மையார் கிரியாசத்தி. சைவநெறி - சைவசமயமார்க்கம். பொதுவாகச் சைவநெறி என்றூர் சைவசமயத்தின் பிரிவுகளெல்லாம் அடங்குமாறு. இந்நூலாசிரியர் ஐக்கியவாத சைவராயினும் சைவ நெறியிலுள்ளார் யாவரும் வாழ்க என்றே வாழ்த்துக் கூறினர்.

திருச்சிற்றம்பலம்

---

திருச்சிற்றம்பலம்

இந்நூல்செய்த வேலையர் அவர்கள் மாப்பிள்ளையாகிய
கூறைநாட்டுத் தெற்குவீதியில் இருந்த
வித்துவான், சாமிநாதஐயர் இயற்றிய

## சிறப்புப்பாயிரம்

திருவளர்பூந் தடஞ்சூலவும் யோகவனத்
தமர்முக்கட் டேவன் மீது
மருவளர்நற் றொடைத்தமிழ்மும் மணிக்கோவை
யுலகுவப்ப வணிந்தான் காவிற்
கருவளரம் புயல்சூழும் கவித்தலம்வாழ்
வீரசைவக் கடலிற் றோன்றுந்
தருவளர்திண் புயப்பானு நிகரெழில்வே
லையனெனுந் தமிழ்ச்சிங் கேறே.

செந்திருவா ழேரகற்கோர் யமகவந்தா தியும்பழு
செல்வற் கோதும் [வைச்
பைந்தமிழ்மான் மியமொடுமும் மணிக்கோவை
கழிநெடினற் பாவு மம்மைக்
கந்தமுறு மாலையுஞ்சொற் றனன்வீர
சைவகுலத் ததிப னுன
சுந்தரஞ்சேர் சிவப்பிரகா சையனருள்
வேலைய தூய்மை யோனே.

---

இவை பழைய பதிப்பிற்கண்டவை; பதித்தகாலம் கி. பி. 1869.

உ

# செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்]


| | |
|---|---|
| அகலவியா | 62 |
| அஞ்சங்கரி | 32 |
| அலையமரு | 61 |
| இலங்காதிப | 60 |
| எண்டந்த | காப்பு |
| கடகரடக் | 69 |
| கடக்காரி | 86 |
| கடந்தவ | 8 |
| கட்டாமரை | 95 |
| கண்டகரத் | 94 |
| கண்டஞ்ச | 28 |
| கண்ணனை | 51 |
| கதிகாவிரி | 73 |
| கத்தானக | 66 |
| கத்திக்கத் | 42 |
| கந்தரங் | 6 |
| கந்தனந்த | 46 |
| கந்தனந்தா | 85 |
| கயவானன | 72 |
| கரவாக | 39 |
| கருமங்கு | 47 |
| கலங்காம | 93 |
| கல்லாரவா | 96 |
| கவலைக்குள | 58 |
| கவிக்குஞ் | 26 |
| களங்கண்ட | 98 |
| களவனை | 43 |
| கனகங்களி | 49 |
| கனகாசல | 70 |
| கனந்தங்க | 56 |
| கனவாகவி | 41 |
| காசிக்கு | 87 |
| காயந்திய | 29 |
| காரகலா | 7 |
| காரணங்கா | 50 |
| காலனஞ்ச | 40 |
| காலாயுதங் | 71 |
| காவலரிக் | 27 |
| காவலவா | 48 |
| காவாசனன | 57 |
| குகனகமா | 38 |
| குவலையவா | 92 |
| கைத்தவரு | 99 |
| சத்திக்கரா | 89 |
| சமனமரா | 80 |
| சலங்கண்ட | 91 |
| சிகரவளை | 59 |
| சிந்துவணக் | 97 |
| தகரவரிக் | 65 |
| தத்துவந்தா | 78 |
| தந்தந்தன | 82 |
| தருமாவித | 22 |

| | | | |
|---|---|---|---|
| தவந்தனே | 63 | பூவையம் | 1 |
| தவரவர | 67 | மலைக்குமரா | 34 |
| தவராகம | 30 | மனவாரண | 35 |
| தவனந்தரு | 83 | மாதரவந் | 12 |
| தனத்திருக் | 88 | மாதனந்த | 37 |
| தனம்பூசி | 81 | மாலைய | 13 |
| தாதாரகல | 90 | மானத்த | 10 |
| தாரகலாத | 24 | மானவராக | 68 |
| தாராதன | 79 | முகமனந்த | 84 |
| தானவன | 23 | வந்தவிரா | 11 |
| திக்குமதி | 2 | வந்தனே | 4 |
| திருக்குமதி | 53 | வருந்தாம | 44 |
| தேகாலைய | 31 | வரையானை | 9 |
| படவரவந் | 76 | வனகமன | 55 |
| படிகடந் | 21 | வனந்தந்த | 5 |
| பணியக்கர | 75 | வாசமனஞ் | 52 |
| பதஞ்சலி | 19 | வாரமருந் | 54 |
| பத்திரமாக | 18 | வாரிக்குவலை | 45 |
| பரங்கிரி | 100 | வானவனந் | 36 |
| பரவச்சிர | 64 | வானுகமாலை | 14 |
| பாதகமல | 20 | வித்தகரஞ் | 16 |
| பார்வாழி | வாழ்த்து | வினையக்கர | 15 |
| பாலிக்குமரி | 77 | வேகமடங்க | 25 |
| புவனங்கடா | 33 | வேதாகமஞ் | 74 |
| புவனந்தின | 3 | வேலையிலங் | 17 |

4A
3-61